உ

சிவமயம்.

தெய்வீகத்தன்மைபொருந்திய

# அகஸ்திய முனிவர்

அருளிச்செய்த

# வயித்திய காண்டம்

## பாண்டுவைப்பு-600.




சென்னை

வித்தியா ரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பித்தது.

இதன் விலை] 1935. [[illegible])-- 1A.

உ

சிவமயம்.

# பொருளடக்க அகராதி.


| பெயர். | பக்கம். |
|---|---|
| அப்ரேக் லக்ஷணசுத்தி | 5 |
| அப்ரேக் செந்தூரம் | 6 |
| அயமண்டூரச் செந்தூரம் | 7 |
| வாய்வுமுதலான வியாதிகளரிய | 9 |
| கர்மநிவர்த்திநூல் அவிழ்தம் | 10 |
| காந்தசெந்தூரம் | 11 |
| ஜன்னி 13-க்கு மாத்திரை | ,, |
| மாத்திரைகள்பண்ண சரக்குகள் சுத்தி | 12 |
| பாண்ட உப்பு குரு | 13 |
| சிந்தாமணிக்குளிகை | 14 |
| இராமபாண சக்கிரபாணிகுளிகை | ,, |
| பகீரதி அக்கினிக்குளிகை | 15 |
| ஆனந்த பயிரவக்குளிகை | ,, |
| சஞ்சீவிக்குளிகை | 16 |
| குப்பியில்வைப்புக்குப் புத்தி | 17 |
| வாதராட்சசக்குளிகை | ,, |
| வியாதியெல்லாந்தீர மதனப்பூச்சூரணம் | 19 |
| தங்கபற்பம் | 24 |
| வெள்ளிபற்பம் | 25 |
| முத்துபற்பம் | ,, |
| பவளபற்பம் | 26 |
| வங்கபற்பம் | ,, |
| வங்கபற்பம் | 27 |
| பற்பங்கள்நிறம் | ,, |
| வயித்தியருக்குப் புத்தி | ,, |
| தயிலப்பேர் | 28 |
| தயிலபாகந் தப்பிவருங் குறிகள் | ,, |
| பூஜைசகுண மகத்துவங்கள் | ,, |
| காமகேசரிக்குளிகை | 30 |
| விஷநீரால் வரும் வியாதிகள் | 33 |

| பெயர். | பக்கம். |
|---|---|
| வயித்திய சாஸ்திரங்கள் | 35 |
| தேசாக்ஷரி பூபதிமாத்திரை | 38 |
| வெள்ளை ரசகற்பூரம் | 40 |
| நூல்பார்க்கப்புத்தி | 42 |
| நீலகண்ட வாலை ரசகற்பூரம் | 43 |
| அனுபானக்குழம்பு | ,, |
| கற்பூரம் கூட்டிக்கொள்ள மூதண்டச்சூரணம் | 44 |
| வயித்தியனுக்குப் புத்தி | 45 |
| மோக்ஷத்துக் கெய்தும்வழி | 46 |
| பாண்ட ரசகற்பூரம் | 48 |
| காமகேசரி குளிகையின் சரக்குச்சூரணம் சிவன் சூரணம் சத்தியின்பெயர் | 49 |
| இந்நூல் கைம்முறை குருநூல் போதுமென்பது | 51 |
| கெங்காசல குப்பியில் செந்தூரங்கள் வைக்க சுத்தி | ,, |
| குப்பிவைப்புச் செந்தூரம் | 52 |
| குப்பிவைப்புச் சவ்வீரம் | 54 |
| கொச்சி சவ்வீரஞ் சடாதார செந்தூரம் சத்தி செந்தூரம் பற்பம்சிவம் | 56 |
| சடாதார மாத்திரை | ,, |
| அனுபான பஞ்சகெவிய லேகியம் | 57 |
| மேகத்தால் வரும் வியாதிகள் | ,, |
| பஞ்சகெவிய லேகியத்துடன் கொள்ளும்பற்பம் செந்தூரம் | 58 |
| நோயில்லாமலிருக்கும்வழி | 59 |
| கருமவினையால்வந்த வியாதிதீர உபாயம். | ,, |

| பெயர். | பக்கம். |
|---|---|
| சடாதாரசெந்தூரம் பஞ்சகெவி யலேகியம் | 60 |
| பவளபற்பம் | ,, |
| பவளபற்பம் | ,, |
| வங்கபற்பம் வெள்ளிபற்பம் | 61 |
| பித்தமேகத்தால் வரும் வியாதி | ,, |
| சந்தனுதித்தயிலம் | 70 |
| தளசெந்தூரம் | 76 |
| சாதிலிங்கச் செந்தூரம் | 79 |
| வலிசன்னிகள் விபரம் | 80 |
| குமரகண்டன் வலிநிதானம் | ,, |
| நமரகண்டவலி நிதானம் | ,, |
| பிரம்மகண்டவலி நிதானம் | 81 |
| காகவலி நிதானம் | ,, |
| முசலகண்டன்வலி நிதானம் | ,, |
| வலி சன்னிகளில் சாத்ய அசாத்ய நிதானம் | ,, |
| விஷமுட்டித்தயிலம் | 82 |
| வல்லாரை நெய்கிருதம் | 83 |
| பெரும்பாட்டுக்குமருந்து | 86 |
| பெரும்பாட்டுக்குப் பூப்பட்டை தயிலம் | ,, |
| முசுவாக்கினி லேகியக்குழம்பு | 87 |
| சவர்க்காரலேகியக்குழம்பு | 88 |
| மருந்துண்ணு மாதம் | 89 |
| வயித்தியம் பலிக்கமந்திரம் | ,, |
| குடல்வாய்வின்குணம் | 90 |
| பக்கவாய்வின்குணம் | ,, |
| விக்கலுக்குமருந்து | ,, |
| சன்னிமூர்ச்சைக்குக் கலிக்கமா | ,, |
| கலிக்கமை நசியம் | 91 |
| சன்னி விஷங்களுக்கு வீராஜன் குழம்பு | ,, |
| ருத்திராங்கதயிலம் | 92 |
| அமிர்தசஞ்சீவி சூரணம் | 94 |
| அமிர்தசஞ்சீவி லேகியம் | 95 |
| விஷநோய்க்கு அமிர்தசூரணம் | 98 |
| வயித்தியசாஸ்திரங்கள் | ,, |
| வாத பித்த ஐய மேக முதலாகிய வியாதிவருங் குறிகள் | 99 |
| மருந்துகொள்ளும்போது பத்தியம் | 100 |
| மேகாசாங்கத்தயிலத்தில் சேர்மானம் | ,, |
| குழந்தைகள்கணம் 8 - க்கும் விபரமும் மருந்தும் | 101 |
| உப்புபற்பம் | 102 |
| பாஷாணந்தின்னவர்க்கு முறிப்பு மருந்துகள் | 104 |
| நோய்களும் புத்திகளும் குறிப்பு | ,, |
| சர்வபூபதிமாத்திரை | 107 |
| இன்னூல்வெளிப்பட்டவிபரம் | 110 |
| வாதசாஸ்திரத் தொகைகள் | ,, |
| வயித்தியசாஸ்திரத்தொகை | 111 |
| பாபிகளுக்கு நூலீயவேண்டாமென்பது | ,, |
| நூல்கொடுக்கப்புத்தி | ,, |
| வாசியோகப்புத்தி | 112 |
| நூல்சூத்திரங்கள் | ,, |


அகராதி முற்றிற்று.

உ

கணபதிதுணை.

# அகஸ்தியமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# வயித்தியகாண்டம்

## பாண்டு வைப்பு 600.

காப்பு.

கருணைதருமைங்கரனே காப்புவாணி
கலந்திந்தசூத்திரந்தான் கருவாய்ப்பாடத்
திருவுமையாள்மனோன்மணித்தாய் செப்பக்கேட்டு
தெளிந்தகுருநூலாகத் திரட்டிப்பாடக்
குருமகிமைசித்தியுண்டாம் ஞானம்வாய்க்கும்
குருபரனேநிதிமருந்துங் கூடுங்கூடும்
பெருமைமிகக்கீர்த்தியுண்டாஞ் சித்தர்க்கெல்லாம்
பெருநூலைக்குறுக்கியிந்த அறுநூறுதானே. 1

தானென்றஞானமுதல் வாசியோகந்
தவறுதுவாசிமுதல் வயித்தியமுஞ்சித்தி
வானென்றசிவயோகம் போதங்காணும்
வயித்தியத்துக்கிதுவுயிர்காண் மருந்தின்வேகம்
நானென்றவாணவமு மாசைதள்ளி
நடந்தாக்கா லிந்நூலின்மகிமைமெத்த
தேனென்றபாற்கடலுங் கருப்பமாகும்
திரட்டியொருகட்டியாய்த் தெளிந்தகாப்பே. 2

நூல்.

### வழலைப் போக்கு.

தெளிந்தபெருநூலெல்லா மாடிப்பார்த்துஞ்
செப்புகிறேனிதற்குள்தான் வழலைப்போக்கு
பொளிந்தமழையுவர்க்காட்டிற் சலத்தைப்பார்த்தால்
புல்லன்றிச்சிவந்திருக்கும் பூமிநாதங்
களிந்துமழைமீனமேடப் பனியிற்பாரு
கதிர்கதிராய்ப்புல்லையொட்டிப் படர்ந்துபூத்து

அளிந்தமழையிடயிலேதான் பெய்யமுன்பே
யப்பனேபூவையெல்லாம் வாரிக்கொள்ளே. 3

வாரியதைப்பழுதின்றிப் பாணைதன்னில்
வரிசையாயாறரைதா னளந்துபோடு
கோரிவிடுயமுரியதில்பன் னிரண்டுபடிதான்
கொட்டியதைத்கட்டிநன்றாய்க் கரைத்துக்கொண்டு
ஊரிவிடுமுரிசைபெற்ற வுப்பதொன்று
வுறவோடுமுன்மருந்திற் கலக்கிக்கொண்டு
பாரில்நின்றகல்லதுதான் துய்யவெள்ளை
படிகம்போல்நுறுக்கியதைச் சுத்திகேளே. 4

சுத்திசெய்வாயமுரியினா லுவரதுதானென்று
சுருளவொருபாணைதனிற் கல்லும்போட்டு
வத்திநன்றாய்க்குழம்பான பருவந்தன்னில்
வாரியதையமுரியினால் கழுவிக்கொண்டு
சித்தியாங்கரியிலிட்டு ஊதச்சுன்னஞ்
சீக்கிரத்திலாறுமுன்பே படிதானென்று
பத்தியாய்முன்மருந்தில் தன்னில்போட்டு
பார்மகனேகழிகொண்டு கிண்டுகிண்டே. 5

கிண்டிநன்றாய்மேல்மிதந் தரித்துப்போடு
கீழ்ப்பாணைதூருக்குள் ளூறையுமுன்னே
கண்டுமெள்ளமறுபாண்டத் திறுத்துநன்றாய்க்
கடுரவியினாலாறு நாறோட்டில்வார்
பண்டுவிட்டயமுரியெல்லாம் வற்றினாக்கால்
பார்மகனேகத்தபனீர்ப் படிதானாறு
சுண்டவொருபாண்டத்தில் விட்டுமேதான்
சுகமானமுப்பூவு மதிலேபோடே. 6

போட்டதனைக் கிண்டிநன்றாய்த் தேய்த்துத் தேய்த்துப் பொடி யில்லா தடிகரைத்து மறுநாள்கேளு, மாட்டதனை மத்தாலே கடைந்து வுப்பாய் மறுபாண்டந் தெளிந்திறுத்து மத்தாற்கிண்டி, யாட்டதனை மூன்றுநாள் தெளிந்துவாங்கி யழகான காறோட்டில் வற்றினாக்கால், மூட்டதனை வஸ்துவுநாற் படிதான்கேளு முக்காலா மிருமுக்கால்மூட் டுவாயே. 7

மூட்டுவாய் முன்னிவந்தக் காரேட்டிற்றான் முங்கவிட்டுக் கரைத்துரவி யுலர்த்திக்கொண்டு, காட்டுவா யறுவகைநீர்ச் சாரநீருங் கலந்துசமன் காரேட்டில் வைத்துக்கொண்டு, சூட்டுவாய் வீரம் பூரமும் பீசம் சுகமான வெண்கருவும் வற்கப்பாலும், கூட்டுவாய் கழஞ்சியொன்றாய்க் கூட்டிமத்தி குரும்பரே தயிர்போலாம் சிவந்தநீரே. 8

நீரைவிட்டுக் கல்வத்தி லுலர்ந்தபூவை நிறுத்திடுவாய் மூன்றுபலமைபோலாட்டி, காரமிட்டாற் காரமுண்டாஞ் சாரமாகுங் கடுவேகி வீரம்பூரம் வெள்ளையாகுந், தூரவிட்டா லாகுமப்பா தருசுவேகந் துகையாறும் வகைக்குக்காற் பலமேதூக்கிச், சீரைவிட்டா லாகாது மருந்து லொன்றுஞ் சீனம்வெட்டி யுப்பைவிட்டாற் சீறும்பாரே. 9

சீறுது சீனயெடை பலமுமுக்கால் சினந்தவெடி யுப்பொன்று சிமிட்டுமெத்த, பேருது யமுரியுப்புப் பலந்தானொன்று பிலமூலியுருவிரிப்பு பலமுங்கால்தான், யாருது வண்டமொடு சிப்பிச்சுண்ண மப்பனே முத்தானுப்பு மூன்றுமுக்கால், பாருது யுரம்புழுகு கழஞ்சிரண்டு பருத்தகுரு வண்டினமுட்டை கழஞ்சொன்றாமே. 10

ஒன்றாகச் சேகரித்து மருந்துபதினாறு வுத்தமனே பூரணமா முயர்த்திமெத்த, நன்றாகக் கலுவத்தில் மருந்தோடிட்டுநலமான யிருநீராற் றயிராலாட்டி, குன்றாமல் வற்றவற்ற விட்டுஆட்டி குழம்பாகி யிறுகிவரும் பருவந்தன்னில், நன்றாக வழித்துவடை வில்லைசெய்து நட்பிலே ரவிமுகத்திற் றிருப்பிவையே. 11

வைத்தவில்லை யுலர்த்திநன்றாய் நயப்புத்தீர்ந்தால் வரிசையாய்ச் சட்டிரண்டு வாங்கிவந்து, வுத்தான நீர்தெளித்து நீரசதாக்கி ஒருசட்டி தனிற்பொடியை பாத்திக்கொண்டு, தைத்தவிரலாலமுக்கி யுவர்ப்பூபாதி கலுவத்திற் பொடித்திட்டுக் கையாற்செம்மி, யத்தவில்லை தனைவைத்துப் பூமேலிட்டு யதின்மேலு நீரிட்டு அடைத்துமூடே. 12

மூடிசட்டி சந்துவாய் சீலைமண்செய் முக்கியமாய் வாலடுப்பிலேற்றுகோங், கூடிவருங் கரணயோகம் பக்கவாரங் கொள்ராசி பகைநாள்கள் குறிப்பாய்பார்த்து, நாடிவருஞ் சிவகாமி யென்றால்பூசை நலமான வைரவர்க்குச் சித்தர்மெய்க்க, தேடியொரு விரகாலே தீபம்போலே சிறுகெரித்து மறுசாமங் கமலமாமே. 13

ஆமப்பா மறுசாமம் திரும்பரெட்டி யமர்த்திவிடு சாமமூன்று அல்லல்வேண்டாம், வேமப்பா வாசனையா வெளுக்கும்வில்லை வெந்த சட்டி வாகுமுன்னே யிறக்கிடாதே, போமப்பா தரித்திரம்போ மருந்

துஞ்சித்தி புலத்தியனே கருக்களெல்லா மொளிக்கவில்லை, நாமப்பா செய்தவித்தை சொல்லிப்போட்டே னூட்டிலே யிந்நூல்தா னடக் கொணுதே. 14

ஒண்ணுன வில்லையொடு வெளுத்துதானல் ஓகோகோ தொட்ட சாக்கெல்லாம்பொன்னும், கண்ணுன வில்லைசற்றே கறுத்ததானல் கல்வத்தி லிட்டுவில்லை யரைக்கக்கேளு, பெண்ணுணுந் தயிர்சலத்தா லரைக்கும்போது பேய்மக்காள் வெடியுப்பு சுன்னமொன்று, பண்ணுன வஸ்துவினல் காரேட்டில்தான் பதணமா யிருந்தமுப்பு பலந்தான் போடே. 15

போட்டுஅறு சாரநீர் தயிராலாட்டு புலத்தியனே யடிமுடியில் வெடியுப்பாஞ் சுன்ன, மாட்டுமந்த வெடியுப்புச் சுன்ன மானு லதிகமடா கடைச்சாக்கு கூட்டிப்போடு, மாட்டியிதை யரைத்துநன்ருய் லேசாய்த்தட்டி மறுசட்டி தனில்முன்போல் வைத்துமூடி, கூட்டிமுந்தி முச்சாம மெரித்துவாங்கு குப்பெனவே வெளுத்துநிற்குங் குருவுமாமே. 16

குருவானல் சித்தெல்லா மாடலாங்கேள் கொடுத்தசாக் கேதினிலுங் குருவேயாகும், குருவானல் சாக்கெல்லா முருகியாடுங் குருமெழுகாஞ் செந்தூரப் பாலுநீராம், குருவாலே யிலைநீராங் குளிகையாகுங் கொடுத்திடைக்கு வீரமிடில் பற்பமாகும், குருவாலே தொட்டதெல்லாங் குபோன்வாழ்வு கொடுத்தலோகங்களெல்லாம் பொன்னுமாமே.

ஆகுமே வயித்தியத்துக் கெல்லாமாகு மப்பனே வுயிரைவிட்டா லுடலென்செய்யும், வேதுமே நீற்றினத்துக் கெல்லாங்கூட்டு வித்தகனே செந்தூரிக்கக் குருவும்வேணும், சாகுமேவெள்ளையினற் றுஞ்சுநீராஞ் சண்ணுமடா கெந்தகமு முருகியாடும், போகுமே தயிலத்தில் புகுந்துதானல் போட்டிட்டால் வியாதியெல்லா மொழிந்துபோமே.

ஒழிந்துபோ மாத்திரைக ளரைக்கும்போது வுத்தமனே முப்பூவே கூடிற்ருனல், அழிந்துவிடும் வியாதியெல்லா மகன்றுபோகும் அரகா லேகியத்திற் சாரமிட்டால், குளிந்துவிடு மேகமெல்லா மோடித்தேகங் கூட்டுகின்ற சூரணத்திற் கூடப்போடு, கழிந்தவாசி யுட்புகுந்து கற்பத்தோடே கலந்துவிட யோகிகட்குங் கருப்புநீரே. 19

கருவான முப்பூவைச் சொல்லிப்போட்டேன் களங்கமிதி லில்லையப்பா யிதுவேயாதி, பெருவாய்க்கு நெருப்பிடாதே யிந்தநூலைப் பே

ணிவைத்து ரகசியமாய்ச் செய்துக்கொண்டு, குருவாய்க்குத் தொழிலை யெல்லாங் கெடுத்துப்போட்டு குடித்தவெறி யாலலைக்குங் குறும்பா மெத்தத், திருவாய்க்குச் சிதம்பாமுங் கூடிற்றானல் தெவிட்டாத வமிர்தமடா திறமுப்பூவே. 20

முப்பூவே யில்லாமல் குருவுமில்லை மூடரப்பா செய்ததொழில் பொய்யாய்ப்போகும், செப்பார்கள் வழலைமுப்புப் பெருநூலெல்லாஞ் செப்பினதிற் கருவறிந்து செய்யமாட்டார், தப்பாம லிடைபாகஞ் சாக்குரீறுந் தாக்கியரைத் தீயெரிவு மறிந்துகொண்டா, லப்பாகேள் முப்பூவே யாதியாதி யலையாதே வயித்தியத்துக்காசனுமே. 21

ஆமடா ரசவாதம் பெருமையல்ல யவன்வயிறு வளர்ப்பதெல்லால் மற்றோர்க் கியானுங், தாமடா புனைத்ததினல் முத்தியேது சகலருக்கும் நோய்கள்வந்தாற் றீர்த்தால்முத்தி, போமடாவழலைதொட்டால்வியாதி யெல்லாம் பொறிபட்ட பஞ்சதுபோற் பொறுமிநீறி, நாமடா வியாதி கட்கு மருந்துசொன்னேம் நலமான வழலைவிட்டா லிலைவுதானே. 22

## அப்பிரேக லட்சணசுத்தி.

அலையாதே அப்பிரேகஞ் சொல்லக்கேளு அவனிதனில் நாலுவர்ன மதிகமாலாம், நிலையாதே கிருஷ்ணவர்ணம் வியாதிக்காகும் நேர்ப்பாக பிரற்கனமாய்ப் பலகைபோலே, யுலையாதே யெருவடுக்கி யதன்மேல் வைத்து யுத்தமனே மறுபடியு மெருவால்மூடி, மலையாதே தீமூட்டிப் புடந்தான்வெந்து வரையறுவா யாறுமுன்னே வகைசொல்வோமே.

வகையான தாழியொன்றி லாடுமாடு மனிதருட யமுரியுட னன் றுய்ச்சேர்த்து, புகையாறி வெந்துபழுத் திருக்கும்போது புலத்தியனே குறடுகொண்டு யெடுத்துமெள்ள, தகையாதே தாழிக்குள் ளமுக்கிரெம் பத்தாளிவாய்க்கு மறுசட்டிக்கவிழ்த்துமூடி, திகையாதே பசுத்தொழு வில்புதைத்து வைப்பாய் திரும்பவதை மண்டலந்தான் சென்றுவாங்கே.

வாங்கிமெள்ள சலத்தூசி யலம்பிப்போட்டு வளரவியி லுலர்த்தி சாத்தா யிடித்துவாரி, வோங்கியொரு தாழியுள்ளே வருகுஞ்சுன்ன மோகோகோ யமுரிபடி மூன்றுள்ளேகொட்டி, நீங்காம லடுப்பேற்றி யெறித்துவற்றி நிர்மலமா மப்பிரேகஞ் சுத்தியாச்சு, பாங்காகும் பற்ப முதற் செந்தூரமாகும் பளிச்செனவே யீயமுமா முருக்கச்சத்தே. 25

## அப்பிரேக் செந்தூரம்.

சத்துவருஞ் சத்தியினல் வியாதிதீருஞ் சண்டாள வூரற்ருன் சொன்னமாகு, மொத்துநின்றவப்பிரேகஞ்செந்தூரிக்கவொருமூன்று பலமெடுத்துக் கொண்டால்கட்டி, யத்துநின்ற வறுமாற்றுக் காடியாறி லழகான பழம்புளியாய் படிகாலாக, முத்துப்போற் றெளிவதிலே வதையுஞ்சேர்த்து முனையான காரங்கால் பொடித்துத்தூவே. 26

பொடித்தவப் பிரேகந்தனில் நெல்லும்போட்டுப் புதுக்கோணில் நெகிழ்ந்திருக்கக் கட்டிக்கொண்டு, திடித்து நன்ருய்க் காடியிற்கு ளமர்த்திமெள்ள பிசைந்துகையா லுறவாகுமட்டுந்தேய்த்து, வெடித்து கோணில் நெல்லுமியும் விழுக்கொண்ணுது வெண்ணெய்போ லப் பிரேக முறையுமட்டும், குடித்தகாடி கொப்பளித்துத் தெளியும்போது குழுகுமென யிறுத்திடாதே மெள்ளச்சாயே. 27

சாய்த்துறைத்த நவநீதம் வழித்துச்சட்டி தனில்பரப்பிக் காய்ந்த பின்பு கலவத்திட்டு, வேத்துருத்திச் சுத்திசெய்த கெந்திநேரும் விசை யான நவநீதத்தில் மிளகுபாதி, பார்த்து நன்ருய் நிறுத்திட்டு வர்க்கம் பாலால் பசுவின்வெண்ணெய் போலரைத்து அடைபோல் பண்ணி, யாத்திநன்ரு யுலர்த்திக ணீரிட்டாக்கா லப்பனே காட்டெருவில் புடத்தைப்போடே. 28

புடம்போட்ட அப்பிரேகங்கண் டெடைக்குசுக்கு பேருகநாலி லொன்று வெட்டிச் சேர்த்துத், திடம்பெறவே வர்க்கம்பால் தன்னு லாட்டித் திரும்பியுமே யடையுலர்த்திப் புடத்தைப்போடு, நடம்புரிந்த புடமாறி யெடுத்துப்பின்பு நாலிலொன்று திப்பிலிசேர் தர்க்கம்பாலா, லுடம்பிலக்கி யரைப்புடமா யாறிப்பாரு ஓகோகோ துணுக்கெல்லா மற்றுப்போமே. 29

அத்துபோ மரசாலின் பட்டைநவ் வலத்தியித்தி யைந்துமதப் பாதறித்திடித்து, சுத்தகண்டா முடாவிவிட்டு துணிசலம்விட்டுச் சுருதிபெயத் தீயெரித்துச் சோடசத்தொன்ருக்கி, வத்திநின்ற பருவ மதில் புளித்திடாமல் வரிசையாக் கியாழமதைப் புகைத்தடுப்போட் டும், அத்துநின்ற மப்பாகங் கியாழம்விட்டு அரைத்துஅடை வில்லை செய்து வுலர்த்திடாயே. 30

முறையோடே யரைத்துலர்த்திப் புடமூன்றுபத்தில் முறுக்கம்பூ நிறமாகு மூலவாய்வு, யறையான வப்பிரேக மற்றதில்லை சுத்தியான திரிகடு கதனுலாற்று, விடுந்துவைக்கு துறையான துரைகளெல்லாஞ் சொன்னதிந்த துலவுடத் தேனிலிடு மேகமிருபத்தும், பறையாதே

மூதண்ட மாவரையும்வெண்ணெய் பாலமுர்த சக்கரையில் பணந்தான் கொள்ளே. 31

கொண்டுவிடு மண்டலந்தான் குடிபோச்சையா கூட்டோடே மேகமுதல் வாய்வுபத்தும், கண்டுடனே யேகிவிடும் மூலவாய்வு கனக மிதற்கீடல்ல காட்டொணுது, பண்டுள்ள வரும்பதுதான் மண்வெட் டிக்கொழுவை பறக்குலேயி லூதிநன்ருய்ப் பழுத்தபோது, விண்ட நெல்லி யிலேயிடித்தச் சாறுநாழி விழுமிதுப்பைப் பூவதிலே பிசைந்து கொள்ளே. 32

## அயமண்டூரச் செந்தூரம்.

பிசைந்துசா றதனில்முத்தி மூன்றுதரங் காய்ச்சி பின்பொருக் கால் நெல்லெண்ணெய் தனிலுந் தோய்த்து, யசைந்தஅரங் கொண்டு ராவி தூளதாக்கி யதில்தூசி மண்ணன்றி யெடுத்துக்கொண்டு, உசந்த கல்வந் தனிலிட்டுக் கெந்திநேர வுத்தமனே பழச்சாற்ருலோர்நா ளெட்டு, நசந்தவெண்ணெ யிறுகியடை போலேசெய்து நாலாறு புடம்போடு அரைத்தரைத்தே. 33

அரைத்தபுடம் போட்டதையு மெடுத்துப் பின்னும் அப்பனே பழச்சாற்ருல் நாலுசாமம், மரைத்தரைத்துப் புடம்போட்டு ஆறு யேழு அற்றுப்போ மிரும்பதுதா னறையக்கேளு, அரைத்திடுவாய் மருந்துகவ்வல் நெல்லிப்பட்டை ஐயாகேள் சிவந்தநா யுருவிநாலும், அரைத்தபட்டை வேர்தரித்து நாலுபத்து அறுநான்கு சலத்திலிட்டு அடுப்பிலேற்றே. 34

ஏற்றியனல் மூடிவைத்து யெட்டொன்ருக்கியிட்டபங்கை தள்ளி விட்டு யிருந்தசட்டி, யாற்றிபழச் சாறுழக்கி அண்டநீரில் வர்க்கம் பால் துளிகுத்தி கூடச்சேர்த்து, நேற்றிதயிர் மத்தாலே கடைந்து கொண்டு நீயடுப்பி லேற்றிகடை தீயைமூட்டிப், பார்த்திபனே புளித் திடாமல் கடையும்போது பாலகனே மருந்துதனைப் பகரக்கேளே. 35

கேளப்பா வருஷமது ஆயிரந்தான்சென்ற சிட்டமது கொண்டு வந்து தான்றிக்கரிசுட்டு, தாளப்பா கரியிலிட்டுப் பழுக்கவூதி தனியாவி நீரிலிடத் தவிடுபோலாம், வானப்பா அயச்சட்டிக் காயவைத்து வளர ரசம் பட்டையிடித் ததிலேதூவி, வாளப்பா மண்டூரம் பொடியைக் கொட்டி வறுத்தவொரு கடிபொடியைத் தூவிக்கிண்டே. 36

கிண்டுவது வெள்ளெருக் கம்பூகொண்டு கீழ்சட்டி பழுக்கவுலே வைத்துவூதி, கண்டுகண்டு யறயறத்தான் பொடியைத்தூவி கடிகை யொரு பக்ஷமப்பாற் சென்ருல்வாங்கி, செண்டுமுட்டை யிறுபதுதா

னுடைத்துப்போட்டு தீயாரிக் குளிருமுன்னே புரளக்கிண்டி, நடுவீமச் சிநத்தை மூன்றும் பொடித்திட்டு நழுகாத குகையிட்டு யழுகவூதே.

ஆதியுடை சுன்னமடா கண்கொள்ளாது ஹாஹா புடத்திலிட்டு அயத்தைத்தூக்கி, வாதிடையாய்ச் சரிகூட்டி மண்டூரத்தை வார்த் திடுவா யடுப்பிருந்த கியாழம்விட்டு, வீதியுள்ள கல்வத்தி லரைத்து வில்லை வித்தகனே புடப்போட்டுப் பதினஞ்சுந்தான், யாதியடா பொற்கையா நெல்லியோடு மாதியிடை சமனிடித்துச் சாறுவாங்கே.

சாறுவிட்டுத் தட்டியரை அயமண்டூரம் சம்பிரம தாயமா யிந்த வித்தை, பேறுபட்ட புடமதுதா னறுமூன்றப்பா புடந்தோறுங் கண்டு கண்டு யெறுவைக்கூட்டு, யாறுபட்ட யெருவிலேதா னிருந்தகுக்ஷ மலந்துவிடுஞ் செந்தூரங் கருகிப்போகும், நூறுமட்டா யிடுவார்கள் புடங்கள்தோறு நுனிசிவக்கு முட்கருகி யிருகிசிட்டம். 39

சிட்டம்போ லுருகியணு கறுத்துப்போகும் கிலேசமென்ன வயித்தியர்க்கு மூத்தாள்போலாம், சட்டமென்ன நூல்பார்த்து மெள் ளச்செய்தால் சடையாம விதிற்பதத்தி லெருவேறமல், வட்டமென்ன யகலவில்லை லேசாய்ச்செய்து வளரவியி லறவுலர்த்தி வரிசையாக, நட்டமென்ன நாள்தோறுஞ் சிவக்கும்பாரு நடந்தபுட மிதுவரைக்கு மன்பத்தாறே. 40

அன்பான புடத்தில்பில்லை முறுக்கிகைகா லரைத்துவில்லை யெரு குறைத்துத் திரும்பப்போடு, முன்பார்த்து பின்பார்த்து பருவம் பார்த்து முறையோடே நூல்வழியே செய்தாயானல், பொன்பார்த்து அலையாதே வாதியென்று புலத்தியனே வழலையில்லா வாதமாமோ, பெண்பார்த்து ஓடுகிறதோர் காமிபோலப் பித்தர்களே புடமறிந்தால் சிவக்கும்பாரே. 41

சிவந்தவில்லை பருவமதிற் பிட்டுப்பார்த்தால் செங்கரிசை கருப் பட்சி புள்ளேநின்றல், தவந்த கல்வத்திட்டு அரைக்கக்கேளு தனி யாலு மாசுநல்வல் மூன்றுபட்டை, பவந்தபாண்ட மதனிலின்றிச் சலத்தைவாரு பாகுபோற் காய்ச்சிவிடு யெட்டொன்ருக, யுவந்தகல் வத்திருக்கு மருந்திலிட்டு ஓகோகோ அரைந்துருட்டி வில்லைதட்டே.

வில்லைதனைப் புடத்திலிட்டு முருக்கம்பூப்போல் முதிர்வாகச் சிவந்திருக்கும் பதத்தில்வாங்கி, தொல்லையென்ற வியாதிகட்குப் பணந்தான்போடு துயர்தீரு மனுபான மறிந்துசெய்தால், இல்லையடா

வியாதிசொல்வோம் பாண்டுசோகை யெளிதல்ல நவமூலவாய்வுபத்தும், கல்லேயடா கரைத்துவிடுங்கிராணியாறும் காமாலை கவுசிகெண்டை காணுதுவையே. 43

## வாய்வுமுதலான வியாதிகளறிய.

வையகத்தில் மானிடர்க்கு வாய்வினாலே வரும்பித்த மேகமப்பா யபானவாய்வு, தொய்யுமந்த பீசத்தி லுத்தனமாய்நின்று துருத்திக்குள் காற்றுபோ லூரும்பாரு, ஐயாகேள் பித்தமதில் வாய்வாய்நிற்கு மப்பனே வாதமதில் சலமாய் நிற்கும், செய்யுமப்பா பித்தமே சரீரமெங்குந் தீயிட்டாப் போலெரியும் வாய்வுகாணே. 44

காணப்பா வாதவாய்வா லுதையுமேனி கண்டுகொள்ளு மிதினாலேயண்டவாதம், கோணப்பா வானந்த வாய்வுமாகுந் தூக்கணத்தில் பாரிச வாய்வுமாகும், பூணப்பா புத்துலிங்க வாய்வுசூலை பொருமலறு மமுதத்திற் பொசிப்பும்போகும், வீணப்பா வயித்தியற்கு தெரியாதிந்த வியாதிகளைக் கருவிகொண்டு அறுப்பான்தானே. 45

அறுக்கலா முளைத்துவரும் வியாதியானு லப்பனே குண்டுவம்பு வெட்டுகுத்து, வெறுக்கலாஞ் சரீரத்தை தயக்கலாங்கேள் வேகமுமாய்காரமிட்டு யாற்றலாம்பார், சுறுக்கெல்லாம் வாய்வோடே யாகாதப்பா சொல்லிவிட்டேன் தோஷிக்கு மூர்ச்சைபோகும், தருக்கலாம் வாதவாய் பித்த வாய்வாந் தன்னையுதர் கிஷமானம் நடுவிலாறே. 46

ஆருகும் வாய்வுக்கு வகையைக்கேளு அபானத்தில் மூலவாய்வு அண்டவாய்வு,பேருன பீசத்தாற் பாரிசவாய்வு பெருத்துமுத்தி வாத பித்த மோதவாய்வு, கூருன கோசமுதல் பானபீசம் குறுகுறுத்து மேலேறுங் கிறிச்சினத்தின் வாய்வு, வாருன யறுமூலம் லிங்கபீசம் வருகிறந்தி மலக்கிருமி ஆனந்தவாய்வே. 47

அடியான லிங்கபீச மூலமின்றிக் காறுவகை வாய்வுவந்த வகையைக்கேளு, குடியான குடியிருப்பை கல்வினாலே கொள்ளையிட்டு பிறர்க்கியா துண்டதாலும், வடிவான பத்திரிகள் பழித்ததாலும் வளர்மரங்களதனைவெட்டி முறித்ததாலும், தடிபோலே நடப்பிணத்தி லிருந்த பானசந்தசைந்து வாயுவேறும் வடிவிதாமே, 48

வடிவான மங்கையர்மேல் மோகமிஞ்சில் வயிறுபசித் திருக்கையிலே கூடலானும், நெடியோனுஞ் சிவனுமையாள் பத்தாதன்னை நிந்தனைசெய் தவர்மனது நொந்ததாலும், கொடிபோலே வாதபித்த மேக

வாய்வு குடிகெடுக்க வந்ததடா அபானமுன்றில், அடியான அபான
த்தில் வியாதிவந்தால் ஆருலுமாகாது அறுநூற்பாரே. 49

## கர்மநிவர்த்திநூல் அவிழ்தம்.

பாருநீ முன்னுரைத்த கர்மகாண்டம் பாரிச வாய்வுக்குப் பாடி
னேம்பார், ஆருமே பார்த்தறிந்து கர்மந்தீர்ந்து அவிழ்தங்கள் செய்த
வர்க்கு அறையக்கேளு, கோருமே சமுத்திரத்துக் குளைமோர்போல
க் கோர்த்துவிட்டே னிந்நூலின் மருந்துகொள்ளச், சேருமே லோக
மண் டூரத்தோடே செயமாகச் சொல்லுகிறேன் ரசகற்பூரம். 50

கற்பூர சீனமிட்டால் கட்டாதப்பா கருக்குருவாய்ப் பாடுகிறே
மறிந்துபாரு, விற்பூர மானதொரு வீரம்பூரம் விரும்பியதோர் பாஷா
ணம் அரையுங்கூட்டிச், சொற்பமாய் சாரமுடன் துருசுசேர்த்துத்
துடியான மனேசிலையும் காலாய்ச்சேர்த்து, விற்பனமாய் நாற்பது தீட்
சைசெய்து விரவியே அனுபானம் நாற்பதாமே. 51

நாற்பதுமே மேல்பாணி சீவிப்போட்டு நன்றாக வில்லையைப்போ
ல் நருக்கிக்கொண்டு யாற்பணத்துக் குறுதியென்ற யாவின்பால்தான்
அப்பனே குறுணியதி லிஞ்சிக்கொட்டி பார்க்கவடி கனத்ததொரு தா
ழிமுன்றில் பார்மகனே யடுப்பேற்றித் தீயைமூட்டி, சேர்க்கவொரு
விருந்ததடிக் கொண்டுகிண்டி திரண்டுவரில் மறுதாழி தன்னிற் கொ
ட்டே. 52

கொட்டிநன்றாய்த் தேய்த்துரிசி கிண்டிகிண்டு கொழுகொழுத்து
அடிபிடிக்கும் பாருபாரு, தட்டிவிடு மறுதாழி யடுப்பில்வைத்து தந்தி
ரமாக் கிண்டிநன்றாய்க் கைவிடாமல், விட்டுவிடும் பால்பாதி வற்றும்
போது வெளியிறக்கி வைத்துமே சுத்தியாற்றி, சட்டமதாய்ச் சக்கை
யெல்லாம் பிழிந்துபோடு சாறுபோல் தொகித்திருக்குந் தாழிவாரே.

பாத்துயெரி தீசிறுக அடியில்பத்தும் வளமாக மறுதாழி தன்னி
ல்வாரு, சேத்துவற்றிக் குழம்பாகும் பருவந்தன்னில் செயமான மிள
குவால் மிளகுலமம், சாத்துசீ ரகமுடனே அதிவிடையங்கிராம்பு சாதி
க்காய் பத்திரியுஞ் சிற்றரத்தையேலம், கோத்துவகை கரைப்பலமாய்
நிறுத்துக்கொண்டு குறுவனலில் வறுத்துவஸ்திர காயஞ்செய்யே. 54

காயமடா சோமநாதி கழஞ்சிமூன்று கடினசீந்தி யமுதமா பல
மோரண்டு, யாகரெண்டுஞ் சூரணத்தில் பச்சையாக யம்மியிலே சாரித்
து யடுப்பில்நின்ற, பாகதிலே தூவிவிடு கிண்டும்போது பனைவெல்லம்
பலமஞ்சு சீனிபலமஞ்சு, வேகிதத்தில் போட்டுவிடு பழுதுபார்த்து
வெந்திருக்கு மருதாழி கொட்டிக்கிண்டே. 55

கிண்டிறக்கித் திரட்டுப்பால் மெழுகுபோலாக் கிலேசமென்ன மேகமெல்லாங் குடிபோச்சப்பா, கண்டதிலே வையாதே காரோட்டில் வை கழஞ்சிமூன் றெடுத்துகொண் டொருபோதைக்கு, மண்டூரலோக மொடு ரசகர்ப்பூர மவுனகா மேஸ்வரியு மூன்றுங் கூட்டிக்கொண்டு, கொண்டுவிடு பணமூன்று திரட்டிப்பாலில் கூறினேமண்டலந்தா னிரு போதுண்ணே. 56

உண்ணையிலே பத்தியங்கே ளொன்றும்வேண்டாம் மூருமீன் புளியுப்பும் புகையிலையுந்தள்ளு, யெண்ணெயிலே யோரண்டமு சிறுமிள கு யெனமாக நேமித்துநாள் கொள்ளும்போது,வெண்ணெயிலே மூலை ப்பாலுமிளகு மோரண்டம்விட்டு மத்திபீசகோலம் பாணிபாதம்பூசு, சண்ணையிலே மென்றுவுண்ணு மாதரோடே சஞ்சரித்தால் மருந்துன க்குச் சாராதொன்றே. 57

சார்ந்துநின்று மண்டலமே கொள்ளும்போது சத்தியந்தா னறி வாய்வு தகைபடாது, வார்ந்துவடிந் தோடிவிடும் தீர்க்காட்டாலுல் வருமேகங் காந்தல்பித்தம் வாதவாய்வுஞ், சேர்ந்திருமல் மேகத்தில் வாய்வுபத்துஞ் செறியாம லூதும்வயி றதிர்ந்துபோகும், ஆர்ந்தஅன் னமதி லும்ரட்டிக் கொள்ளாலாம்பார் அன்னமுண்டு செறித்தாக்கா லழகுண்டாமே. 58

## காந்த செந்தூரம்.

உண்டான காந்தமது பலந்தானஞ்சு ஓகோகோ நரிக்கொள்ளில் வேகவைத்து, நன்றாக யிறக்கிநிழ லுலர்த்திக்கொண்டு நன்றாகவெற்றி லைச்சாரிலிட்டு, குன்றாமல் நாற்சாமங் கொதித்துலர்த்திக் கூறுவேன் பழச்சாற்றி லறைத்துவில்லை, பண்டான ரவியுலர்த்திப் புடத்திற்போடு பணத்திலே யரைத்தபுடம் பத்துபோடே. 59

போட்டபின்பு பொற்றலையின் சாற்றாலரட்டி புகழான வில்லைத ட்டி புடத்திற்போடு, மாட்டுமந்த சாத்திலுல் சிவந்துபோகும் மைந்த னே காந்தமது சுருக்குமெத்த, மூட்டிநீ யனுபானத் தோடேகொண் டால் குடிகெடுத்த வியாதியெல்லாங் குடியேபோகும், தாஷ்டிகமா யரைமருந்தின் வகையைச் சொல்வேன் சங்கிபதி மூன்றையுந்தான் தடு க்குமாதே. 60

## ஜன்னி பதின்மூன்றுகளுக்கு மாத்திரை முதலான பெயர்கள்.

மாத்திரைதா னுறுவித முண்டுகேளு மக்களே அறுநூற்றில் வலு த்தான்மெத்த, சாத்துறேன் சிந்தாமணி மாத்திரைதா னென்று சக்ர

பாணிபகீரதி மாத்திரைதானென்று, ஆத்துறேன் வியாதிகளை அண்டொட்டாது ஆனந்த வயிரவனு மடங்காசஞ்சீவி, வாத்துறேன் வாதரா க்ஷதனோடாறு மகத்தான குளிகையடா மருந்துபோதும். 61

போதுமப்பா யிதுவாறு பூபதிசெந்தூரம் பூரணமாஞ் சந்திரனில் தங்கமிட்டால், நேத்திமகா தொன்பதுடன் பேதிநீறை நிருவமுடனனுபானம் பகர்ந்துகொண்டால், தாகமதில் கொண்டாப்போல் திரேகந்தன்னில் தருகாது ஜன்னியென்னப் பட்டதெல்லாம், வேகமடா வைத்தியத்துக் கிதுதான் சொன்னேன் வித்தைகளை சிந்தாமணியின் மருந்துகேளே. 62

## மாத்திரைகள் பண்ண சரக்குகள்சுத்தி.

கேளடா பாண்டமொன்று அடிகனமதாகக்கிடாக்கழுத்து முடலாகப் பெரிதாய்ச்செய்து, நாளடா புளிகடலை அறுகுவேம்பு நலக்குமரிவெற்றிலையுங் கும்பைமேனி, தாளடா சிறுசின்னி மணத்தக்காளி கரைகொடு வேலியுடன் தருவேளை செம்முள்ளி, வாளடா வருகொம்மட்டிப் பழத்தின்சாறு வச்சரவல்லி பொற்கையான் வகையும்பதினாறே

பதினாறும் வெவ்வேறே யிடித்துச்சாறு படியொன்றா யளந்துவிடு பாண்டத்துள்ளே, அதிலாறு நாள்விடு நீமலசலாதி ஆணொருவர் பெண்ணொருவ ரதிகம்வேண்டாம், விதிநாறு முவற்புநீ யறுகால்போடு வெள்ளைகல்லு சுன்னமதி லிருகால்போடு, கதிரான கல்லுப்பு கால்ரண்டப்பா பாகத்தில் நீர்காழி வஸ்துவொன்றே. 64

ஒன்றான சூடனுடன் வீரம்பூரம் யூண்வழித்த புழுநஞ்சும் வகைக்குக்காலாய், நன்றான யினங்கண்டா ஹலும்போடு நாறும்பூரத்தில் பாதி பொடித்துமாட்டு, குன்றாமல் கண்ணளவா யளந்துக்கொண்டு குறிப்பறிந்து நாலிலொன்று வாரிசேர்த்து, பண்டானமத்தாலே கடைந்துக்கொண்டு பாண்டத்தை வெட்டிமெள்ளப் புதைத்துமூடே. 65

மூடுமுன்னே சரக்குகளைக் கிளியாய்க்கட்டி முன்னும் பின்னும் பார்த்துநின்று விழிக்கவேண்டா, மாடுகின்ற சரக்குகளும் மண்டூரமப் பிரேகம் சலாசத்து பாஷாணங்கள், வாடுகின்ற தாம்பிரமும் வங்கம்நாகம் வளர்நாபி யண்டமொடு சீனங்காந்தப், யோடுமதில் சூதமிட வகையைக்கேளு பொருத்துமண்ட முட்கருவை யூதிப்போடே. 66

ஊதியண்டத் தோட்டில்ரசந் தொட்டால்மூடி வுள்ளவைப்பாய் வேண்டுமட்டு முருண்டாடாமல், சேர்த்து நன்றாய்க் கட்டியிடு மருந்தையெல்லாந் திரும்பவொரு சட்டிகொண்டு மூடிசெம்மித், தூத்திவிடு மண்ணில்வைத்து மூடிப்போடு துகையாசு மண்டலமே சென்றால்

வாங்கு, பாத்தியல்வாய் மருந்தையெல்லா மெடுத்துமைந்தா பதரும லுலர்த்தி நன்ருய் வைத்துக்கொள்ளே. 67

## பாண்டவுப்பு குரு.

வைத்ததொரு பாண்டத்தை வெளியில்வாங்கு மண்ணையெல்லாந் துடைத்துமேல் சட்டிநீக்கி,செத்தவன்போல் பானைக்குள் கையிடாதே சொந்தமருந் திடவேகம் நீறிப்போகும், யந்தமா மத்தாலே யலரக் கிண்டியப்பனே யீரச்சீலை வாயில்மூடி, முத்தாவி தையமா வாசைபங் குனியுமூன்று முடக்காமல் புரத்தில்வரு முப்பைவாங்கே. 68

வாங்குவநு கத்திகொண்டு வழிப்பாய்மேலே மைந்தனே ராத்திரிக்குக் கிண்டிப்போடு, சாங்கியமாய்ப் பனியில்வைப்பாய் சீலைவாங்கு சாயரக்ஷை வுதயத்தில்மூடிப்போடு, பாங்காகப் பானையின்மேல் வாரவுப்பைப் பதனமாய்த் தினம்வழித்தும் பத்திரம்பண்ணு, தாங்காதகாற் றெழுந்தாலுப்பேருது தாய்ப்பானைக் குள்ளிருந்த புட்டிவாங்கே. 69

வாங்குமுரி யாவரைத்து யடைபோல்தட்டி வளரவியி லுலர்த்தி யதை வைத்துக்கொள்ளு, பாங்காக முன்னெடுத்த பாண்டவுப்பு பதி னுறு கொண்டிடுவாய் சூடஞ்சீனம், தாங்காத வெடியுப்பு நாலிலொன்று தயங்காத வீரமதுதானும்ரண்டு, ஏங்காத பாஷாணம் துரிசியொன்று இத்தனையும் வெண்கருவில் வர்க்கம்பால்வாரே. 70

வார்த்தங்கே கிண்டிவைத்துத் தெளிந்தஜலம்விட்டு வைத்தாட்ட யிறுகிவெரு மருந்துகேளு, பார்த்தங்கே புழுகுபூரம் வாசம்போடு பனியில்வைத் தறுவகைநீர் விட்டுஆட்டி., சேர்த்தங்கே வலிபத்தி லிழுத்து ஆட்டி திரட்டிவில்லை போல்பிடித்து ரவியில்வைத்து, வார்த்தங்கே யறுநீரில் புழுகுபூரம் வீரமொடுசகத்தான கற்பூரஞ் சமனுய்த்தூக்கே. 71

தூக்கிநன்ருய் நீரிட்டுப் பொடிபோல்செய்து சுத்திஞக்கால் சிவந்திருக்குஞ் சுறுக்குதாக்கு, சேக்கிநன்ருய் ரவியில்வைத்து வில்லைதன்னைச் சிவக்குமட்டுஞ் சுருக்கிடுவா யறுநீராலே, தாக்கிநன்ருய்க் கனரிடத்தா னுலர்த்திமைந்தா சட்டியொன்றில் கற்சுன்னங் கைபால்செம்மி, தேத்தியிட்ட பூநீற்றை யதின்மேலிட்டுத் திரணபோல் ரேப்பி நன்ருய் சேதிகேளே. 72

செவ்வாக வில்லைவைத்து பூவால்மேவி சிறுகல்வத்தில் நீறிட்டு மெள்ளச் செம்மி, கவ்வாக சட்டிகொண்டு கவிழ்த்துமூடி கலந்தரைத்து சீலைமண்ணுங் கட்டாய்ச்செய்து, வவ்வாக வாலடுப்பி லேற்றிமுத்தி வாலையொடு வயிரவனைத் தியானஞ்செய்து, ஒவ்வாத தீக்கடின மேருமமற்ருன் ஒழுக்கெரித்து முச்சாம மமர்த்திப் போடே. 73

அமர்த்திநன்று யதின்பின்னே யெடுத்துப்பாரு யழகான பாண்டவுப்பு குருவிதாச்சு, சமர்த்தனென்றால் செய்துபார் வறுமையில்லை சம்பிரம தாயமடா குருவில்போக்கு, நிமைக்குமுன்னே சிலமாகும் பாலில்போட்டால் நிலைகண்டால் வெளுத்துவிடும் வழலைவேகம், நமக்குயெந்த சரக்குகளுந் தடவியூத நாழிகையில் சுன்னமுமா மெழுகு மாமே. 74

மெழுகுமா முருகிநின்று ஆகுமாகும் வேதையிதில் கவர்கொடி விரைந்துபாரு, சுளுக்குமெத்த வழலையிது செய்தபேர்க்கு சொல்லிவிட்டேன் மருந்துவகை யெல்லாமாகும், பழுதில்லா பாண்டசுத்தி செய்த சரக்கை யெல்லாம் பார்மகனே மருந்து செய்தால் பழுதொன்றில்லை, யழுகாதே வாதமுமாங் குளிகையாகு மப்பனே சிந்தாமணியை யறையக்கேளே. 75

## சிந்தாமணிக் குளிகை.

கேளப்பா அண்டரசம் கழஞ்சியாறு கெந்திநாபி சிலைதுரிசு துத்தங்காரம், வாளமன்ன பேதிலிங்கம் ரோகணியுஞ்சாரம் வசம்புமுததாதுகளுஞ் சேர்ந்தரையாய் வகைக்குத் தூக்கி, தகடித்து நீலிச்சாறதனுலாட்டி, நாளுமதில் ரண்டுதின மைபோலாட்டி நாய்க்காரந்தை பொற்கையா ணுளொன்றாட்டே. 76

## இராமபாண சக்கிரபாணிக் குளிகை.

ஆட்டிமைபோல் மெழுகுபதம் வருகுநோ மப்பனே குளிகைசெய்து யடக்கிக்கொண்டு, தாட்டிமையாய் ராமபாண சக்கிரபாணி சாற்றுகிறேன் பாண்டசுத்தி செய்தவெள்ளை, தோட்டமதி விலைப்பாக விலைப்பறித்து துவைக்கயிலே குருசத்தே தூவிக்கொண்டு, வாட்டிடவே யோட்டில் வைத்துப் பாஷாணத்தை வளர்தீபம் போலெரித்து சுருக்குதாக்கே. 77

தாக்குவாய் பலமொன்று பாஷாணந்தான் சாறுகால் படியஞ்சு தாயுநிஞ்சினுக்கால், தூரியே யமுரிவிட்டு யலம்பிப்போட்டு சுத்தியாம் பாஷாண வேகம்போகும், போக்குவாய் தடவிவிட்டுப் பீங்கானிற்றுன் புகழாக யறுநீரை விட்டுக்காய்ந்தால், நோக்கு யிடை நிறுத்துக் கல்வத்திட்டு நுணுக்கவுந்தான் மிளகுபொடி நிறுத்துப்போடே. 78

போடப்பா வெள்ளையொன்று பொடிதான்ரட்டி பொருமாண்டும் கலசப்பால் விட்டுஆட்டி, ஆட்டப்பா யிளநீரை விட்டு ரவியில்வைத்து யறவுலர்த்தி தயிர்சலத்தா லரைப்பாய் மைபோல், கூட்டப்பா வழித்து

வென்று பிறுகல்கண்டு குளிகையது மிளகுபோ லுருட்டிக்கொண்டு, காட்டப்பா வுலர்த்தியதைச் சாம்பிராணிதூபங் காட்டியதைப் பதன மாய் வைத்துக்கொள்ளே. 79

## பகீரதி அக்கினிகுளிகை.

வைக்கிறேன் பகீரதியா மக்கினிகுமாரி வையகத்தில் மானிடர்க் கு நோய்கடீர, பைக்குளடங் காதவித்தை பாண்டஞ்சுத்தி செய்தபகீ ரதியாகெவுரி பலமொன்றுகூட்டு, எய்க்குமோ குளிகைசெய்தா லிது போல்நோயை யென்னசொல்வேன் வாளமது வெட்டிலொன்று, தை க்கரைநீ யிஞ்சிநீர் தன்னுலாட்டி தவிடுபோல் பிரித்துவதை யுலரவையே

உலர்ந்தபின்பு மிளகுபலம் ரண்டுபோட்டு வுத்தமனே யெண்ணு ழி சலங்காலாக, கலந்த கல்வங் தனிற்பொடியை யிட்டுமைந்தா கியா ழம்விட்டுக் காற்படியும் வைத்துவாட்டி, மலர்ந்தபின்பு குளிகைசெய்து பயறுபோல மகத்தான மாத்திரைகாண் பதனம்பண்ணு, சிலந்திரவாய் வோடு யசதிமூர்ச்சை தீராத சுரவேர்வை தாகம்போமே. 81

## ஆனந்தபயிரவ குளிகை.

போமப்பா ஆனந்த வயிரவனேச் சொல்வோம் பொறிபட்ட பஞ் சதுபோல் போகும்நோய்கள், நாமப்பா முன்சொன்ன பெருநூலிலப் பா நாட்டவில்லே யிம்மருந்து நட்புக்கேதான், வாமப்பால் கொண்ட வர்க்கே வாதந்தங்கும் வயிரவனேப் பூசித்தால் மருந்துஞ்சித்தி, காமப் பால் கொண்டவர்க்கு யாகாதிந்த கருவான சூஸ்திரங்கள் கண்காட் டாதே. 82

கட்டாத பாலரையில் பாஷாணமஞ்சுங் காந்தமொடு அயநாகம் வங்கஞ் செம்பு, ஒட்டாத சூதமொடு கெந்திதாள மேகாந்த மானலிங் கந் தூரிசுதுத்தம், ஒட்டாதே பதினேஞ்சுங் கழஞ்சொன்றுக மெல்லா மரப்பொடியா யருவிக்கொண்டு, கொண்டுபெரு வாயன்மாலே பீங்கான் விரவிதவத் துலர்த்தி விள்ளக்கேளே. 83

விள்ளாதே கல்வத்தி லிட்டுக்கொண்டு வெண்ணெச்சிச் சாற்றி ணுல் மைபோலாட்டி, பிள்ளாய்கேள் வில்லேசெய்து ரவியிற்போடு பெல சட்டி ரண்டிலொன்றில் நீக்கச்செம்மி, பொல்லாது சீறிவிடு மூவர்ப்பூ வைத்துப் புகழானவில்லேவைத்தும் பூவால்செம்மி, கல்லான நீற்றையி ட்டுக் கையால்செம்மிக் கட்டாக மேல்சட்டி கவிழ்ந்துமூடே. 84

மூடுசட்டி சீலமண்செய் யடுப்பிலேற்றி முன்தாய்க்கும் வயிரவர்க்கும் பூசைபண்ணு, போடுசற்றே தீய்ச்சிறுகப் புகைந்து போகும் பொல்லாத சாமமெரிப் பொறுமிநீறும், பாடுமெத்த யெண்ணுதே பணமோபஞ்சம் பக்குவத்தில் மேல்சட்டி பொரியும்நெல்லு, சாடுமெத்த தீயெரிநீ கடிகைமூன்று சரக்கெல்லாம் வெந்துருகி சத்துபோகா. 85

போகாது யிடையொன்றும் பூமிநாதம் பூண்போலே கட்டியங்கே பிடித்துக்கொள்ளும், சாகாம லிருந்தாலும், வேஷமெத்த சட்டிகளைத் திரிந்தாரி யெடுத்துக்கொண்டு, வாகான கல்வத்தில் நொறுக்குமைந்தா வாளமொடு நாவியுடன் நீறுங்காரம், பாகான காயமொடு கடுகிந்துப்பு பருத்திரி கடுகுவகை பத்துமாச்சே. 86

ஆச்சுவகைக் கொருகழஞ்சா யதிலேகூட்டு யரைக்கழஞ்சிச் சாரதனு லாட்டுவோர்நாள், தேச்சுவரை வெள்ளைப்பிள் ளித்துயிலம்விட்டுத் திரளரைத்து மறுநாள்தான் திரட்டிக்கொண்டு, வாச்சுதே மிளகளவா யுருட்டிமைந்தா வரிசையுடன் பேய்ச்சுரைக்காய் குடுக்கையில்தான், போச்சுதே பிணியேது நோய்களேது பிரபலமாய் வயித்தியர்க்கும் பிழைப்பும்போச்சே. 87

போச்சப்பா புறவீச்சு சன்னிபதின் மூன்றும் பொல்லாத பித்தஜன்னி வலிகளஞ்சும், வாச்சப்பா அசதிமுக வாதஜன்னி வாதமென்னப் பட்டதெல்லாம் வாங்கிப்போகு, மூச்சப்பா விடுகாலம் நோய்களெல்லா முழித்தகண் மூடுமுன்னே முசலகனும்வாங்கி, ஆச்சப்பா வயிரவனே டதனிற்பாதி யழகான சஞ்சீவி யறையக்கேளே. 88

## சஞ்சீவி குளிகை.

அறையான வரிதாரம் நாவிகெந்தி யடுத்தாசம் லிங்கம்பொரிக் காரமிந்து, முறையான கடுகுதிரி கடுகுகாய மூலைப்பாலில் வகைக்குஒரு கழஞ்சாய்த்தூக்கி, பறையாதே நாளிருநா ளத்தபின்பு பச்சையிஞ்சிச் சாறதனில் பதத்தவாட்டி, நிறையாகப் பயறளவா யுருட்டிக்கொண்டு நிழலுலர்த்திக் குளிகையெல்லாம் புகையில்காட்டே. 89

காட்டுவது சாம்பிராணித் தூபம்பட்டால் கட்டினதோர் குளிகையெல்லாங் கடுவேகந்தான், மூட்டுவது வியாதிகண்டு யனுபானத்தோடே முனைகண்டு மருந்தறிந்து மூட்டிப்போடு, கூட்டுவதுங் குறைக்கிறது மறிந்துகொண்டால் குலதெய்வம் வாதபித்த சிலேற்பனந்தான் மூன்று, மாட்டுவது யதினேடே யெல்லாவில்லை யதில்பிறந்த வியாதிகளை யாய்ந்துபாரே. 90

## குப்பியில் வைப்புக்குப் புத்தி.

பாரப்பா யோாத குப்பிவைப்புப் பாடவில்லை முன்னுரைத்த நூல்கள்தன்னில், சீரப்பா யிந்நூலில் திறந்துவிட்டேன் செப்பரிய குப்பிக்கு மண்ணேழுசெய்து, காரப்பா மருந்தையெல்லாஞ் சத்தேவாக்கி காசியென்ற குப்பியிலே செந்தூரித்து, யாரப்பா வைப்பரியா ரிஷிகள்சித்தர் யருமைமெத்த வாகிமகன் வயித்தியன்றனே. 91

## வாதராட்சச குளிகை.

வயித்தியத்திற் கருவொன்று சொல்லக்கேளு வாதராட் சதனென்ற மாத்திரைதானப்பா, பயித்தியரேன் காந்தமொடு லோகம்தாம்பிரம் பாருநீ யப்பிரேகஞ் சூதம்கோ, யசுத்தியறச் சுத்திசெய்து சத்தேவாங்கிச் சூதயிடை பாதியினால் மருந்துங்கூட்டி, செயித்திடவே கெந்தியிதி னுலிலொன்று செயமாக வுருக்கியதைக் கும்பிக்கேத்தே. 92

ஏத்தியே முத்தீயுஞ் சாமம்நாலா யெரிக்கையிலே குப்பிவாயில் தீயேவந்தால், பார்த்துநீ ஏத்திலொன்று யரியன்றேவி பாஷாணஞ் சிலைதுருசு பொடித்துமாட்டு, சார்த்துநீ சலாகையினல் மெள்ளக்கிண்டி சரிபாகம் போட்டகெந்தி மெழுகுபோலானல், நேர்த்தியாய்க் குப்பிக்குள் காகரப்பேயாகும் நீட்டுவாய் காரமது நாற்பதுக்குவொன்றே. 93

நாற்பதுக்கு ஒன்றிடுவாய் குருதானப்பா நலமான சத்துகள்தானுருகிச்சேர்ந்து, பார்ப்பதற்குப் பண்டியிலே யேறுதையா பதனமாய்க் குப்பிக்குள் தளச்செந்தூர, மாற்பனத்துக் குறுதியிது யாருஞ் சொல்லார் ஐயையோ வதின்சுருக்கு யெதுக்குமில்லை, காற்பதுதான் ஆறிநன்றாய்க் குளிர்ந்தபின்பு புகையாற்றிக் குப்பிதனை யுடைத்துவாங்கே. 94

உடைத்துப்பார் செந்தூர மருணன்போலாம் ஓகோகோ மனேன்மணித்தாய் நிர்த்தஞ்செய்வாள்,சடைத்துயிந்த செந்தூர மன்றிலோகா தான்புடத்தில் நீறினதுஞ் சரக்குங்கூட்டி, நடத்திமெள்ள வரைத்துருட்டிக் குளிகைசெய்து நாட்டில்நோய்க் கீய்ந்திடுவாய் சுறுக்கோயில்லை, செடத்திலிந்தச் செந்தூரம் கழஞ்சிபத்து சேர்க்கயினி மருந்துவகை செப்புறேனே. 95

செப்புறேன் வெண்காரம் சாரம்வாளம் செயமான கெந்தகமும் வகைக்குப்பத்து, கப்புறேன் கொடுவேலி யவிரிவேளை கருஞ்சீரகநாவி நறுவிஷமும்லிங்கம், ஓப்புறேன் சவர்க்காரமனோ சிலைநன்னாரி ஓகோ கோ துரிசிவெள்ளை திரிகடுகும்நோய், தப்புறே னென்றாலுந் தவறா ட்டாது தனித்தவகை யொன்றுக்குக் கழஞ்சிமூன்றே. 96

கழஞ்சி பத்தாம் பெருங்காயம் வெள்ளையுள்ளி கசக்கிமேல் தோ லுரித்து யிடித்துச்சாறு, தளஞ்சுதிந்த மருந்துமொக்கச் செந்தூரந் தான் கடிவாளம் நீரிலிட்டு முளையைப்போக்கி, வளஞ்சு அரைக் கல்வத் தில் சாறுவிட்டு வாகாக நால்சாம மரைத்தாற்கேளு, விளஞ்சுவந்த நோய்களைத்தான் தீர்ப்பேனென்று விருதுகட்டிப் பண்டிதர்முன் பறை கள்சாத்தே. 97

சாத்துறே னரைத்துபதந் தன்னிலேதான் தனிமிளகு மாத்திரை போ லுருட்டிக்கொண்டு, வாத்தியே நவாச்சாரம் நிவர்த்திசெய்து வளமான மருந்துசெய்யும் வகைதான்கேளு, போத்தியே யிஞ்சிச்சார் தன்னிலூட்ட பொருமல்விக்கல் சாத்தியமாம் சன்னிமூர்ச்சை, யோ தியே வலிகுன்ம வாய்வுபித்தம் யெடிபிடியா முள்குத்து புறவீச்சுப் போமே. 98

போமப்பா வாதமென்ற தொன்பதுந்தான் பொல்லாத நீரடைப் பு செறிப்புதீரும், சாமப்பாபித்தமென்ற தனைத்துந்தீரும் சரிப்படுத்தும் வாதசூலை முடக்கும்போகும், தாமப்பா சிலேற்பனத்தில் கபங்கள்தீ ரும் சன்னிபதின் மூன்றுவலி யஞ்சும்போகும், ஆமப்பா தசைவாய்வு வனைத்துந்தீரும் அரிவையர்கள் கெற்பநோ யகன்றுபோமே. 99

அகன்றுபோம் க்ஷயரோக மிளைப்புமிளை ஆனந்த வாய்விருமல் கக்கறுளமாந்தை, யகன்றுபோம் பிறமூல முள்மூலமாந்தம் அதிசாரக் கிராணியார் குன்மமெட்டும், நகன்றுபோ மகோதரமுஞ் சோகைபா ண்டு நாறுகின்ற பீனிசமுங் கபாலவாய்வும், விகண்டிதமே வாராது வியாதிகண்டு விட்டுவிடு வனுபானம் வெவ்வேற்றானே. 100

வேறென்ற யிஞ்சிச்சார் வேம்பினெண்ணெய் விஷத்துக்கு யமு ரிவரிகொம்மட் டிக்காய்ச்சாறு, கூறென்ன வியாதிகண்டு கியாழம்வை த்து கொடுத்திடுவாய் தேன்குத்தித் தளசெந்தூரம், பாறென்னக் கபா லநீர் மண்டைக்குத்து பயித்தியமே குடல்பிரட்டு சத்தியாகும், வீறெ ன்ன ஒருதலையி லிடிப்புக்காணும் வெற்றிலையைச் சுருட்டிதிரி பிடிக் கப்போமே. 101

## வியாதியெல்லாந்தீர மதனப்பூச்சூரணம்.

போமப்பா வியாதியெல்லாந் தீர்ந்துபோகப் பூவாலே சூரணந் தான் புகல்வேன்பாரு, ஆமப்பா கலவிசெய்யப் போகமீறும் அப்ப னேதாதுவிர்த்தி யதிகமாகும், தாமப்பா லகிரியுண்டாம் போதங்காணு ம்தப்பாது விடுப்புவிட மாட்டாதப்பா, நாமப்பா செய்ததொழில் நாட் டிலேதா னலமான மன்னருக்கு நாட்டுவாறே. 102

வாரானவியாதி யொன்றும் வந்தாலிந்த மருந்தொன்றும் போது மடா செய்துகொண்டால், ஆராலுமாகாது அறுந்துசெய்வார் அப்ப னே ரிஷிசித்தர் செய்யவேணும்,போராது நாட்டிலுள்ள வயித்தியோ ர்கள் புகழான வாதிமகன் வைத்தியமே செய்வான், பாராது தீருமடா யெந்தநோயானாலும் பகருகிறேன் பூவாலே மருந்தைக்கேளே. 103

பூவான சூரிப்பூ வல்லாரைப்பூ புடலம்பூ நெரிஞ்சிப்பூ பாகல்பீர்க் கு, பூவான பொன்முசுட்டை செம்முள்ளி யவரைப்பூ பூனைசிறுகாலி மிளகு வமுக்கருசங்கு,பூவான யிலுப்பைப்பூ யிலுமிச்சிகச்சல் புன்னை யல்லி யாம்பல்கொட்டி நெய்தல் முத்தம்பூவும், பூவான வில்லைவிளா நந்தியாவட்டம் புன்முருங்கை முருக்குவிழி மணத்தக்காளி பனையே.

பனையுடனே கதலிப்பூ தாமரையும்பிச்சி பால்குறண்டி தேள் கொடுக்குத்தொட்டால்வாடி, சுனையான முசுமுசுக் கைவேளை கொடு ப்பையொடு பொடுதலையும் சொல்லுகிறேன் வெள்ளருகு சுரையவுரி, குமரிதனை யாழுங்காக்கலமு மாவாரையு முல்லைதனி நின்றகுட மல்லி யிருவாட்சிவன்னி, சினையான செவ்வகத்தி கருவேலைமுடையும் செண் பகப்பூ நீர்முள்ளி வெள்ளைச்சாரணையே. 105

அணையாத கார்த்திகைப்பூ நார்த்துமெள்ளு யப்பனே மாக்கமு குதென்னை கொழுவிஞ்சி, பணையாத தூதுவளை கண்டங்கத் திரிகடுகு பாரிலுள்ள மூலைநார்த்து வெங்தையப்பூவு, மினையாத மாதளம்பூ யாத் திக்கண்ணும்பூளை யித்தியத்தி யாலரசு நெல்லிநவ்வல் பிஞ்சுந், துணை யான மருந்துவகைக் கீழ்க்காய்நெல்லி பீசங்கு துளசிதும்பை சம்புரசு வெண்ணெச்சிப்பூவே. 106

கொச்சியின் மிளகுகொடி பிஞ்சுடனே தேத்தான் குலமான வரி க்கைபிலா வெற்றிலையும்பிஞ்சு, லச்சிரமாம் வல்லிபூலா யிலந்தைகிளாப்

பிஞ்சும் வாசமுறு கருவேம்பும் பாவட்டையின் பிஞ்சு, யிச்சைபெற புரசுபிராசடம்பு சிவன்கரந்தை யியல்பான சித்தாமுட்டி போமுட்டி பாச்சி, தச்சையா முடக்கறுத்தான் சித்திரபாலாடையும் நலவிரிசு துவரைதொயில்மேனி யெட்டிப்பூவே. 107

எட்டிசிரா செங்கழுநீர் மஞ்சணத்திமத்த மென்மகனே செந்தா ரிக்கப் பூமின்னியுழுந்து, கொட்டிசிறு செந்தோட்டி சிறுபயருகாண ங் குழப்பாலே சிவன்கொன்றை தலைவிரிச்சான், மட்டிகெட்டியாயவ முதலைப்பூ பிஞ்சுமகனே கேள்சாதிக்காய் பத்திரியோ வில்வம், வெட் டிவேர் கிராம்பேலங் காளிசபத்தி மிளகு சுக்கு சாரப்பருப்பு சந்தனம் வால்மிளகே. 108

மிளகோடு மாஞ்சிகோட்ட மகாப்பூக்கள் மேலான கஸ்தூரி கோ ரோசனை யாத்தை, யளகோடும் புழுகுகுங்கு மப்பூநன்னாரி சவ்வாது அப்பனே மாசக்காய் கற்பூரம்பச்சை, பளகாதேகொண் டோசனை செங் கழுநீர்கிழங்குப் பார்மகனே பூப்பிஞ்சு நூற்றிருபத்தஞ்சுந், தள வாய்கேள் கடைசரக்கு யிருபத்தாரும் வெட்டித் தனிமாவாஞ் சிந்தி வள்ளி சுத்திசெய்தமாவே. 109

மாவாகும் நெல்குருவை கம்பம்புல்லு மலைமூங்கி லரிசிதனைக் காடைக்கன்னிப், பாவாகுங் குதிரைவாலி வாகுசோளம் பசும்பயறு கோதும்பை கடலை மொச்சை, யாமாகு மடிபுல்லுச் சாமைதுன்னி யப்பனே வுழுந்துடனே பதினேழாச்சு, நாவாம விளவறுப்பு மாப் போல்செய்து தனித்தனியே வகைக்குஒரு கழஞ்சொன்றுமே. 110

ஒன்றாகப் புதுசட்டிப் பாந்ததாக வுத்தமனே ரண்டுமூன்றில் குறைத்துயிட்டு, யன்றுடம் பசும்பால் தெளித்துமைந்தா யதைவிரலா ல் யிசைந்துவைப்பாய் காற்றுகாது, நன்றாகப் பால்கொதித்து வாடை நீக்கி நடப்பில்நித்தம் பிசறிவைப்பாய் படிதான்ரண்டு, குன்றாமல் பரு வம்பா ரண்டோடொன்று கொழுகொழுத்து யூதிணுக்கால் மருந்தா காதே. 111

மருந்தென்னப் பட்டதெல்லாம் வீட்டில்வைக்க மாசியொடு பங் குனிசித் திரையாம்பத்தி, லிருந்துாவி முகம்பட்டால் துரிசுகுருவாகு மென்மகனே வழலைமுடி யிதுமாதந்தான், பொருந்தியது கலகலத்து யாரால்பார்த்துப் புகழான முந்திரிகைப் படிதான்ரெண்டு, இருந்தருந் தத் தெளித்ததிலே பிசறிவைப்பா யியலான மருந்துலர்ந்தா லாக்கி பொடியிடியே. 112

இடித்திடுவாய் விச்சூடாய் பின்னுமப்பா வியல்பாக ரவிதனிலே யுணர்த்திப் பொடியாக்கி, குடித்திடுமே பாலும்வஸ்தும் படிதானுலுங் குறையாமல் சென்றபின்பு வடகஃபோலுருட்டி, சடித்து வதுக்கிடுமுனிடித்துத்தூளாய்த் தனிவஸ்திர காயம்நன்ருய்ச் செய்துகொண்டு, பொடித்தமருந் தொக்கவைப்பா யுடைதான்கேளு புகழாக நூற்றிருபத் தெட்டுமாச்சே. 113

ஆச்சப்பா வருஷமது நின்றகற்பம் அருமையடா யில்லாவிட்டாலதில் பாதியாகும், வாச்சப்பா சடையாக யிலையில்லாமல் வாரியொரு பானைதனில் சலத்தைரம்ப, வீச்சப்பா மூடிவைப்பாய் கடிகைக்கேளு வித்தகனே முப்பதிலே யிறுத்துப்போடு, போச்சப்பா பித்தமெல்லா மஞ்சள் நரைபோலே பொல்லாது தள்ளிவிடும் பிழிந்துநிழ லிலுலர்த்தே. 114

உலர்த்தியதை நெறுக்கிவரும் பருவந்தன்னில் ஓகோகோ புதுச்சட்டி பாந்ததாக, மலர்த்திமெள்ள ஆவினெய்யைத் தோய்த்துத்தோய்த்து மணவரையி லெரியடுப்பில் காய்த்துவாங்கி, பிலத்தமுலி பித்தமில்லாப் பொடியையிட்டுப் பிரட்டிநன்ருய் வெதுவெதுத்தப் பருவந் தன்னில், குலத்தில்நின்ற பெய்தேத்தில் குண்டாச்செய்து கூறுகிறேன் கிண்டுதடி யதிலேதான்கம்பே. 115

தானென்ற கிண்டுதடி மூன்றேமுக்கால் சடிக்கம்பு கீழடிதான் ஆறங்குலம், வானென்றவுயர்மட்டம் ரண்டங்குலம் வால்காலரய் செய்துகொண்டு குண்டாசத்து,பானென்ற கனமதுதா ஹறங்கூலம் பருத்தஅடி யொன்பதுவா முயரங்கேளு,கூனென்ற வுள்ளுசாண் சாணேயாகுங் குறையாது யகலமது யிருசாணுமே. 116

ஆகுமே குண்டாவுந் தடியுஞ்செய்து அப்பனே புதுசாத்தான் மருந்துகேளும், பாகுபோல் சீனியது பலந்தான்ரண்டு பருத்தஅண்டச், சுன்னமது பலந்தானுவு வேஃகுமோரண்டுமொன்ருய்ப் பொடித்துப்போட்டு மேலான தடிகொண்டு கிண்டுநன்ருய், பாகுபோற் குழம்பாகுங் கடையுஞ்சூடு பக்கமுள்ள வழிப்புவரை பத்தச்சுத்தே. 117

சுத்திஞல் பத்தியெங்கே பிடித்துக்கொள்ளுஞ் சொல்லாத சூக்ஷமிது சித்தர்க்கில்லை, யத்திஞல் குண்டாவி வதுவோடுபோலே யாகுமட்டும் பிடித்திருக்கும் வாராதுபாரு, பத்திஞல் சட்டியுட்குள்வெதும்புக்கஞ்சா பார்மகனே குண்டாவில் கொட்டிக்கொண்டு,வெத்திபெறக் கடைந்திடுநீ நடுவில்வைத்து மேலொருத்த ரெதிரிருந்து கையை மாற்றே. 118

கைமாற்றுக் காலுக்கு ளணைத்துக்கொண்டு கடைந்துபின் சட்டி சுட்டால் நெய்யைமேவி, கைமாற்றுச் சட்டிரம்பச் சுடாமலப்பா கடைச்சலுமோ நாகுகைதான் மூன்றுவேண்டும்,கைமாற்று விசைக்கு விசை யிதுவேயப்பா கஞ்சாவோ குடுகுடுக்கை கரைத்துகொள்வார், கைமாற்றுலேகியங்கள் பொடியுங்கண்டு கடைசியிலே பித்தமுடிக் கரி யெட்டாமே. 119

கரிபோலே கெஞ்சுமுதல் கபாலமட்டுங் கட்டிக்கட்டி யாரிறைந்து கபமேமிஞ்சி, சரிப்போன படியெல்லாஞ் செய்துமாண்பா சாவதுவே நித்தியமென்று சஞ்சாரத்தில், பிரிபோலே ஆண்பெண்ணு முருக்கியெத்தி பேய்க்கூத்தாய் மேகமிஞ்சி யிறந்தார்பாரு, வரிபோலே மேகவர்னம் பசுமைவேண்டு மைந்தனே நவபுடந்தா னிவ்வீதமாமே.

நவபுடமா யதிர்ந்தகற்பம் லேகியங்கள் நலமான கிருதங்கள் சூரணங்கள், கவபுடமா மதிர்ந்தமூலி மிளகு அண்டம் நடப்பிலே கூட்டி நித்தியம் பொசிக்கலாகும், நவபுடமாய்த் தீர்ந்தகஞ்சா குடிக்கவென்றால் நவமணியே புலத்தியரே கிராம்புகாயம், நவபுடமாய்த் தீர்ந்துதிந்த அதிமதுரம் சீரகம் நாலாறு வால்மிளகு சாம்பிராணிசரியே. 121

சாரிக்கு மருந்தாறு கழஞ்சியாறு சாற்றுகிறேன் தீர்ந்தகற்பம் பதினெட்டாகும், சேரிக்க சர்க்கரைதா னிதிலேபாதி செப்பரிய நறுநெய்யா லரைத்துவாங்கிக், கோரிக்க குடுகுடுக்கை சிலிர்பிப்போட்டா குண்டலம்போல் வில்லைசெய்து குடித்தானன்று, பாரிக்கும் ரோகமப்பா பச்சைபச்சை படுபாவி கைமுறையாய்ச் செய்யார்பாரே. 122

பாரப்பா நனைந்திருந்தால் பித்தம்போகும் பரிவான கடைச்சலெல்லாம் லகிரியேறும், யாரப்பா கைமுறையாய் வெதுப்பியாற்றி யடிக்கடிதா னெய்ப்பதமாய்த் தடவிவாட்டி, காரப்பா கருகாமல் வானங் கண்டு கடையயிலே அண்டமென்று அவித்துப்போட்டு, சீரப்பா விந்துடனே சிவகாமிக்குச் சிறப்பாகப் பூஜைசெய்து சேர்க்கேளே. 123

சேர்ந்திடுவாய் மின்பொடிக்கு நாலத்தொன்று சேகரித்துக் குண்டாவில் கடைந்துக்கொண்டு, கவர்ந்திடுவாய் காமப்பூ பித்தமெத்த காராவி னெய்தோய்த்துச் சிற்றோண்டம், பார்த்திடுவா யிலைபருத்தி நாலுஆறு பருசாகப் பொட்டணமாய்க் கட்டிக்கொண்டு, பூர்த்திடுவா யுமிக்காந்தற் றணலில்வேகப் புக்கியுள்ளே தீபிடித்தா லெரிந்துபோடே.

பேரடாமல் வெந்தவிழ்ந்து நெல்யில்வாட்டிப் பொடித்துநன்ருய் குண்டாவில் மருந்துபோட்டு, வரடாமல் நாளொன்று கடைந்தால் மைந்தா வாய்வேகி மனவேகி யாச்சுபாரு, காடேதோ மலையேதோ செவிதானேதோ கலந்துவனு பவிக்கின்ற பெண்தானேதோ, வீடேதோ பொருளேதோ தீனியேதோ விந்துகட்டிப் பரத்தடைந்தால் மோக்ஷமாமே. 125

மோட்சமென்ருே மவ்வழியே யிருந்தபேர்க்கு மொய்குழலோடனுபவிக்கப் பிலவான்பாரு, நாச்சுதே மாருட வல்குலெல்லாங் கடைகெட்ட மோகினியுங் கெஞ்சுவாள்பார், போச்சுதே ஞானத்தைவிட்டு அப்பா பொல்லாதசூரணந்தான் வேகமெத்த, வாச்சுதே சூரணத்தைத் தூக்கிக்கொண்டு வரிசையாய் நாலிலொன்று சீனிகூட்டே. 126

சீனியிட்டுப் பிசரியொன்ருய்ச் சேகரித்து செப்புகிறேன் துரைமகனே செய்கைகேளு, நானிலத்தில் மன்னர்கையில் பொருள்களீய்ந்து நாரியற்கு யாசையில்லா தேனேகேளு, பானியாம் படங்குறியாள் யானைமோகம் பசிபெரிதாஞ் சாமைதினை பொரிபோல்நீதான், வானியல்குல் குறிதையற்றல் வளருமேகம் வருமல்லால் மற்றெல்லா மசகந்தானே. 127

தானென்ற அல்குல்முறி தைக்கவேணுந் தைக்குமுன்னே போகம்விடா திருக்கவேணும், வேனென்ற வெகுரோம் லீலைசெய்தால் வியாதியடா மேகமருக்கா திருக்கவேணும், கானென்ற கைகால்மேலுளைவுதோன்றி கரைப்பினுல் கிரந்தியிலோ திருக்கவேணும், யூனென்று வுதிரத்தில் வாய்வுயேறி முள்மூலங் குன்மசய மேரடொட்டாதே.

ஒட்டாத மாதர்களை யொட்டப்பண்ணு மெருகாசுஞ் செலவில்லா துரிமையாகும், வண்டரிடம் பொருள்பறித்து உனக்கே யீவார் வகுகும்வழி பார்த்திருந்து மயங்குவார்பார், தெண்டநிடு வார்களுனை யணையவென்று தேடினதெல்லாந் தருவார் திருடிவந்து,கொண்டவனே டனுசரிக்கார் மனதுவுண்ணுமல் குறிதைக்கு மருந்துதனைக் கொள்ளக்கேளே. 129

கொள்ளுநீ சூரணத்தைச் சீனிசேர்த்து குடியான பால்வெதுப்பிப் படிகால்வீதம், அள்ளுவாய் கழஞ்சொன்று வாயில்போட்டு யதில்விடுநீ பாலையப்பா யிருபோதுந்தான், கள்ளுடனே சாக்குஅபின் கெஞ்சாகொண்டு காமலீலை யாய்த்துடரு மடையரோடே, வெள்ளளவும் நூல்பாரா னேதோவென்பா னென்மகனே சூரணத்தி னியல்புகேளே.

கேளப்பா மாதருட மனதையெல்லாந் திரிவிக்கச் சொல்லிவிட்டோ மிந்தவித்தை, நாளப்பா ஒருபொழுது கொண்டால்விந்து நாழிகைதான் முப்பதுக்கும் விடாதுபாரு, யாலப்பா யிருபொழுதுங் கொண்டாயானல் யனவர்த்த காலம்விந்து யடங்கிப்போகும், வீளப்பா விந்துகட்டில் தண்டுசோர விஸ்தார மங்கையற்கு நாணமாமே. 131

நாணமென்ன வுன்னுடனே கலவிசெய்ய நாட்டிலொரு பெண்களினி பிறக்கவேணும், ஊனமில்லை சரீரத்தி நோயும்போகு மூத்தமனே நரைதிரையும் மன்புமில்லை, பானமென்ன யிதையுண்டால் போதங்கோவைப் பச்சரிசி பொங்கியுண்டால் படிகம்போலாம், ஆனபடி செய்தரிந்து சொன்னேன்பாரு அடங்காமை மதனசூர ணந்தான்பாரே. 132

சூரணத்தைச் சேர்த்துநீ கொள்ளுமென்றோம் சூட்சமொன்று சேதியொன்று சொல்லக்கேளு, சூரணத்தா னிதுபோலுங் கலவிசெய்யச் சொல்லுகிறேன் மேகமிரு பத்துநாலும், சூரணந்தான் கொண்டுடனே யடங்கிப்போக தொடுகுறிபோல் மருந்திலே சேர்க்கக்கேளு, சூரணந்தான் வங்கபற்பம் தங்கபற்பம் துலங்குமுத்துப் பவளபற்பம் அபிரேகமஞ்சே. 133

அஞ்சுமே வகைக்குக்கால் பணமாய்ச்சேர்த்து அருமையுள்ள சூரணத்தி லந்திசந்தி, மிஞ்சாமல் கொண்டுவந்தால் சொல்லக்கேளு மேகமெல்லாங் குடிபோச்சு கடலேபுக்கி, நெஞ்சுமே நோயெல்லாம் போருமென்ற கீர்த்திபெற வயித்தியற்கு யுரைத்தேன்பாரு, தஞ்சமென்றே தாய்பதத்தைப் பூசைசெய்தால் தாழ்வொன்றும் வாராது தங்கிநீறே. 134

## தங்கபற்பம்.

வேறு.

தங்கத்தின்பற்பந்தன்னைத் தாய்சொன்னேன்கேளு
வங்கத்தின்பற்பத்தோடே வாள்நாகபற்பஞ்சேரு
சிங்கத்தின் தாரமீறுஞ் சேர்சங்குமுடியின்தாரம்
பங்கத்தகொச்சிவீரம் பாருநீமருந்துஅஞ்சே. 135

அஞ்சுமேவகைக்குக்காலா யமுர்தத்தைவிட்டுமத்தி
கொஞ்சமாய்க்குருவுங்கூட்டிக் குழப்பிடுபீங்கான்தன்னில்
பஞ்சமோயேமம்நீரும் பலத்தினில்தடவிக்கொண்டு
மிஞ்சியரவியில்வாட்டி மேல்கீழுமுவர்ப்பூவையே. 136

வைத்தபின்சுன்னச்சீலை வளமாகமூன்றுசெய்து
ஒத்துமண்சீலைசெய்து உலரவைலப்பில்லாமல்
பத்தஞ்சுயெருவில்வைத்துப் பதனமாய்ப்புடத்தைப்போடு
சற்றுமேகாற்ருகாது தாய்பதம்பூசிப்பாயே. 137

பூசித்தபொழுதேதங்கம் பூப்போலேமெலிந்துநீறும்
நேசித்தநோய்க்குயெல்லா நீட்டுமுன்பிடிக்கும்பாரு
யாசித்ததனைவோர்பூவில் அவரவர்ப்பற்பஞ்செய்வார்
வாசித்தநோய்க்குமாகா மடைக்கட்டுப்பற்பந்தானே. 138

தானென்றதங்கபற்பந் தன்னிறமாய்ந்துபோனல்
கானென்னுநாட்டஞ்சுட்டிக் கரிநீறுக்கொக்கும்பாறு
தேனென்றபற்பந்தானஞ் சேர்த்துபின்சாக்கதானல்
ஊனென்றவுடலினுள்ளே வுபாதியுமேகம்போமே. 139

## வெள்ளி பற்பம்.

போமப்பாவெள்ளிபற்பம் புகலுறேன்லிங்கங்கெந்தி
யாமப்பாவீரம்காபி யரைக்கலாங்குமரிப்பாலில்
தாமப்பாகுருவுங்கூட்டித் தனிரூபாயரைச்சீத்தப்பி
நாமப்பாசுன்னச்சீலை நடுவில்வைத்துவாய்ப்பூசே. 140

சுத்தியசுன்னமேலே சுகமாமண்சீலைசெய்து
மத்தியாம்ரவியில்மாட்டி மணவரைபுடத்திற்போடு
வெத்தியாபத்துரெண்டு விரிக்தேரிபுடமுமாறி
பத்தியேநீராய்நீறிப் பசுமைவெண்ணிறமும்மாமே. 141

நிறமாகும்வெளுப்போயென்ன நீங்காதென்கண்ணேவிட்டுக்
குறமானகுஷ்டஞ்சூலை குன்மங்கள்கெற்பவாய்வு
பிறமானபவுத்திரமூலம் பெரும்மாடுநீர்க்கழிவும்
யறமானபற்பந்தன்னை யனுபானமறிந்துகொள்ளே. 142

## முத்து பற்பம்.

கொள்ளவேமுத்தின்பற்பங் கூறுவன்கேளுமப்பா
வள்ளவேபீங்கானுள்ளே வளமானதேனைவிட்டு

மெள்ளவேமுத்தையிட்டு வெய்யலில்வைப்பாய்மைந்தா
கள்ளமாமீனின்வாசங் கண்டபின்கழுவிப்போடே. 143

போட்டபின்சிப்புசுன்னம் புகழப்போகழஞ்சிரண்டு
வாட்டியநாலும்கூட்டி வளரம்மிதன்னில்கொட்டி
நீட்டியதேனைவிட்டு நேர்ப்பாகமைபோலாட்டி
கூட்டியேவழித்துவில்லை கொடுரவிதன்னிற்போடே. 144

போட்டதன்கல்சுன்னத்தில் பொலிவாகவெரித்துவாங்கி
மூட்டியமுத்துநீறி முழுவெள்ளைபற்பமாகும்
காட்டாதேநூலைச்சொன்னேன் கருவெல்லாஞ்செல்லுறேன்பார்
யாட்டியேபற்பந்தன்னை யடைத்துநீதொழிலைச்செய்யே. 145

## பவழ பற்பம்.

செய்வதுபவழந்தன்னைச் சேரவேகழஞ்சியாறு
கைவதுகிராம்புமாஞ்சி கழஞ்சொன்றாய்வகைக்குத்தூக்கி
கொய்வதுவீரங்காலுங் குமரிப்பால்விட்டுஆட்டிப்
பையவேபவழந்தன்னில் பத்திட்டுப்பூசிவாட்டே. 146

வாட்டிப்பின்கலசந்தன்னில் வளமாகக்குமரிச்சாற்றை
மூட்டிப்பினரைவரசிக்கு மேலேவைபவழந்தன்னை
போட்டுப்பின்சோற்றைரம்ப புத்தோளதட்டிமூடி
நீட்டுப்பின்புடத்தைப்போடு நிர்மலம்வெளுத்தநீறே. 147

## வங்க பற்பம்.

நீறுதான்வங்கந்தன்னை நேர்ப்பாகலேசாய்த்தட்டி
வேறுதான்நறுக்கிச்சாமை யுமியதுபோலேவெட்டி
பாறுதாகிலாதபற்பா டகத்தைநீபிடிங்கித்தூக்கி
நேருதான்பலமோபத்து நிறுத்ததைச்சிலைமேலே. 148

சிலையில்பற்றிவங்கந் திரள்பொடிபலத்தைத்தூவி
மேலையும்பற்படாரம்விரித்த ததைப்பத்துமட்டாய்
கால்தலையாகச்சுற்றிக் கட்டியேயிடைகட்டாக
மூலையில்கொளித்துப்போடு முதுவங்கநீரிப்போமே. 149

நீறியேபொடிபோல்சுட்ட சாம்பலைப்புடைத்துக்கூட்டி
வேறுள்ளபொறியையெல்லாம் பொரிக்கிநீகல்வத்தாட்டி
நூறுதான்புடத்திற்போட நிகரில்லாவெள்ளையாகும்
வீறுதானஞ்சிமேகம் விட்டோடுமடைத்துக்கொள்ளே. 150

## வங்கபற்பம்.

கொள்ளுமேவங்கநீற கூறுவேன்வேம்புநொச்சி
கிள்ளுமென்சாரணைவேர் கீழ்க்காயுநெல்லியெள்ளு
துள்ளுமோசசுன்னத்தில் துடியுடன்குருவுங்கூட்டி
யுள்ளுமேபுடத்திற்போட வொக்கவும்வங்கநீறே. 151

## பற்பங்கள் நிறம்.

நீறிருத்தப்படியெல்லாம் நிறமதுவெளுப்பேயாகும்
கிவறிந்தவெளுப்பையெல்லாம் வேற்நிறம்பற்பமில்லை
கூறிந்தத்தங்கமாத்திரங் குலம்பொய்யர்நிறமுமஞ்சள்
வாறிந்தப்படியேயல்லால் மற்றெல்லாமருட்டுதானே. 152

## வயித்தியர்க்குப் புத்தி,

### வேறு.

தானென்ற வயித்தியர்தான் தவறென்றில்லைத் தருமத்துக்காக வல்லோ சொல்லிப்போட்டோம், மூனென்ற வுடலறிந்து தாதுபார்த்து ஓகோகோ மருந்துசெய்தா லூணும்பாரு, கோனென்றகுருபதத்தை யடுத்துக்காத்துக் கூறினதை மெய்யென்று காட்டாயானல், நானென்ற சொல்லும்விட்டு யொழிந்துதானல் நல்லறிவு யுகம்போயு மழியாதன்றே. 153

அறியாமல் பண்டிதந்தான் கெட்டுப்போச்சு ஆகாகா செந்தூரங் கறுத்துப்போச்சு, பிறியாத தயிலமதை யெறிக்கலாச்சு பேய்மக்காள் நூல்களைத்தான் விரித்துப்பாரு, குறியான குளவியல்லோ புழுவைக் கவ்வி கூடமைத்துக் கொட்டிநினை வேறேரூபம், நெறியான சாஸ்திரந் தான் குருவேயாகு நித்தநித்தம் பார்த்தவர்க்கு நேர்சொள்வாளே.

## தயிலப்பேர்.

சொல்லிவந்த வயித்தியந்தான் ரண்டுலக்ஷந் தொகையதிலே தயில மது கோடாகோடி, சொல்லினதோர் தயிலத்தில் நாலும்போலே சூட்சமில்லை மற்றதெல்லாஞ் சுருக்குமெத்த, சொல்லுறே னுலுக்கு மேக ராசாங்களுசொற்பெரிய வேலாதி சந்தனாதி, சொல்லியதோர் விஷமுட்டித் தயிலம்நாலும் தொகைதவரு வைத்தவன்ருன் பிர்மாவாமே.

## தயிலபாகந்தப்பிவருங்குறிகள்.

வாமிந்தத் தயிலங்கள் வைத்தாயானல் மருந்துதொகை யெடை பாகஞ் சரியானலேற்கும், போமிந்த மருந்துகுறை யெண்ணெய் தானும்போல்லாது மருந்துமீறில் காறமெத்த, ஏமிந்த யெண்ணெய்மீறில் தயிலமெறக்க வென்மகனே நாட்செல்லு மெல்லார்க்குந்தான், யாமிந்தத் தயிலத்தில் மருந்துமீறி லதைமூழ்கில் சிரம்வாளு மரிந்துபாரே.

வரண்டிருமி யுளையுண்டாம் வாததேகம் வளர்பித்தங் கூடிநின்ருல் சயமேகாணும், திரண்டுநின்ல நீர்விஷங்கள் சூலையாச்சு சிரத்தில் நின்று குத்துதல்தான் காசுமாச்சு, பிரண்டசிலேற் பனத்தில்வாதம் புங்கில் பித்தர்களே நீரிழவு பெருத்துக்காணும், பிரண்டபல வாதபித்த மையமீறில் பிரபலமாய்ச் சலம்வருகுஞ் சன்னிதானே. 157

சலம்வருங்கா ணறிந்துபின்னே செய்யானுகில் சக்கியிலே கல்லெறிந்த வாறேபோலாம், தளமறிந்து யினமறிந்து சாத்திரமும் பார்த்துத் தாயைநித்தம் பூசித்துத் தனித்திருந்து, வளம்பெறவே மானதமுந் தியானஞ்செய்தால் வழிப்பாடு கூடுமல்லால் மற்ரோர்க்குத்தான், களந்தனிலே துவரையடி சிதறிப்போம்போல் கண்டதெல்லாம் பின்காணுதோடிப்போமே. 158

## பூசைகுண மகத்துவங்கள்.

போமப்பா பூசையில்லா பாதகர்க்குப் பொருளோடு யிருளுமில்லை புலையனவார், ஆமப்பா பதினெண்ய்பர் பூசைசெய்தார் ஆத்தாளு மவர்களுக்கு அருளிச்செய்தார், காமப்பா கலியுகத்தில் மிஞ்சிப்போச்சு காண்பதில்லை கனவிலுமே யொளித்தாளென்ருய், ஏமப்பா வென்ருக்கால் சொல்லக்கேளு யேகபா முண்டென்று பூசிப்பாரே. 159

பூசையிலே ஆண்பெண்கள் வெகுபேர்கூடி பொய்க்கூத்தால் குடித்தவெறி யாலேகாமம், ஆசையிலே தத்தளித்து வரம்பில்லாம லடிபிடியும் வாய்குளரிசண்டையிட்டுப், பேசையிலே கண்மூடி ஓங்காரத்துப் பெண்டுபிள்ளை யின்னாரென் றறிவிலாமல், வாசையினால் தீனிரம்ப தின்றுவூனை வையகத்தில் பூசையிது பெருத்துப்போச்சே. 160

பெருத் திந்தக் கலியுகத்தில் சிந்தர்கொஞ்சம் பிரபலகர் வாதிமெத்த மயங்கிசெத்தார், வருத்தமிக வந்துவிடுந் தீனியாலே வாய்க்குநமகோடிதனக் கொன்றே சித்தாம் நிருத்தமிடு மாயிதந்தான் மறைந்துபோனாள் நெஞ்சுரையா வஞ்சகர்செய் நிட்டூரத்தால் திருத்தமாய்க் கலியுகத்தில் பூசையொன்று செப்புகிறேன் திருநடன வொளிவுயாமே.

ஒளிவான பூசையடா வாதிக்காகு முத்தமமாம் வயித்தியர்க்காம் ஞானிக்காகும், பழியில்லா மாந்தருக்காம் கற்பாதிக்கும் பானான சித்தருக்கா மவுனிக்காகும், சுழிமேலே பூரணத்தைப் பார்த்தோர்க்காகும் சுருதியிலே வாசியிலே நாட்டாலாகும், வெளியான மேலோர்க்கு மாகாதிந்த வேதாந்த ஆயினிட பாதந்தானே. 162

பாதத்தி லர்ச்சிக்க வகையைக்கேளு பதியான யில்லறத்தை சுத்திபண்ணி, போதமென்ற மவுனத்தில் மனதைவூணிப் பொற்கொடிக்கும் வாணிக்கும் பூசைபண்ணி, பேதையர்கள் கலியுகத்தில் பூசைக்காகப் பெண்ணாலே சதுர்யுகம் நாலும்பாழாய், வாதமுதல் மருந்துமணி மந்திரஞானம் வாசியோக சமாதிநிஷ்டை கற்பம்போச்சே. 163

கர்மாளி களுக்குமிந்தப் பூசையாகா கற்பசித்தி வாதயோக சமாதி நிஷ்டை வர்மாளி, ஞானமணி மருந்துமந்திரம் வாயாது சாஸ்திரங்கள் பதினெண்ணூறும், தூர்மாளி ஆனந்த லகிரிபூட்டி தொடர்ந்தேறிப் பூரணத்தைப் பாராணேயோ, கர்மாளிமுன்னைவிட்ட குறையினாலே சகலசித்தும் கைவசமாம் பூசைசெய்யே. 164

பூசையிலே நாலுவித மூன்றிக்கேளு புகழான லலாடத்தில் மவுனபூசை, பூசையிலே ஞானகுரு தியானபூசை, பூரணத்தைப் பார்த்திருந்தா லகிரிபூசை, பூசையிலே சக்கரபத்துக்கும் புகழ்பெரிய யந்திர

முஞ் சிலையுஞ்செய்து, பூசையிலே நாலுவித லகிரியூட்டி பெண்பிள்ளை பலர்கூடில் கிரிகையாமே. 165

ஆமப்பா லகிரியிலே யனேகமுண்டு ஆனந்த லகிரியப்பா வமுர்த பானம், ஆமப்பா கோரக்கர் மூலிதன்னி லதுநாலு முதற்றாந்தா னதீ தமுத்தி, ஆமப்பா நாலுவித மறியவென்று லப்பனே லேகியமும் சூரணமும்பாணம், ஆமப்பா குடிக்கிறது நாலாம்பட்சம் அதுவிட்டால் வின்னுமொரு லகிரியாமே. 166

லகிரியா வஸ்துபான முக்திமுத்தி நட்பினு லிரண்டுமெய்து மறிந்துகொள்ளு, லகிரியடா நீச்சருக்காம் கள்ளுவாசம் நாடாதே நால்வழியு மறிந்துசொன்னேம்,லகிரியடா மனவரக் கால்மூட்டநாக்கு நுனி மேல்வாச லூடுதாக்கி, லகிரியடா வமுர்தகளை வருதுங்கும்பி நற்கனி தேன் குடமுடைந்த வாரும்பாரே. 167

ஆருகுஞ் சமயங்க ளுள்ளும்பின்னும் அவதரித்த சமயத்தி லுட் சமயங்வரமம், பேருக நின்றநிலை தவறிவிட்டால் புரசமயத் தோர்க்குமடா பேய்போலாடும், வேருகுஞ் சேதியெல்லாம் விரித்துச்சொன்னேன் வெட்டவெளி யாகுமடா நூலைப்பாரு, தூருகுந் துர்ச்சனரோடிணங்காதையா துலையாத பாவம்வரும் வாமத்தாலே. 168

வாமத்தா லட்டகர்ம மெட்டுமாகும் வாதமொடு மணிமந்திர மருந்துஞ்சித்தி, நேமத்தால் சிவனெடுமால் சத்திதேவர் நினைத்ததெல்லாந் தியானிக்க விரதங்காக்க,சாமத்தில் வயிரவனைத் தாயைப்போற்றி தனித்திருந்து தவஞ்செய்யத் தருவார்சித்தி, காமத்தா லலையாதே சொல்லக்கேளு காமகே சரிதன்னைக் கட்டிக்கொள்ளே. 169

## காமகேசரி குளிகை.

கட்டிவிடு விந்துதனை யணைந்தாலுந்தான் காமத்தால் செனித்த விந்து யல்லாவில்லை, தொட்டவுடன் விந்துதுடை வழியேயோடில் துன்பம்வரும் விந்தழிவு வந்தால்கேளு, வெட்டிவிடு மருந்திதுதான் வேறேயில்லை வித்தெல்லாம் விந்துவல்லா துண்டோசொல்லு, திட்டமிது செய்தறிந்த வித்தைசொல்வேன் தேகத்தில் விந்துநஷ்டம் வாலாகாதே. 170

ஆதியென்ற விந்துவுக்கு அழிவுவந்தால் ஆனலு மரியாலு முடியாதையா, பாதியென்ற பெண்ணுமங்கே மனதுவேரும் பக்குவத்தில்

சஞ்சரித்தால் புத்திருண்டாஞ், சாதியென்ற திருவகைக்கும் விந்து தெய்வஞ் சஞ்சார மிஞ்சிட்டால் மேகமுண்டாம், வாதியென்றால் சடலத்தைப் பேணுவான்பார் வயித்தியந்தா னறுநூற்றில் மருந்துபாரே.

பாரிலுள்ள வித்துவகை நெல்லிவித்து பருத்திவித்து பீசங்கம் பாம்பைவித்து, ஊரிலுள்ள சூரிவித்து முருங்கைவித்து யுற்றகஞ்சா வித்துடனே செம்முள்ளிவித்து, நேரிலுள்ள யரசம்வித்து யமுக்குரு வித்து திருவாத்தி வித்துடனே வில்வவித்து,நீரிலுள்ள யோரிதழு நீர் முள்ளிவித்து நெரிஞ்சிவித்து முள்ளிவித்து ஆவரையின்வித்தே. 171

வித்தான முசுமுசுக்கை யகத்திவித்து விரோசனமாம் புரசம்வித்து முசுட்டைவித்து, பத்தான யவுரிவித்து சுண்டைவித்து யாலம்வித்தும் வித்துயா மணக்கம்வித்து, சித்தான வூமத்தை சிறுபூளைக்காலி செய்தகரை கற்றாமரை தினைசுரையின்வித்து,முத்தான திரிபல்லையும் கருவேலம்வித்து மூலிகையா மின்னிமகிழ் வன்னிவித்தே. 173

வன்னியா மருந்துடனே யகத்திவித்து வளர்நிலத்தின் பனைகிழங்கு கூடவேதான், கன்னியா கரிக்கருணை புளிகடலைவேருங் காட்டில் வளர் கருணையுட னருநீண்டிக்கிழங்கு,சென்னியா மரம்பைமூலம் பல்லிக்கொட்டி சிறுகிழங்கு வச்சிரவள்ளி கோவை யப்பைக்கிழங்கு, பொன்னியா முந்திரிகை பேனீச்சுச் சமுத்திராப் பூசினிக்காய் வில்வத்தின் பழச்சதையுமாமே. 174

சதையான வாகைவிளா முருங்கை வேல்வேம்பு தனியிலவம் பிசினுடனே பாதிக்காய்பத்திரி, விதையான தேத்தானுஞ் சிவனார்வேம்பு விழுதிவித்துஞ் சிவந்தநா யுரிவித்து, சிதையான யமுதவள்ளி சுத்தி செய்தமாவும் சீனியொடு கற்கண்டுசர்க் கரையுஞ்சமனாய், பதையான கூகைநீர் குருசானி ஓமம் பவளமுத்து வெள்ளியுடன் சொர்ன பற்பமஞ்சே. 175

அஞ்சுமே வகைக்குஒரு கழஞ்சாய்த்தூக்கி யப்பிரேகச் செந்தூரங் கழஞ்சியதில் சேர்த்து,மிஞ்சாமல் விரைபிசினுங் கிழங்குமாவு மீறாமல் வகைக்குஒரு கழஞ்சாய்த்தூக்கி, மஞ்சிவருங் கஸ்தூரி குங்குமப்பூ காரமருள்பூவுங்கோ ரோசனை கொண்டேகிழங்கு, தஞ்சுசடா மாஞ்சிசந்தனந் தேவதாரம் கோஷ்டந்தா ளிசமக்கிரா கிராம்பாத்தை பச்சை

பச்சையாம் வங்காளப் பச்சைப்பூலாக் கிழங்கு பரிவாகச் சரிக்கு வகைகழஞ் சாகச்சேர்த்து, கொச்சையாம் வெள்ளாட்டுப்பால் நணைய விட்டுக் கோதில்லாத் திடத்துமைபோ லுருட்டிக்கொண்டு, நச்சையாம் பற்பஞ்சுஞ் செந்தூரித்து நானிலத்தில் மருந்தையெல்லா மிடித்துக்கொண்டு, இச்சைபெறக் கல்வத்தி லிளநீர்தேங்காய்ப் பாலுமிரு சாம மரைத்தபின்பு ஆவின்பால்வாரே. 177

வார்த்தரைப்பாய்க் கன்னியர்கள் முலைப்பால்சாம மைந்தனே மூதண்டக் கியாழஞ்சாமம்,சேர்த்தரைப்பாய் கன்னலின் சாறுசாமஞ் செயமான கொடுப்பைவேர் கியாழஞ்சாமம், பார்த்தரைப்பாய் பன்னீரில் சாமமாட்டுப் பரிவான மலர்க்காயின் கியாழத்தாலே, ஆத்தகன்று யரைத்துலர்த்திப் பொடியதாக்கி யப்பனே திரும்பவுந்தா னரைக்கக் கேளே. 178

கேளப்பா பொடிதனைக் கல்வத்திலிட்டுக் கொடியான முந்திரிகை விட்டுநன்றாய் பாளப்பா மெழுகுபத மரைத்துமேதான் பக்குவமாய் மிளகுபோ லுருட்டிக்கேளு, ஆளப்பா கடலைபோல் நிழலுலர்த்தி யழகான வெள்ளியுட சிமிழில்வைத்து, வாளப்பா நவசாப நிவர்த்திசெய்து வசமாக மோகினியைத் தியானஞ்செய்யே. 179

செய்யவே பசும்பாலில் குளிகைரெண்டு செயமாக நாளொன்றுக் கிருநேரந்தான், பையவே கொண்டபின்பு பாற்சோறுண்டு பாலகனே புகையிலையும் புளியுந்தள்ளு, அய்யனே நாளொன்றுக் கனுபோகிக்க அறுபதுபேர் பெண்களிலு மடங்காதப்பா, விந்துசையோக விந்துமூளை சிரசிலேறுஞ் சார்ந்தமுண்ட மிதுகாமகேசரியே. 18

சரியாக யிதற்கீடு வொன்றுமில்லை தாதுவிர்த்தி யில்லாவிட்டால் சடலம்போச்சு, மரியான விந்துவது சிரசிலேற மகத்தான குளிகையிது வளமாய்ப்பண்ணு, அரிதான மங்கையரும் குளிகைகொண்டா லாயிரம்பேர் சேர்ந்தாலு மடங்காதப்பா, துரிசான ரசகுளிகை போலேயாகுஞ் சொர்னம்போல் தேகமுமாம் துரைமதனவேளே. 181

வேளென்ன வுனக்கீடோ தம்பனந்தானென்ன வெகுசுருக்கு வெகுசுருக்குத் தம்பனந்தான்,ஆளென்ன பெண்களைத்தா ளனுபோகிக்கி லடுத்துடனே விந்துவிழு மரிவைமனம்வேரும், நானென்ன குளிகைசெய்து அனுபோகித்தால் நழுகயிது விந்துவது நளினமெத்த தேனென்ற, விந்துவது தம்பனமேயானல் செகத்திலுள்ள மாதர்களுன் வசமாவாரே. 182

வசமான மாத்திரையைப் பாலில்கொள்ள மாணிடற்குத் தீரும் நோய் சொல்லக்கேளு, நிசமான மேகமிருபத்தினாலும் நீர்ச்சுருக்கு வெள்ளைரத்தம் பின்னெரிவுகாந்தல், விசமான நீர்கடுப்பான் படர்வெளுப்பு விரிவுபத்தும் விஷவாத மேகவாய்வு, தசவாயு அஸ்தியிலே பாய்ந்தவெட்டை தேகபித்த நீர்வேர்வை தாகம்போமே. 183

தாகமென்ற தாகமெல்லா மடங்கிப்போகுந் தாதுநஷ்டமாகிவிடு மனுபோகித்தால், போகமென்ற விந்துவது வூரும்பாரு பொறியான அஸ்தியெல்லாங் குளிர்ந்துபோகும், வேகமென்ற சூலையெல்லாம் விஷநீராலே மெய்ப்பழுத்த பாண்டுசோகை விஷநீராலே, தேகமதி லிளைப்பிருமல் காசக்ஷயரோகந் திமிருகுஷ்டம் நவமூலம் வருமேகத்தாலே. 184

## விஷநீரால்வரும் வியாதிகள்.

மேகந்தான் வாரியிலே சலத்தையுண்டு மேதினியில் பொழிந்த பின்பு சிவசெந்து, ஆகமமாம் நால்வேத மாறுசாஸ்திரம் அங்கங்கே நடப்பனவு மூர்வனவுமாச்சு, வேகமதாய்ப் பறப்பனவு நடப்பனவுமாச்சு வெகுஉந்த செல்வமோ தொகையுங்காணேன், போகசை யோகமெல்லாந் தீனிதன்னில் பொல்லாத அண்டபிண்டஞ் சரிதான் பாரே. 185

சரியாக மேகத்தா லபானவாய்வு தான்புகைந்து மேலேறி கபாலச்சூடாம், பெரிதான மேகத்தா லஸ்திவெந்து போமப்பா தசை வெந்து ரத்தம்வற்றி, பிரிவாகி தசவாய்வால் மந்தங்கொண்டு பெருந் தீனி மலபந்தமுதானவாய்வு, விரிவாகித் தேகமெல்லாம் விஷநீராலே மெய்பழுத்து மேகமென்ற திருபதாச்சே. 186

ஆச்சந்த மேகத்தா லனந்தங்கோடி ஆகையினால் நரம்புக்கோர் வியாதிஆச்சு, தேச்சிந்த தசவாய்வால் வாதமேகந் திமிருபத்து விஷநீரால் சயமிருமல்காசம், வாச்சிந்த பித்தவாய்வு கபாலத்தேறி வளர் வேகம் வெள்ளைரத்த மக்கினியின்மந்தம், பேச்சினித்கா னேதுவை யோ சிலேற்பனத்தின்மேகம் பெருத்த ரத்தம்வற்றிவிடுங் கிராணி பாண்டே. 187

வத்திவிடு மேகத்தா லஸ்திவெந்து வரணமே நாபியெல்லாம் பாசிபற்றி, அஸ்தியுட்குள் றத்தமெல்லாம் வற்றிவற்றி ஆகாகா

புகைந்தேறி வேர்வதாகி, கத்தியுமாங் கிடாவுமா மேகமப்பா கண்ட கண்ட நோய்களெல்லா மேகராசன், பத்திபத்தி யாய்க்கட்டுங் குதிரைபோலப் படரான நோய்களெல்லாம் வருகும்பாரே. 188

வருகுமே வாதமேக நாவிணுலேவாய்வடைப்பு நீர்க்கடுப்பு சிறுப்போடுபொருமல், பெருகுமே கல்லடைப்புத் தசையடைப்பு வீக்கம் பின் வருமேவாதசயம் வாதபாண்டுகாசம், சருகுமே பித்தமேக மாறுங்கேளு சதாநித்திய மண்டையிடி கபாலவாய்பு, பெருகுமேயொரு புறத்தி லிடியுங்காணும் புண்ணாகி வெள்ளைவிழும் பூவிலையிற்கிரந்தி.

இலைகசக்கி வெயிலில்வைத்த பாவனைபோல்தேக மென்னசொல்வேன் வெகுசோடி கரப்பானப்பா, தலைசொரியும் விஷநீரால் மயிருதிரும்பாரு தாகமென்ன வியர்வையென்ன தலைசுழற்றும், வாந்தியுமே வாய்வோடு பித்தங்கூடி கண்மாசி படர்ந்தாற்போல் கண்ணிமையும்புண்ணும், வலைகட்டி மீன்பிடித்தான் போலாங்கேளு வலைவழுப்பாஞ் சிலேற்பனத்தின் மேகம்பத்தே. 190

பத்தான சிலேற்பனத்தில் மேகங்கேளு பாசிபத்தும் நெஞ்சுக்குள் கபமிருமல்கோழை, சத்தாகுஞ் சத்துக்குள் யிளைப்புக்காணும் சதாநித்த வெள்ளைவிழும் மூத்திரத்துமுன்பின், வித்தாக வளர்ந்து தடா காசமாறு மென்மேலும் வேர்வையுமாம் விஷநீராலே, கத்தாவே தஞ்சமென்று சட்டியொன்றுவைத்து காரிருமல் தும்பிநித்தங் கழியும்வாறே. 191

கழிவாகுந் தேகமப்பா காணக்காணத் தசவத்தாய் வற்றிவிடு மன்னவாசங்கேழ்க்கில், பழிகாரர் முகத்திலினி முழியார்போலே பாண்டமெல்லாம் வெளுக்கடித்து ரத்தம்போக்கி, சனியாகி யடிக்கடிநாணீரேயேற்றுஞ் சாசத்துஉடம்பெல்லாம்பற்றிவீழும், நழியாகிநாளிலே தடித்துப்போட்டால் நட்பிலே புண்ணாகி சீழுமாமே. 192

ஆகுமே அடிக்கடிதா னீரேபோகு மனலேறியுதிரத்தில் கனப்புக்காணும், வேகுமே யுடம்பெல்லாங் கனத்துவேர்வை மேகபித்த நீர்தாகம் தொண்டையரிகுரலாம், போகுமே தாதுநஷ்ட நித்திரையில்கழியும் பெண்கள்சென்று அநுபோகஞ் செய்தாற்போலே, சாகுமே காலோடு கையசைந்து நொந்துசார்ந்த பித்தநித்திரையில் கனவுமாமே. 193

கனுக்காணு மேகத்தா வித்தனையுமாச்சு கைக்கடங்கா நோய்க ளெல்லா முன்னூல்சொன்னோம், வினுக்காணும் விந்துநஷ்ட மாத்தி ரையைச்சொன்னேன் மேகத்துக் காதியென்ன சொர்னம்சொர்ன, மனுக்காணும் வங்கத்துக் கெடுத்ததென்ன மப்பிரேக வங்கம்வெ ள்ளி பவழமுத்து, யினுக்காணும் பிள்ளையெல்லா மேகத்துக்குப் பிலத்ததல்லால் தாதுநஷ்டம் வருகும்பாறே. 194

வாரான மாத்திரைக்குப் பற்பஞ்சேர்த்து மைந்தனே விறை பிசினுங் கிழங்குபழ மாவும், கூரான சுவர்க்கங் கூட்டியாட்டி கொடுத் திடு வாங்கிப் பசும்பாலில் குடித்தாயானல், மாராத மேகமெல்லா மகன்றுபோகு மப்பனே தசவாய்வு அபானம்புக்கு, வீருன மேக முடன் வாய்வுபோனல் விந்துஅஸ்தி வேகாது குளிரும்பாரே. 195

குளிர்ந்துவருஞ் சந்திரனைப் போலாங்தேகங் கொப்பளித்த விந் துவது சிரசிலேறு, மளிந்துபோங் கன்னியர்க்கு வுன்மேலாசை ஐ யையோ போகம்விடா தருமைமெத்த, களிந்துபோம் பெண்களுன் னைத் தொடுமுன்போகங் கழண்டுவிட்டால் கன்னியற்கு மனம்வெ றுப்பாம், அளிந்தவிந்து கட்டிநின்று அனுபோகிக்கில் ஆசையுன்மே லனுதினமு மகலாதென்றே. 196

ஆசையாங் கன்னியர்க்கு வசீகரமுமுண்டா மதிமோகி மோகன மாமலைப்புஞ்சித்தி, பூசைபண்ணி மோகினியைத் தியானம்பண்ணிப் புகட்டிவிடு குளிகைதனே யாவின்பாலில், பாஷையிலே பரிபாஷை நூல்தோறுமுண்டு படைபொறுக்கப் பதியிருக்க முன்னணியும்பின் னும், பேசையிலே கருமரைப்போ லொன்றுமில்லை பெரிதான அறு நூறும் பேணிப்பாரே. 197

## வயித்திய சாஸ்திரங்கள்.

அறுநூற்போ லொருநூறு முலகிலில்லை யழகான யிந்நூல்தா னறுநூறப்பா, பெருநூல்தாணுயிரந் தன்னூறுண்டு பிதற்றுதே ஆயிரத் திருநூர் சூட்சம், வருநூல்தான் முன்னூறு செந்தூரமாகும் வழங்குகின்ற கர்மகாண்ட மூன்னூர்சொன்னேன், கருநூல்கா னூறு பங்காய்ப் பிரித்துச்சொன்னோம் கர்மகாண்ட முன்னூறு பின்முன் னூறே. 198

முன்னூறு நூற்றைம்பது மன்பதுந்தான் முறையாக விருநூறு மூன்றுங்காண்டம், பின்னூறு முன்னூறு நடுவில்நூறும் பேசாதே யெண்ணூறும், பிரிந்தேனலா, பன்னூல்தா னிருநூறு முலகில்நீறும் அழகான சூஸ்திரந்தான் முப்பத்தஞ்சு, தன்னூலாய் பின்னூல்தா னறுனூறிந்த சாஸ்திரத்தில் வெகுவிபாஞ் சார்ந்துபாரே. 199

பாரினில்தா னென்பதுண்டு பார்க்கவேணும் பழக்கமில்லை தே சத்திலின்னூல்ரண்டும், யார்கொடுப்பார் குகைதனிலே யிருக்குநூலை யதிசயந்தா னறுனூறு மெண்பதுமேபோதும், பேர்தொடுப்பாய் ரண்டுக்ஷம் பெருநூலாதி பிரபலமா லட்சமதைப் பாதியாக்கி, கார் கொடுத்த மழைச்சாரல பேய்ந்தாப்போலே கரையற்ற சாஸ்திரந் தான் கண்கொள்ளாதே. 200

கொள்ளாதே பெருநூல்தான் பதினயிரத்தில் குளறிவைத்தே னடியுட தாரணியின்போக்கு, கள்ளாவா புலியைநீ குத்துவென்று காட்டிவிட்டேன் பொருள்களொன்றுங் காணுவாறு, விள்ளாதே நூல் கோர்வை கிட்டிற்றென்றால் விதியாளி வயித்தியந்தான் மென்மேலும் பார், எள்ளான சிறுவிரைக்குள் தயிலம்போல யெடுத்ததுகை யாயி ரத்தன் னூரும்பார்த்தே. 201

பார்த்துநன்றாய்ச் சுருக்கிவிட்டே னறுநூறுமுன்னூல் பார்மக னேஆயிரத் திருநூறும்பார், சேர்த்துநன்றாய் விரித்தொடுக்கித் திற மாய்பாடி செத்தபிண மெழுந்திருந்து திரும்பிப்பேசும், கூர்ந்துநன் றாய்ப் பாடிவிட்டே னறுனூறு குகைக்கல்லைத் துலைத்ததிலே கூர்ந்து வைத்தேன், கோர்த்துவிட்டே னெண்பதுதான் சூக்ஷாசூக்ஷங் கூறி னனூல் பார்க்கவுந்தான் பெருநூல்பாரே. 202

பெருநூலில் குறுக்கிவைத்த சாஸ்திரத்தின் பேர்கள்பிரபலமா மாயிரத்து ஐந்நூற்றென்று, குருவினமாஞ் செயமுரைக்கு மாசான் வேண்டாம் குற்றமில்லைஆயிரத் திருநூற்றென்று, திருவிளக்கா மேற்றிவைத்த தீபமொன்றில் தீவட்டிகொளித்தினுப்போல் கர்மகா ண்டம், வருவினையால் வியாதிவந்தால் வகையாய்த்தீர்ப்பான் வாதி மகன் மருந்துசெய்வா னெண்ணூர்தானே. 203

எண்ணூற்றி லைம்பதுதான் குருவாய்ச்சொன்னே னறிதப்பா நூற்றைம்பதுக்கு மிதுதான்வேணும், முன்னூற்றில் செந்தூரமுறை

யாய்ப்பாரு முன்வழலை செய்தவனே முசியாவாதி, அன்னூலை குறுக்கியப்பா முப்பத்தஞ்சா யறைந்துவிட்டேன் நீற்றினமாம் வெள்ளையாக, இன்னூலில் வெள்ளையைந்தும் பூபதியாய்விட்டே னிதுக்கீடு வொன்றுமில்லை சிவன்தான்பாரே. 204

பாருநீ முன்னூல்தா னறுநூறென்று பாடிவிட்டேனாயிரத்தன்னூறுசூஸ்திரம், சேருநீ யதைக்குறுக்கி ஆறுபத்தாய்ச்சொன்னேன் செகத்திலே கிட்டாது அதிகமெத்த, கோருநீ சமுத்திரத்துக்கொக்குஞ் சாஸ்திரங் கூறிவிட்டேன் குருமுடிக்கச் செயநீர்தீநீர், வாருநீர் சரக்கையெல்லாம் நீற்றுநீறு வரிசையாய்ப் பிலமடக்கச் செந்தூரமாமே. 205

மடத்துமேயந்நூ லறுநூறும்பார்த்து மைந்தனே மருந்துசெய்ய வகையைக்கேளு, கிடக்குமே வியாதியெல்லா மென்றுபோடும் கீர்த்தியுமோ மெத்தவுமாங் கிளைகள்தோறும், நடக்குமே வயித்தியந்தான் சொன்னபடிகேழ்க்கும் நாட்டிலிந்த நூலில்லை நடப்புக்கேதான், குடத்தில்வைக்க விளக்கெல்லாங் குன்றிலேத்துங் குறும்பரே நூலமைந்தால் கொடுக்கொண்ணாதே. 206

ஒண்ணன சீஷனுக்குக் கொடுக்கவேணும் உலுத்தர்வந்து யெதிரிட்டால் செயிக்கவேணும், கண்ணன சூத்திரத்தைக் காட்டாவண்ணங் கபடாகச் சபையிலேதான் போடவேணும், மண்ணனத் தை வாரி வாயில்போட்டு மடையர்போல் வயித்தியஞ்செய்வார் நூலில்லாமல், வண்ணனைக் கூட்டாமல் வயித்தியமேசெய்தால் வாதிமகனல்லவல்ல மாடுதானே. 207

மாடாகத் திரியாதே நூலைப்பாரு மதிகெட்ட சண்டாளர் வருமேபாவம், திருடாக வயித்தியமே செய்யவேண்டாந் தீரும்நோய் தீராது ரண்டும்பாரு, குருடர்களாய்க் கிணற்றில்போய் வீழ்குமாப்போல் குற்றமிக வந்துவிடுங் குடிகட்கெல்லாம், பொருளாசை மிஞ்சிவிட்டால் நரகமெய்தும் பொல்லாத ரண்டுலகோர் பேசுவாரே. 208

## தேசாக்ஷரி பூபதிமாத்திரை.

பேசாமல் சொல்லுகிறேன் பூபதிதானென்று பிணங்திரும்பிப் பேசுமடா மருந்துகேளு, ஆசானும் சூதம்லிங்கம் லோகவங்கம் அப்பிரேகம் சலாசத்து அறியின்தேவி, வீசாதே ஒருத்தருக்கும் கெவுரிகந்தி விருதுபெற்ற தாம்பரமாம் பத்துமாச்சு, கூசாதே செந்தூரம் புகழஞ்சொன்ருக் குப்பிவைப் புடத்திலும்நீ வைத்தெடுத்துக் கொள்ளே. 209

எடுத்துநீ கண்டெடைக்குப் பாதிசூதமென்மகனே சூதயெடை பாதிபூரம், விடுத்துநீ பூரமென்ருல் ரசகற்பூரம் வெற்றிபெறக் குப்பிவைப்பே வேணும்வேணும், கொடுத்ததுநீ பூரமெடை பாதிவீரம் தொள்கியொக்கக் கல்வத்தி லரைக்கும்போது, தொடுத்திடுநீ வெண்காரங் துருசுவெள்ளை தோடெடைத்து நஞ்செடுத்த வாளஞ்சேரே.

சேரப்பா முன்மருந்துக் கிடையேகேளு செந்தூரம் பத்தாகு மாற்றெட்டேமுக்கால், தாரப்பா துரிசியொன்று காரமொன்று துடுக்கான வாளமொன்று ஆரக்கேளு, பேரப்பா ரண்டுபத்து வொன்றேமுக்கால் பிலக்கனன்ருய் வெடியுப்பு நீராலாட்டி, காரப்பா வாய்கண்ட கலசத்திலிட்டு கைவிரலால் செம்மாதே கம்புகொண்டுசெம்மே. 211

செம்மையிலே தொட்டுவிட்டா லுடம்புகளில்பாதி சுட்டாக்காலாறிவிடு மிதுவாராது, கம்மயிலே மேலோடு தட்டுமூடி கவசமிகச் சுண்ணும்பு சீலேசுத்தி, தம்மையிலே தூர்கனத்த தாழியொன்றில் காரியுப்பை யரைத்துநன்ருய்க் கையால்செம்மி, னம்மையிலே தாழியுட்குள் நாலங்குசம் நலமாகக் கலேயுமதை நடுவில்வையே. 212

வைத்ததின்மேல் வேறுப்பை வாரிச்செம்மி மைந்தனே மறுதாழி கவிழ்த்துமூடி, நைத்ததின்மேல் சந்துவா யிருக்கச்சேர்த்து நாலாறு சீலேசெய்து அடுப்பிலேற்றி, பதத்திலே தீயெரிப்பாய்த் தீபம்போலப் பக்கத்தில் பரைபூசை பாங்காய்ச்செய்து, கைத்ததிலே முத்தியு மூன்றுசாமங் கைம்முரையாய்க் கிட்டிருந்து காத்திருந்தே.

காத்திருந்து யெரித்தகவுஞ் சோம்பினுக்கால் கைப்பூத்தா லசடுவருங் காணுதொன்றும், பார்த்திருந்து நூலேத்தான் பையச்செய்தால் பழுதுவந்தால் திருப்பவுமோ பருவமாகும்,கூத்தறிந்து தொழில்களை

த்தா னென்றேடொன்று குறைக்கிறதுங் கூட்டுறதுங் குறிப்பாய்ப் பார்த்து, ஏத்தறிந்தால் செந்தூர மேல்நாழித்தூரி லெண்மகனே ரூபாய்போல் வெளுத்துப்போமே. 214

வெளுத்துவந்த பதம்பார்த்து யிறக்கிப்போடுவெந்தசட்டியாறு முன்னே திறவாதேகேள், பளுத்துமெள்ள வேயிருந்தால் பாரான் வாதி படுபாவி செய்தொழிலாற் பறந்துபோகும், கொளுத்துநல்ல செந்தூரம்வெண் சிவப்பாயிற்குங் கொட்டிநன்றுக் கலுவத்தி லிஞ் சிச்சார்விட்டு, இளுத்துமைபோ லாட்டியதை ஆலம்பழம்போ லதை யுருட்ட திசாக்ஷரியாம் பூபதியென்றேதே. 215

ஓதிடுவாய் தேசாக்ஷரியாம் பூபதியையப்பா ஒருபணமா னிடை கொள்ளு அநுபாணத்தோடே, வாதிடுவாய் வயித்தியனே வாவாவெ ன்று வருகிறகோ யறிந்துசெய்ய வகையைக்கேளு, சூதிடுவாய் சூலே பதி னெட்டுந்தீருஞ் சுணங்கன்போல் முடக்குமுட் டுளைச்சல்தீரும், பாதிடுவாய் பாண்டுவுடன் குட்டம்போகும் பறக்குமடா சன்னியெல் லாம் வலிகள்போமே. 216

வலியஞ்சும் குணமோடு வாய்வுபத்தும் வாதமென்ற தெண்ப துவும் விஷநீராகும், சலியாதே காசமறுங் கரப்பன்புண்கள் சாய ரட்சை குளிர்ந்துவரு மிரைப்புத்தீரும், புலிபோலே பாயுமடா நோ யைக்கண்டால் புகலாதே மருந்தினுட போகதூரம், கலிகால நோய்க் கெல்லாம் ராமபாணம் காட்டினே னதுபோல வெகுபேர்க் குண்டோ. 217

உண்டென்று மருந்துசொல்லி வியாதிசொன்ன லொருகோடி நூல்வேணு முரைத்தேன்முன்னே, கண்டுபெரு நூல்பார்த்து வியா திகண்டு கடசியிலே சொன்னமருந் தெல்லாஞ்செய்தா, லுண்டுடுக்க வறுமையில்லை லோகத்தோர்க ளுன்கையில் மருந்துகொண்டால் சித்தி யுண்டாம், பண்டுநீ செய்தவத்தால் முன்னூல்கிட்டும் பார்த்தவர்க்கு மணிமந்திர வவிழ்தஞ்சித்தி. 218

சித்திபெற்ற வயித்தியனைத் தேடார்லோகர் திரும்பொருத்தன் சொன்னமொழி கேட்டுக்கொண்டு, பத்திவைத்து அலைவார்கள் பணம்போமட்டும் பார்த்தறியாப் பண்டிதனு லுயிரும்போகும், எத் திளத்திப் பிழைப்பனென்று பொருளைவாங்கி யென்னசெய்வேன்

மருந்தினால் தீராதென்பார், முத்தியுமோ யில்லையவன் மருந்துகொண் டால் மூதேவி வயித்தியனு லுயிரும்போச்சே. 219

## வெள்ளை ரசகற்பூரம்.

சோச்சென்று மலையாதே மருந்தைக்கேளு புதுகலசந் தோண் டியைப்போலிரண்டுவாங்கி, மேற்சென்ற தோண்டிக்குள் பூசக்கேளு மெதுவான பருத்திஇலைச் சாறுபூசி, வாச்சென்ற ரவிதனிலே யுலரப் போட்டு வட்டோடு தட்டிநன்று யடுப்பில்வைத்துத், தாச்சென்ற சூதமுமே பலமுநாலு தனிநெல்லிக் கெந்தகந்தான் பலமொன்று தூவே. 220

தூவிமெள்ளத் தீயெரிக்க வுருகும்பாரு துடியெல்லாந் துருகி னுக்கால் சூதமும்வாரு, தாவிமெள்ள ஒழுகவிடு யிரும்புகொண்டு தகரமாய்க் கிண்டிவிடு பொடியாமட்டும், தேவியொடு சிவனுமொன் ருய்ச்சேர்ந்தால்பின்கேள் திரளாதுஊதிர்ந்தபொடி கறுப்பாய்நிற்கும், சிவிமெள்ள புறண்டிநன்ருய்க் கல்வத்திட்டுச் சிதருமற் பொடித்து வொரு தோண்டிற்போடே. 221

போட்டுமே பூசினச்சார் தோண்டிதன்னைப் பொருந்தவே கவி ழ்த்துநன்ருய்ச் சந்துவாய்க்கு, யாட்டிநன்று யுழுந்தடைத்து வெண் கருவைவிட்டு ஆரவே சீலைசெய்வாய் மூன்றுபோதும், வாட்டிநன்று யுலர்ந்தபின்பு வாலடுப்பிலேற்றி வரிசைபெற முத்தீமூன்றுசாமங், கூட்டிநன்ரு யாறியபின் னிறக்கிமெள்ளக் குடந்திறந்து பார்க்கவுந் தான் பதங்கமாமே. 222

பதங்கமெல்லாம் வழித்துவைப்பாய்க் குப்பிக்கேற்றப் பகீரதி யாங் கங்காசலக் குப்பிவேணும், சிதங்கமெல்லாம் வாராமல் சீலைமண் செய் சித்திரமா யுலர்த்துலர்த்தி யேழுதாஞ்செய்து, விதங்கவிரல் ரண்டங்குலங் கழுத்துவைத்து வெளியடுப்பில் திரிகொளுத்தி மாட்டு சுத்தி, அங்கமெல்லாம் வாராமல் வேவுபார்த்து வப்பனே நீரை விட்டு விரலால்தட்டே, 223

தட்டிவிடுங் கழுத்தரிந்தாற் போலக்குப்பி தனிப்பதங்கம் வாரி யிட்டு தாழிக்கொள்ளே, கொட்டிவிடு ரண்டங்குல பணல்பரப்பிக் குறுந்தூசி தன்னில்நடு குப்பிவைத்து, விட்டுவிடு சுத்திமெள்ள மண லைநீதான் வீற்றிருந்த குப்பிக்குள் விழுகொண்ணுது, சுட்டறுத்த குப்பிமட்டு மிட்டுமைந்தா சுந்தரஞ்சேர் வாலடுப்பிலேத்திடாயே.

எத்திநன்ருய்ச் சிவகாமி பூசைசெய்வா யென்மகனே வாமத்தால் தொட்டுப்புரோக்ஷி, சாத்துநன்ருய்ப் பரிமளங்கள் தூபதீபஞ் சந்திரகலை யியங்கிவரில் வாமப்பூசை, பாத்துமட்டா யெரித்துவிடு முத்தீயுமெள்ள பதங்கமெல்லா முருகிகுப்பி பண்டிக்கொள்ளுங், கூத்தறிவாய்த் தொழிலொன்று சொல்லக்கேளு குப்பிக்குள் பதங்கமது வுருகும்போதே. 225

உருகிவரும் பதந்தனிலே சிலாகைவிட்டா லுருளாமல் குழம்புபோல் நிற்குநேரம், சொருகிசன மரையெடுத்துப் பொடித்துமாட்டு சுத்தவெள்ளை படிகமெனத் தேங்காய்ப்போலாம், வருகுசிள மன்றிவைப்பார் லோகத்தோர்கள் வாய்ப்புண்ணு மும்நீர்சத்த மிறங்கொட்டாது, கருவிதுதான் சூத்திரத்தில் மறைப்போயில்லை காட்டாதே குளிர்ந்தபின்பு உடைத்துவாங்கே. 226

வாங்கிடுவாய் சுருக்குமெத்த ரசகற்பூரம் வைப்பரிந்தால் வாதியவன் மருட்டோயில்லை, தாங்கியந்த கற்பூரம் நோய்கள்தீர்ந்தால் தருகாது வாயீறு கட்டொண்ணுது, பாங்கறிந்து செய்தவனே வயித்தியனுவான் பாரினித்தான் சொல்லுகிறேன் பதங்கப்போக்கு, எங்கிநின்ற ரசமதுதான் பலமோரண்டு வுத்தகெந்தி யரிதாரம் வெள்ளைவீரம். 227

வெள்ளையென்ற வீரமுடன் துருசுகாந்தம் விசையான கெவுரிலிங்க மஞ்ஞசிலையும்நோய், கொள்ளையப்பா பத்துவகை மருந்தொன்றுக்கு கூறுவேன் கழஞ்சிரண்டு கல்வம்வைத்து, பிள்ளையுந்தாய் பொருந்தினுற்போல் தாழிரண்டில் பிலமான தாழியொன்றி லுப்பரைத்து, செம்மியுள்ளே விரலஞ் சதுதான்செம்மி உத்தமனே மருந்தரைக்க வுபாயங்கேளே. 228

அரைக்கவுமோ வெண்கருவைப் பீங்கானில்விட்டு வர்க்கம்பால் துளிவிட்டால் தெளிந்துசலமாகும், கரைக்கவதில் விட்டாட்டிக் குகையும்சில்லுங் கனமாகச் செய்துலர்த்தி யுப்பில் நடுவேவைத்து, துரைக்குருவாம் சூதமதை குகையதனிலிட்டு தூரந்திரமாய்ச் சில்லுமூடி தூசியில்லாதுப்பை, நிரைக்கமணி யாய்ப்பொரிக்கிக் குகைமேலப்பா நிறையிட்டு யெட்டங்குலங் கவிழ்த்துமூடே. 229

மூடுகின்ற தாழிக்குள் கரிப்பான்சார்பூசி முறையாக வஞ்சுதா முலர்த்திநன்றாய், மூச்சாடுகின்ற சந்துவாய்க்குச் சீலைமண்செய்சமர்த் தாக வேழுதாஞ் சார்ப்பாய்ச்செய்து, வாடியுலர் வெடித்திடத்தில் மறுபடியும்மண்ணை வரியாகப்பூசுலர்த்தி வாலடுப்பிலேற்றி, ஆடியா வணி புரட்டாசி ஆனி அப்பனே யெரிப்பு முறைக்கிது மாதம்நாலே.

நாலெனவே சாமமெரி முத்தீயுமட்டாய் நன்றாகுங் கற்பூரங்களி நிறம்போலப்பா, பாலெனவே வெண்சிவப்பாய் நிறமுமாகும் பதனமா யிறக்கிமெள்ள வழித்துக்கொண்டு, நாலலையுங் கசக்கிமெள்ளக்குடித்து விடும் பூரமகாலாந்தகெவுரி ரசக்கற்பூரம்பேர்தான், ஊலெனவே வரும் நோய்க்கு யிதிலேயொருகழஞ்சி யுருதிபெற முன்வெள்ளை கற்பூரங் கழஞ்சே. 231

கழஞ்சிரண்டு யெடுத்துமைபோல் பணவிடையாந்தேனில் கருப் புட்டி சர்க்கரையால் வெண்ணெய் பொரிமாவில், சலந்திரண்டு வோடி விடு மறைப்பாகச்சூலை சாருமே குட்டமுடன் சாந்தமேகம், களைச்ச வில்போல் கூன்முடக்கு வயிறுவலிகுன்ம வாதமென்ற விஷநீரால் தடிப்புற்றுவிரியும், விளைஞ்சிவந்த நோய்தீர்க்கும் விரிவுமெத்தவுண்டு வினையறுகும் வயித்தியர்க்கு விதித்ததிந்தநூலே. 232

## நூல் பார்க்கப் புத்தி.

நூலென்று லருமைமெத்த நுழைந்துபாரு நுண்ணிமையாய்ச் செய்தொழிலு முறையுந்தோன்றும், நூலென்றால் கருவுஞ் சாக்குந் தோறும் நூலுக்குள் சார்பறிந்து ஆட்டத்தோன்றும், கருக்கு நூலென்றால் வகைவகையாய்ச் செய்யத்தோன்றும் நூலெழுதி வைப் பார்கள் மையிடாமல், நூலென்றால் புஸ்தகத்தைச் சேர்த்துச்சேர்த்து நூலெழுதி வைப்பார்க ளிறந்துபோவார். 233

இறந்துவிட்டா லேதுண்டா மண்ணுண்டாச்சு யிந்தறிவு பின் வருமென் றெண்ணவேண்டாம், மறந்திட்டால் நூல்பார்த்து மகிமை யென்ன மகத்துவந்தா னென்னவிது மாடென்பார்கள், நிறைந்திட்ட வேதாந்தம் ரண்டும்நிற்கையிலு மிருக்கையிலும் நடக்கையிலும்பாரு, திறந்திட்ட மருந்துணர்ந்து சித்தாந்தத்தில் திறந்திட்டால் வேதாந்தந் திறமாங்காணே. 234

## நீலகண்ட வாலை ரசகற்பூரம்.

திரமான பதங்கமொன்று சொல்லக்கேளு சித்தர்செய்வா ரிஷி கள்செய்வர் மற்றோர்காணேன், நிரமான லிங்கமது குப்பியாக நிறுத் திடுவாய் நாலுபலம் நருக்கிக்கட்டி, அறமான மூலைப்பாலால் சுருக்கு தாக்கி யனல்முகத்தில் காலப்படியு மானபின்பு, திகழான தாழிரண்டு லொன்றுக்குள்ளே தனிமூலி சித்திரமாஞ் சாறுபூசே. 235

பூசிடுவா யெழுதரம் பொட்டில்லாமல் புத்தோடு முப்புசம ணிடித்துமைமோல், வாசிபெறத் தாழிக்குள் சொரிந்துசெம்மி வலு வான சித்திரமூலிப் பொடியைத்தூவி, காசிபுக ழின்சரக்கு அரிதாரம் வீரங் கெந்திமனோ சிலையுங்கற் பூரம்ரெண்டு, தோசிகளாம் வயித்தி யர்க்குச் சொல்லப்போமோ துரிசுவெள்ளை கெவுரிசீனம் துத்தநாகம்.

நாகமுடன் வங்கம்வெடி யுப்புமுவர்ப்பூவும் நலமான சூடன்பதி னைஞ்சுமொக்க, பாகமுடன் சரிசமனாய்க் கழஞ்சிரண்டாய்ப் பழச் சாற்று லாட்டிமெள்ளப் பருமணியாயுலர்த்தி, வேகமுடன் சுருக்கிட்ட லிங்கத்தில்வெற்றிப் பெறுந்தாழி யுப்பில்மேல் வைக்கக்கேளும், தாக முடன் பரப்பிநன்றாய்த் தாழியுப்பில் தைவேளைச் சாறுதெளித்துத் தாழிகொண்டுமூடே. 237

மூடுவாய் முன்பூசி யுலர்ந்ததாழி முசியாமல் சீலைமண் செய் துலர்த்தி, சாடுவா யடுப்பேற்றிக் காடாக்கினிதான்ரண்டு சடுதியாய்க் கமலம்ரண்டு தீபமாண்டு, போடுவா யடுப்பேற்றி யெரித்துச்சாமம் பூசைபண்ணி யிறக்கிடுவாய் நீலகண்டவாலை, கூடுவாய் மருந்துநிறங் கருஞ்சிவப்பாம்வர்ன குருவாது தான்கெனியா குழம்பைக்கேளே.

## அனுபானக் குழம்பு.

குளம்பென்ன சேங்கொட்டை பறங்கிப்பட்டை கூர்மையாம் பிரப்பம்வேர் வகையொன்றுக்கு, விளம்புறேன் பலமொன்று யிடித்து மைபோல் விட்டரைப்பா யாவினெய்யால் மெழுகுபோல, தளங்கியே பச்சரிசி யிடித்துக்கொண்டு தாரணியில் நோயாளிக் கீயும்வகைகேளும், பழங்கனிந்த தேன்போலே குழம்புகாசு பாருநீ வெற்றிலையில் வைத்து மீயே. 239

ஈவுமொரு காசெடைதான் பணவிடைகற்பூர மத்திச்சு கொண்டு விடு மருளாமற்றுன், மாவுபோல் பத்தியங்கால் பின்புமுப்பு மருமாத் தம் வெந்நீரை பருகிக்கொண்டு, ஆவிபோல் ஆவினெய் மோரும்பாலும் அன்பான வெந்நீரு மன்னம்போலும், தூவுகின்ற மழைத்துளிபோல் வாசங்கொண்டு சுடசுடவே பத்தியங்கொள் ளுப்பைக்கூட்டே. 240

கூட்டுவது கற்பூரம் வெந்தவுப்பு கொடுமையடா காரமெரி சுன்ன மாச்சு, காட்டுவது கறிவகைக்குக் கால்திட்டமாமோ கசடான புகை யிலையும் புளியுந்தள்ளி, யூட்டுவது வயித்தியனே யானல்கேளு வுலகத் தில் பிர்மாவென் றுரைக்கலாம்பார், மாட்டுடனே செய்யாமல் செய் தாற்கேளு பாவமென்ன சென்மமென்ன செய்யும்வாறே. 241

வாருன மருந்துக்குத் தீரும்நோய்கள் வயித்தியத்தி லடங்காது அறுநூற்றன்னில், பேருன வாதியென்ன பெருநீரேரி பித்தவாதி சி லேத்பனமு மதற்குள்விந்தும், சேருகித் திசையெலும்பு ரத்தம்வெந்து தீச்சுட்டாப் போல்விரலில் புண்ணுமாகி, தீராது வியாதியென்பா ஞேய்கட்கெல்லாம் திடமேறி யுணர்ச்சியற்றுத் தடிப்புவீழ்ந்தே. 242

தடித்திடத்திற் றெனவெடுக்கும் புண்ணும்பின்பு தலைமுறைக்குங் குட்டமென்பார் கிரந்தியென்பார், வெடித்ததொரு சீலைபதி னெட்டுக் குட்டாம் விரிவுபத்து வெள்ளையப்பா கறுப்புயெட்டு, படுத்துரைக்கும் அடிபித்த வாறுபோலே பஞ்சிட்டுப் பாறம்வைத்தாற் போலாம்நோய் கள், அடிப்படையில் தனினின்று நீரூற்றுலே யழகான சுவர்விழுந்த வாறுதானே. 243

## கற்பூரங் கூட்டிக்கொள்ள மூதண்டச் சூரணம்.

தானென்ற மருந்துகொண்டால் நோய்களெல்லாந் தவுடுபொடி யாக்கிவிடுங் கற்பூரங்கள், தேனென்ற கற்பூரங் கூட்டிக்கொள்ள திற மான மூதண்ட சூரணத்தைச் சொல்வோம், பானென்ற பத்துபல மிளகிலப்பா பச்சையிஞ்சிச் சாறுதனி லூறப்போட்டு, கானென்ற கற் பூர வள்ளிச்சாறு காந்தைகுப்பை மேனியுடன் தைவேளைச்சாறே.

சாறென்ற தஞ்சுவகைக் கரைப்படியாய் விட்டுத் தனித்தனியே யுலர்ந்தபின்பு மிளகுபலம்பத்தும், வாறேன்ற அமுரியொடு கோவின்

மூத்திரம் வரிகொமட்டிக் கரிப்பனும்வெள் ளாட்டுநீரும், பாரென்ற தஞ்சுவகைக் கரைப்படியாய் விட்டுப் பருமிளகி விட்டுவற்றிப் பக்குவ மானல், வாரென்ற சித்ரமூலி சங்குபீசங்கு விதமான விழிசங்கு குப்பி யோடஞ்சே. 245

அஞ்சாமல் தரித்திடித்து வுலர்த்திவெவ்வேறே அதிமதூரந் திப்பி லியு மக்கிராகாரம், பஞ்சாகும் சடாமாஞ்சில் அரத்தையேலம் பத்திரி யுஞ் சாதிக்காய் கிராம்புலுமம், துஞ்சாதே வால்மிளகு நறுக்கிமூலம் துடங்குமிரு சீரகமுஞ் சுக்குநோய், மிஞ்சாமல் வகைக்குநாற் பலமே கூட்டி மேலான மருந்திரண்டு மிடித்துத்தூளே. 246

தூளாக யிடித்துவடி கட்டிக்கொண்டு துய்யாவி னெய்கழஞ்சில் சூரணத்தைக்கோரு, தாளாதே வெருகடியே பிரட்டிப்பூரந் தன்னில் பணம் போலவைத்து கொண்டாயானல், பாழான வியாதியெல்லாம் பறந்துபோகும் பரப்பிர்ம விதியெல்லாம் வியாதியெல்லாம், கோளான தொன்றுமில்லை குட்டஞ்சூலை குடிகெடுத்த குன்மவாய்வு குட்டம் போமே. 247

போகுமே வாதமென்ற முடக்குத்தீரும் பொல்லாத கிரந்திபுண் கள் கணப் பானங்கொண்டு, சாகுமே நீராம்ப லிங்கஞ்சூலை தணியாத மகோதரமுய் யோனி புற்றும், வேகுமே பீனிசமாங் காசமெட்டும் விரிவித்து உணர்ந்துவிடும் விஷநீரெல்லாம், ஏகுமே யெண்ணிறந்த கோடிநோய்க ளென்மகனே கற்பூர மின்னூல்தானே. 248

## வயித்தியனுக்குப் புத்தி.

இந்தவகை கற்பூர மூன்றுஞ் சொன்னேம் இனியேது கற்பூர மிதின்மேல்கேளு, மந்தகெந்தி யாகாது வயித்தியற்கு மறலிவந்து யிழுத்தாலு மலைவீழ்ந்தாலும், எந்தனையே நினைத்துநித்தஞ் சாபம்நீக்கி யெடுத்திட்ட மருந்துவகை யெல்லாஞ்சுத்தி, வந்தனைசெய் தாய்பதைத் தைப் பூஜைபண்ணி வடமலை வயிரவர்க்குஞ் சாத்துவோமே. 249

சாத்துவோ மேலாகக் குப்பிபண்ணி தளத்தில்நின்று பதங்கிச்சு வெள்ளையாகி, கூத்தனுர் வந்தாலு மெதிர்த்துநின்று கோபித்து வியாதி தனைப் பிடிங்கித்தின்னும், பார்த்துநீ யின்னூலில் மருந்துசெய்தால் பழுதொன்றும் வாராது சாபமில்லை, காத்துமே முன்னுரைத்த நூற் றைம்பதில்தான் தொடுகுறிபோல் சக்காமுஞ் சிவமும்பாரே. 250

பாருநீ பூரணமாம் சூத்திரத்தில் பாரபரமாஞ் சக்கரமோ ரண்டு மொன்று, கூறுநீ யிதில்நுழைந்தா லெல்லாஞ்சித்தி குப்பிவைத்த மருந் தெல்லாஞ் சிவப்பேயாகும், நேருநீ மருந்துகொண்டால் தீரவேண்டும் நீகொடுத்த விடமெல்லாஞ் சித்தியாகும், பாருநீ சாபமெல்லாம் தீர வப்பா பருமாறு மந்திரமும் பின்னைத்தானே. 251

பின்பார்த்து முன்செய்ய வேண்டுநூல்கள் பின்னுமுன்னும் பாரா மல் பிழையேசெய்தால், வண்பாவி கொடுத்தானென் றுலகோர் சொல் வா ரந்தசொல் தவறுமல் நூலும்பாரு, கண்பார்த்து கைபார்த்து முகத் தைப்பார்த்து கலந்துமவ னனுபவித்த சொல்லுங்கேட்டு, முன்பார்த் துச் செய்தவழி நடந்துபோனல் முத்தியுடன் சித்தியுண்டா மோக்ஷந் தானே. 252

## மோக்ஷத்துக் கெய்தும்வழி.

மோக்ஷத்துக் கெய்தும்வழி மனதேகொண்டால் முன்னோர்கள் நூல்தனிலே வாசித்துப்பார்க்க, பாசொத்த மனதையொன்றில் பா யொட்டாமல் பக்குவமாய்ச் செய்துநன்றாய்ப் பாருமூக்கில், கூச்சத்த வொளிகாணுங் குறியைக்கேளு குருசொல்லக் காணுமல்லாமல் மற் றோர்காணுர், நீச்சத்த அறுநூலில் நின்றுபாரு நேர்மையுள்ள குரு முகமா மிந்தநூலே. 253

இருந்தசபை சந்திரகலை யிருந்திடத்தில்பூரி யெத்தனையென் றெண்ணுதே தூசிநோ, வருந்தசைவான் தூசியென வாசிநாலு வான் முட்டி மேலெழுந்து வருகும்நாசி, பெருத்தசபை யொட்டிரெட்டிப் பூசித்தாக்கால் போதுமப்பா யெத்தனையோ காலம்வாழ்வாய், குருந்த சைவை கும்பியதில் யொன்றேநேரம் கூத்தாடும் ரேசகத்தி லரைத் தான்காணே. 254

நாணிந்தப் படிநிறுத்திப் பார்த்தால்போதும் சுழிவாசி யுள்ளடங் கித் திரைநூல்போலாம், ஊணிநீ மனதையெங்கு மோடொட்டாம லொருதரந்தா னந்தியொளி வுள்ளேபார்த்தால், பூணந்த வொளி காணும் ரண்டுமொன்றில் பொன்னுருகி யாடுகின்ற மணிபோலாகும், தோணிந்த மணிக்குணின்று துதித்தால்போதுந் தூலமென்ற விவ் வாழ்வுக் குகந்தான்பாரே. 255

இதுபார்க்க மந்திரமுங் குருவுஞ்சொன்னே னென்னைப்போல் கொங்கணரும் சட்டைநாதர், சரிபார்க்கத் திருமூல ரன்னூர்ஞானம் சாத்திரந்தான் கடைக்காண்டம் அன்னூர்சூத்திரம், விதிபார்க்கப் பூரணநூல் பின்னூர்ஞானம் வெளியாகச் சொல்லிவிட்டோம் நால் வருமேகூடி, பொதுவாகத் துறவிக்குஞ் சமுசாரிக்கும் பூரணத்தைப் பாரென்று புகன்றவாறே. 256

வாறுன முன்னூலைப் பார்த்துஞானி வருந்திமெள்ள வாசியைத் தான் குருகைக்காட்டப், பேருகப் பார்த்துமோட்ச மடைந்தார்கொஞ் சம் பின்னையெல்லாம் நேர்காணுர் பிழைத்துச்செத்தார், கூறுன குறி காட்டா தேனேவென்றால் குறும்பர்மெத்த வுண்டுலகில் ஞானிசென் ருல், வீறுன சமுசாரிக் கிதுபாதையென்பான் விடியுமட்டு மூச்சடக் கிச் செத்தார்தானே. 257

செத்துதான் வாய்வடங்கிச் சகிதமேகம் சீர்வாய்வு பானவரை முட்டிச்சாடி, பெத்துதான் பேறெனவே நோய்கள்மிஞ்சிப் பின்பார்த் தால் மோட்சமென்று விட்டோர்கோடி, கைத்தபுளி யப்புடனே யன் னங்கொண்டு காமலீலை யாத்தொடருஞ் சமுசாரிக்கு, முத்தியுடன் கற்பமுத லெல்லாந்தள்ளி மூச்சாடா திருப்பவர்க்கு வழியொன் றுமே. 258

ஒன்றுக்ச் சொல்லிவிட்டே னூலைப்பார்த்து ஓகோகோ அலைகி றுர் நூலைவைத்து, அன்றாடகம் நிறுத்துச் செனிக்கும்வகைபாரு அலை யாதே பெருநூலைமெத்தப்பாரு, குன்றுமல் மலையறிக் குகையைத் தொட்டுக் கூப்பிடு அலறியுந்தான் பிழப்பைவிட்டு, பெண்டாசை பிள்ளைவிட்டுப் பசியுமிஞ்சிப் பிழைக்கறியாப் பித்தர்களே பெருமை போமே. 259

பெருமையென்ன ஞானியென்பான் கற்பங்கொள்வான் பிடி யரிசி பொங்கியுண்பா னுப்பில்லாமல், ஒருமையென்ன கொடுத்ததெல் லாம் வாங்கிப்போவான் ஓகோகோ குடிசையொன்று கட்டிக்கொள் வான், குருமையென்ன குகையினுன் போவோனென்பாள் கூடிழியா தொருநாளு மிருப்பேனென்பான், அருமையென்ன ஆரொருத்தர் பொசித்தார்க் கெல்லாம் அண்டமைத்தோர் பிறந்தவுட லறிந்தார் காணே. 260

அழிவதெல்லாம் பிரந்தவுட லழுகேயென்று லப்பனே வூன் பிலுமே அல்லாதுண்டோ, கழிவதிலே பழுபழுப்பா காணக்காண கண்டவரும் துடிதுடித்துக் கொடாதென்பார்கள், ஒழிவதுமுன் சுழிமுனையி லோடிப்பாய மோரெட்டு மீரெட்டுகால் வரையுங்கட்டி, வழிவருமுன் கட்டிமன தடைபட்டோட வாசியிது அலையாதே மலைபோவென்றே. 261

மலையாம லில்லறத்தி லிருந்துக்கொண்டு மக்கள்பெண்டிர் சுத்த முடன் மகிழ்ச்சியாகத், துலையாதே வாள்பெருஞ் செல்வமாகித் துறப் போர்க்கு மிறப்போர்க்கு மீவோனுகில், வலையான பாசவர்க்க மிருந்து மாய்கை வானறம்போலறுத்தவற்கு வருகுமோட்ச, மலையாதே ஆண்டி யென்றும் ஞானியென்றும் அகுதியென்றும் பரதேசி யாகத்தானே.

தானென்று மலைத்ததினல் வருவதேது சமுசார ஞானிகட்கே மோட்சமெய்தும், கூனென்று முடவனென்றுங் குருடரென்றுங் குலை யீனன் செவிடுமை யாகாதென்றுங், கோனென்ற தத்துவங்கள் குறையில்லாமற் குடிகெடுத்த வியாதியினல் கிடைந்திடாமல், பானெ ன்ற சந்திரன்போல் தேகமுண்டாம் பரமோட்சப் பூரணத்தைப் பிடித்துப்பாரே. 263

## பாண்ட ரசகற்பூரம்.

பிடிக்கவொரு மருந்துசொல்வேன் பாண்டரசகற்பூரம் பிலமான சட்டிரண்டி லொன்றுக்குள்ளே, படிப்படியா கையான்சார் பூசிப்பூசி பத்துவிசை யுலர்த்திகண மோலையானு, லடிகனத்த கீழ்சட்டிக் கரி யுப்புசெங்க லானிரட்டை சரிசமனு யிடித்துச்செம்மிப், பொடித்த சட்டி யுப்பையரை வாசிபோட்டுப் பூவரசின் பட்டைவெட்டிச் சீவிப் போடே. 264

சீவியுள்ளே சிகப்பெடுத்துக் கெந்தமுநோய்ச் சிறுதும்பைச் சாறுவிட்டு வரைத்துமைபோல், தாரநின்ற தற்குகையும் சில்பிடித்து வாட்டித் தனிச்சாமங் கழஞ்சிபனி ரண்டுவர்ங்கித், காவியாங் கலுவ மதிற் செந்தகத்தின் றயிலங்கழஞ்சது தானுவிட்டு ரசமாளவாட்டி, யோவியமாய்வழித்துருட்டிக் குகைக்குள்செம்மி யிந்தசில்லை மேல்க் கவிழ்த்து யுப்பில்வையே. 265

வைத்துமெள்ள குகைமறைய உப்பைத்தூவி வளர்பிறைபோல் மேல்சட்டிக் கவிழ்த்துமூடி, பைத்தசெட்டி வளிம்புரண்டும் பொருந்

தச்சிலே பந்தடைமேல் வைத்துநல்லப் பதனமாகக், கைத்தடுப்பி லேற்றிமுத்தீ மூன்றுசாமங் கலகலென யெரித்தாறி யடுப்போடே தான், வைத்தசட்டி அசையாமல் திறந்துமேலே நவரத்தினம் வயிர மின்னம் சிவப்பதாமே. 266

சிவப்பென்ன வெளுபட்சி யிருக்கும்பூரங் திருளாது ரசந்திரும்பிச் செனியாதப்பா, பவக்குறையா மாற்றிவிடும் பன்றிமுடி தன்னால் பத்தி வழித் தம்மிதனில் பொடித்துக்கொண்டு, யவக்குறைநோய் குன்மங் கள் குட்டமாலை யரையாப்புச் சூலைமுத லோடிப்போகும், தவக் குறையா வுள்மூலங் தண்டில்புண்கள் தடிப்புவெள்ளை கரப்பன்வண்டு சிலவிஷங்கள்போமே. 267

போகுமடா ரசகந்தி பூரந்தின்ன புத்தியுள்ள வாதிமக னனு பானத்தில், சாகுமடா வியாதியெல்லாம் பாண்டகற்பூரம் சாத்திவிட் டேன் வாயீறுகட்டாதப்பா, பாகுமடா பத்தியங்கன் கற்பூரவுப்பு பரிவான வெங்காரம் புளியைத்தள்ளு, ஆகுமடா புகையிலையுஞ் சிற் றின்பமாகா யப்பனே யினிவேறே யறையக்கேளே. 268

## காமகேசரிகுளிகையின் சரக்குச்சூரணம்,

## சிவன்சூரணம் சத்தியின்பெயர்.

அறைகிறேன் முன்னுறைத்த காமகேசரிக்கு அப்பனே யிதன் சாக்கு வகையைக்கேளு, பதறாதே ஒருத்தருக்கு மிந்தநூலில் பக்குவ மும்கருக்குருவு மினமுஞ்சொல்வேன், குறையாதே குளிகைரெண்டு பாலில்கொள்ளக் கூறிவிட்டேன் பொடியில்லாள் சுருக்கோயில்லை, துறையாகச் சரிப்படவே நூலில்போட்டால் துன்மார்க்கர்க் கிந்நூல் தான் கொடுக்கொண்ணாதே. 269

ஒண்ணான மதனகாமே சரிக்குயப்பா வுறுகியில்லை சூரணமே யில்லாவிட்டால், கண்ணான மாத்திரைக்குப் போகம்விடா திருக்குங் கடல்பொங்கி யணையுடைந்தாற் போலாம்பின்பு, பெண்ணார்க்கும் புரு ஷர்க்கு மப்படியேதின்றால் பேய்மக்காள் மேகமுண்டா மாசையாலே பூண்ணாகும் புரசிரசு காய்ப்புமாகும் பொரிபட்ட பஞ்சதுபோல் வாயுவேமே. 270

வெந்துவிடு மெழுபத்தி ராயிரம்நால் வெள்ளெலும்பாம் ரத்தம் வற்றிக் கொரிச்சி மேகம், வந்துவிடும் வியாதியென்னப் பட்டதெல் லாம் வருவித்தால் குளிகையுட மகிமையேது, சந்துசந்தாய்ப் பிச் செரிப்பு சொர்னபற்பம் சந்துரியப் புரசம்விரை பிசினுங்கிழங்குப், பந் துயர்ந்தாப் போற்குளிகை லகிரியுண்டு பார்மகனே குளிகைசிவம் சத்திபொடி கூட்டே. 271

கூட்டாமல் குளிகையைத்தான் பாலில்கொண்டால் குடிகெடுத்த மேகமிதே மிஞ்சியேக, பூட்டிவைத்த திறவுகோலைத் தேடிக்காணுன் புத்தியுள்ளார் சூத்திரத்தை தேடிப்பார்த்து, நாட்டிலிந்தக் குளிகை கொண்டால் மேகம்பொங்கி நலமான மருந்துகட்கு வேகமேறி, சூட்டிவிட்ட சூரணமே யில்லாவிட்டால் சுருக்கில்லை வியாதிகளைத் தொடாரென்னே. 272

தொடர்ந்துவெடி வியாதிகளைத் தேகம்போன துரைமகனே சந் திரன்போ லிருக்கவேணும், படர்ந்தபொடி சூரணத்தைச் சொல்லக் கேளு பருங்கிழங்கா மிஞ்சிதனை மேற்றோல்சீவி, விடர்ந்தவில்லை யாய் நருக்கிப் பாலில்வெந்து வெயிலுலர்த்தி யிடித்துவடி கட்டிக்கொண்டு, அடர்ந்துபோங் கடைசாக்கு அமுதமாவும் அரத்தையேலம் வால் மிளகு மதிவிடையமாமே. 273

விடையாதே பத்திரியுஞ் சாதிக்காயும் வெற்றிகிளி யூறல்பட்டை கிரும்புசீரந், தடையாதே யதிமதுர மாஞ்சிசிறுதேக்கு தாளிசந் திறி பலையுஞ் சன்னயிலவங்கம், புடையான கடகசிங்கி நருக்குமூலம் பூவான செண்பகப்பூ நாகப்பூவுஞ், சடையாதே மகரப்பூ பாங்கிப் பட்டை சந்தனமு முந்திரிகை பேரீச்சாமே. 274

ஆகுமே கசகசாநெல் குருவைபொரியும் அபினுங்கோ ரோசினையு மகத்திபாலும், வாகுமே அரசுயிந்த நாலுபழமுலர்த்தி வகைவகை யாய்ச் சரக்குவகை கழஞ்சிமூன்றும், சாகுமே சட்டியதில் வெதுப்பிக் கொண்டு தவுடுபொடி யாயிடித்து வடிகள்செய்து, போகுமே முன் னிஞ்சிப் பொடியைச்சேர்த்துப் பிசகாம லிரண்டுமொன்ருய் சேர்த் துக்கொள்ளே. 275

சேர்த்துவொன்ருய்க் கண்டிடைக்கு நாலிலொன்றுபட்டை சித ராம லிடித்துவடி கட்டிக்கொண்டு, தார்த்துசட்டி காயவைத்து நெய்

தெளித்து தனிபறங்கிச் சூரணத்தைப் பொன்னிறமாய் வெதுப்பிப், பார்த்துஅடி பிடியாமல் பதம்வரும்போதிறக்கி பருயிஞ்சிப் பொடியை நெய்யில் பதமாகவெதுப்பிக், கார்த்துவொன்றாய் முப்பழமுந் திராட் சைக்கொட்டை பக்குவமாய் பேரீச்சு மபினுங்கூட்டே. 276

கூட்டியொன் றாய்மருந்தை யொக்கக் கூறியதோர் சீனியதில் நாலொன்று சேர்த்து, மாட்டியொன்றாய் மத்தித்து புதுகாகத்திட்டு மைந்தனே யடைத்துவண்டு கட்டிக்கொண்டு, யூட்டிவிடு சூரணத்தை வெருகடியில்பாதி உத்தமனே குளிகைரண்டும் உரையாவின்பாலி, லாட்டிநன்றாய்ச் சூரணத்தை வாயில்போட்டு யதில்விடுவா யாசின் பாலந்தி வெடிவாரே. 277

வேறென்ன யினிச்சொல்வேன் மதனகாமா விந்துகட்டு மாத் திரைக்கு விஷ்ணுசிவ மொப்பாங், தாறென்ன கிஷ்டலீலை செய்தாப் போல சதாகோடிமாதர்களைச் சம்போகித்தால்,ஆறென்ன போகமடா வறத்தினையேயாகு மடங்காது புருடனுக்கும் பெண்களுக்கு மெய் தான், பேறென்ன குளிகையுடன் சூரணமேசேர்ந்தால் பிலத்துதடா தேகமினிப் பிணிகளெல்லாம் போமே. 278

போமப்பா யிருபொழுது மண்டலந்தான்கொள்ள புண்ணியருக் கெய்துமல்லால் மற்றோர்க்கில்லை, நாமப்பா சொல்லிவிட்டோம் நாட்டிலில்லை நாகமணி கிரீடம்போல் நாலில்சொன்னேந், தேமப்பா தேகமெல்லாஞ் சொர்னமயமாகுஞ் சித்திமுத்தி யுண்டாகுந் திறந் தான்பாரு, தாமப்பா மாலையால் நூலைப்பார்த்துத் தனித்திருந்து மருந்துசெய்வாய் குருநூல்தானே. 279

## இந்நூல் கைம்முறை குருநூல் போதுமென்பது.

குருவாகும் நூலிதுதான் கைம்முறைக்குவேறே குருக்களென்று ஒருவரைநீ தடங்கல்செய்தால், மருளாகத் திருடியேவயிர் பிழைக்கச் செய்வார் மலையேறி யிருப்பவர்க்கு வருமோசொல்லு, யருளான நூல் தானே யாதிகுருவாகு மப்பனே குருக்குருவுங் கைம்முறையுஞ் சொல்லும், பொருளுனக்குப் பெலனுமாம் நூலைப்பாரு புத்தியுள்ள வயித்தியர்க்குப் போதுமிந்நூலே. 280

## கெங்காசலகுப்பியில் செந்தூரங்கள் வைக்கக்சுத்தி.

போவதற்கு மருந்தொன்று சொல்லக்கேளு புகழ்பெரிய குப்பி வைப்புச் செந்தூரத்தை, மாவதற்குக் கங்காசல குப்பிவாங்கி மண

மணக்கும் புத்துமியுஞ் செங்கரிசைமண்ணும், ஆவதற்கு யஞ்சு மொன்ரு யரைத்துச்சீலே யகம்புறமுந் தடவிகுப்பி யடைக்கச்சுத்தி, மேவதற்குக் குப்பியாய் விட்டுக்கீழே மெய்யாக விரண்டுவிரல் கனந் தான்சுத்தே. 281

சுத்திநன்ருய் மேலிட்டுச் சீலேமண்செய் சுகமாக ஒன்ருென்ரு யுலர்த்தியேழு, பத்திநன்ருய்ப் பிடித்துப்பற்றி வெடித்திடத்தில் மண் பிசைந் தடைந்துகுப்பி கழுதருக்கக்கேளு, மத்திநன்ருய்த் திரி கொளுத்தி சாத்திவாட்டி மைந்தனே சலத்தைவிட்டு விரலால்தட்ட, சாத்திகொண்டு கிடாயறுத்த கழுத்தைப்போல கட்டுமுன்னே குப்பி யைப்பார்த் தூதிவாங்கே. 282

## குப்பிவைப்பு ரசச்செந்தூரம்.

வாங்குவாய் ரசமதுவே பலந்தானுலு வளர்நெல்லிக் கெந்தியது பலந்தானென்று, மோங்கிநின்ற கல்வத்தில் பொடித்துக்கெந்தி யுறுதி யாம்புத்தோட்டி லடுப்பில்வைத்து, தாங்கிமெள்ளத் தீபமென யெரி யும்போது தனித்தனியே கெந்தியதை வாரியோட்டில், பாங்குபெறத் தூவியது உருகும்போது பதனமப்பா தீப்பிடித்தால் புகைந்துபோமே.

போமப்பா மருந்துபோ யுயிரும்போகும் புத்தியுள்ளான் தீப் பிடியா தோட்டின்மேலே, தாமப்பா தீயெரிப்பாய் துரும்புபோலத் தனியிரும்பு சட்டத்தால் கிண்டுகிண்டு, தேமப்பா பாகதுபோ லுருகி நிற்கும் தீயமர்த்திச் சூதத்தை யொழுகவிட்டு, கோமப்பா சட்டத் தால் கிளரிக்கிண்டு கொழுந்தியாங் கைம்முறைக்குக் குருவின்நூலே.

குருவான ரசத்துடனே சத்திசேர்ந்தால் கொடுங்கருப்பாஞ் சத்து மோட்டில் பிடியாவண்ணம், பருவமது யிளகிளகி யுதிர்ந்து கொட்டி பார்மகனே தீப்பிடித்து யெரிந்திடாமல், உருவமெனச் சாத்திவைத்தாப் போலிராம லுருக்குருக்கிப் புறண்டியோ கல்வஞ் சேர்த்து, சுருபமதாங் குப்பிவாய்க்குள் ளடைக்கும்வாறு சுத்தி மெள்ளப் பொடித்த குப்பிக் கடைக்கும்வாரே. 285

அடைவதுதான் குப்பிக்கு அரையேமட்டும் அடைத்தாக்கால் பத்திரமா யெடுக்கலாம்பார், தடைப்பதுவே ரண்டில்மிஞ்சு மருந்து மீறில் தனிக்குப்பி மருந்துருகில் வெடித்துப்போகுஞ், சடைவதுதான் வாராம லரையுமட்டு மறக்கினமுந் தீயெரியும் பதமுங்கண்டால், விடை

யாதே யொருத்தருக்கும் நூலுண்டென்று விருதுபெற்ற நூலிது தான் வெளிபோடாதே. 286

போட்டுவரை மட்டுமல்லா லதிகம்வேண்டாம் புகழ்பெரிய தாழி யொன்று புதியதாகக், கோட்டிநன்றாய் மண்கனத்து வெந்தத்தாழி கொண்டுவந்து ஆற்றுமணல் கொழித்துத்தூசி, மேட்டியா யூமச்சி நண்டுநத்தை பெறுமணலைப் பார்த்துமெள்ளத் தள்ளிப்போட்டு, கூட் டிரண்டு விரற்கிடைதான் தாழிநடுமைய மறுமணலை பரத்தியதில் குப்பிவையே. 287

குப்பிமட்டு மணலையிட்டு நிறுத்திவாய்க்கு கூறுவேனோடுடைத்து மூடிப்போடு, செப்பியமுன் வாலடுப்பி லேற்றிகட்டை தீபமெனச் சாமமெரி யப்பால்கேளுங், தப்பிடா தேயெரிப்புங் கதம்பூபோலத் தனிகெந்தி யுருகிநிற்கும் புகைச்சல்பாரு, அப்பிடமா லோட்டிவரு மெழுகுபார்த்து அடிக்கடிதா னெடுத்துமறு ஓடுபோடே. 288

ஓடுமூடி திறக்கையிலே புகையுந்தீயு முற்றகுப்பி வாயில்வரக் கண்டபோது, போடுமரி தாரநிரை சம்பத்துக்கு பொருந்தினது காலரைக்கால் கழஞ்சேயாகுங், கூடினதை யிவ்விதம்போல் ரசம்பெருகிக் குறையாமல் தாளகத்தை நிறுத்துமெள்ள, சாடிமெழு கெரியை யிலே யுலைக்குறடுகொண்டு சதிராக யிருந்துகொண்டு தாளகத்தை மாட்டே. 289

மாட்டிவிடு வரையாரவா யோடுபோடவேண்டா மைந்தனே தீயெரிவு மீறலாகா, யோட்டிவிடு குப்பியிற்குள் சிலாகைமெள்ள யொதுங் கொதிங்கி கைநினைவாய் துளாவிசுத்தி, காட்டிவிடு விழிதிறந்து புகை யுந்தீயுங் கடுமெழுகு பறிந்துகுப்பி யமைக்கும்வாயை, ஆட்டிவிடு படிக் கொருக்கால் சிலாகைவிட்டு அப்பனே தீயமர்ந்தா லோடுமூடே. 290

மூடிவைத்த ஓடுநடு மெழுகொட்டாமல் முழுவெளுப்பா யிருக் கும்பதங் நீரைமாற்று, மூடிவைத்தால் சிலதுகுப்பி வாய்மூடாது முறைமுறையாய்ச் சிலாகைவிட்டுத் திருப்பும்போது, ஆடிநிரை கெந் தகம்போய் மெழுகுதீய்ந்து அடியிலே காகாத்து சிவக்கும்பாரு, ஓடி மெத்த யெரியாமல் தீயைமெள்ள யுதிர்ந்துவிழு மேறினதுங் கருத் துப்போமே. 291

கறுத்துப்போ மிடைகுறையுஞ் சிவப்பும்போகுங் கடுந்தீயாங் கைம்முறையும் பதமுங்கப்பில், வெறுத்துக்குச் சாமமது யாறேழென் பார் வேண்டாம்பார் பதம்பார்த்து யமர்த்தித்தீயை, அறுத்தடுப்பி லாறவிட்டு யிறக்கிமெள்ள அகலமுள்ள பாத்திரத்தில் தண்ணீர்விட்டு பருத்தமெள்ள மணலையிட்டு யிருப்பகப்பைகொண்டு பத்திரமாய்க் குப்பியெடுத் தோய்த்திடாதே. 292

தோய்த்துவிட்டால் செந்தூர முதிருமப்பா துவைச்சலில்லாக் குப்பிபற்றி பிடித்துக்கொள்ளு, மாச்சுதப்பா செந்தூரங் குப்பிவைப்பு அரைந்துவிட்டே னடக்கமப்பா வெளிவிடாதே, சூச்சமற்று வயித்தி யஞ்செய் குப்பிவைப்பால் குறும்பரோ வயித்தியர்க்குப் பூசைசெய் தால், பாச்சுதடா வைப்பெரிப்புப் புடத்துக்கெல்லாம் பாலையொடு நிர்வாணி பூசைதானே. 293

## குப்பிவைப்புச் சவ்வீரம்.

தானென்ற குப்பிவைப்புச் சவ்வீரங்கேள் தனிகெங்கா சலகுப்பி சீலைமண்செய், ஆனென்றகுப்பியடி ஆறஆற அப்பனே கழுத்துமட் டும் வலுவாய்ச்செய்து, கோனென்ற குப்பிகழுத் தொடித்துமெள்ள குண்டுசட்டி யடிக்கனமாய் வெந்ததாக, பானென்ற ஆற்றுமணல் பழுதுபார்த்துப் பதமாகத் தோண்டிரண்டு வாங்குவாயே. 294

வாங்குவாய் சூதமப்பா பலந்தானெட்டு வருகும்கெல்லி கெந்தி பல மிரண்டுவாங்கி, ஓங்கிநின்ற வோடுடைத்து வட்டம்போலே யுற்ற கெந்தி பொடித்துஓட்டை யடுப்பில்வைத்து, தாங்கிமெள்ள கெந்தி யிட்டு யுருகும்போது தனிரசத்தை யொழுகவிட்டுக் கிண்டுகிண்டு, பாங்குபெறத் திரண்டுவொட்டிப் பிடியாமற்றூன் பற்றிவழுத் தம்மி தனில் கொட்டிக்கொள்ளே. 295

கொட்டிமெள் ளப்பொருத்து வாரித் தோண்டியொன்றில் கிளறி விட்டு மறுதோண்டி கவிழ்த்துமூடி, கெட்டியதா யுளுந்தரைத்துச் சீலைசெய்து சீனம்பா வுலர்ந்தபின்பு, அஞ்சுமண்ணுங் கட்டியரைத் ததின்மேலே மூன்றுசெய்து தனித்தகண்ட வாலடுப்பி லேற்றி மெள்ள, குட்டிமெள்ள விநாயகரைத் தீபம்போலக் கூட்டியெரி மறு சாமங் கமலமாமே. 296

ஆமப்பா வலரயெரி மூன்றுஞ்சாமம் அதுகுளிர ஆறவிட்டு யிறக்கிச்சாய்த்து, தாமப்பா பதங்களிந்த கீழ்ப்பாண்டத்தில் தனிரசத்தி னிடைகுறையுஞ் சாய்த்துக்கொண்டு, நாமப்பா செய்தமண்ணைத் திறந்துமெள்ள நலமான பதங்கம்வழித் தெடுத்துக்கொண்டு, நாமப்பா கடைச்சரக்கைச் சொல்லக்கேளு கனத்தவெடி யுப்பிரண்டு துருசு ரண்டே. 297

ரண்டெடையாஞ் சீனம்ரண்டு சாரம்நாலு ரத்தம்போல் மஞ்சளுக்குஞ் சிவந்தபூநீர், ஒன்றிடையா மன்னபேதி பலமோமூன்று உத்தமனே கல்லுப்பிரண்டுகூட்டு, கண்டெடையா மருந்துயெட்டு பலத்தைக்கேளு காட்டுறேன் ரண்டுபத்துப் பலந்தானுலு, வெண்டிடவே கல்வத்தில் கொட்டியொக்க வெறுந்துரிசைப் போடாதே வறுத்துப்போடே. 298

வறுத்தபதம் வெளுத்துவருங் கொட்டிக்கல்வ மாட்டியொக்கப் பொடித்துவாரி குப்பிக்கேற்றி, அறுத்தசட்டி யடிகனமாய் வெந்ததாக ஆற்றுமணல் தூரிவிடுநாலங்குலம், பொறுத்தகுப்பி யதிலிருத்தி மணலைக்கொட்டி புத்தியுள்ள வயித்தியரே பெருமிச்செம்மி, செறுத்த குப்பி வாய்மூடிச் செம்மிநன்றாய்த் திறந்துவாயைச் சட்டியொடு அடுப்பிலேற்றே. 299

ஏற்றிமெள்ள வாலடுப்பில் கட்டைதீப மென்மகனே தள்ளியெரி கமலமாக, போற்றிநன்றாய்ச் சிவகாமி நிருவாணிக்கும் பொருந்தியவர் கருணைகூரப் பூசைசெய்வாய், பார்த்துமெள்ளத் தீயெரிநீ சிலாகையிட்டு படபடத்துக் குப்பிமோசம் வாராமற்றான், கூர்த்தநன்றாய்ப் பார்த்திருந்து மெள்ளமெள்ளக் குரும்பரே தீயெரியு மீறுண்ணுதே.

மீறினல் சரக்கதுவும் கருகித்தீய்ந்து மேல்பகங்கி ரசத்தோடே தொடுத்தேருது, கூறினேன் தீயெரிவு மெள்ளமெள்ள குப்பிநடுத் துருவாயில் மோசம்வந்தால், வேறொருநீ குப்பிநன்றாய் மண்ணுஞ் செய்து வித்தகனே பக்கத்தி லிருக்கவேணுஞ், சீறிவெடித் துடைந்து விட்டால் மெள்ளவாரி திரும்பவுமே யிடைபாதி சரக்கைக்கூட்டே.

கூட்டிமறு குப்பியிட்டு வுடனேயேற்றி குலக்கொழுந்தாம் பயிரவனைத் தியானஞ்செய்து, நீட்டிமெள்ளச் சிலாகையினல் கிண்டிப் பார்த்தால் நிழந்துகுப்பி யடிபருவங் குழம்புபோலாம், பூட்டியுள்ளே

சட்டிமட்டு மெரிக்கவேணும் பொல்லாது தீயெரிவால் புற்றுபோலாங், காட்டி மெள்ள மறைந்ததுபோல் தீதான்மீதி கடந்துவிடுங் குப்பி யென்ற வைப்புத்தானே. 302

வைப்பென்றால் பருவமெனத் தீயுங்கையும் வாதியென்றால் கைம் முறையோ அறிந்துசெய்வான், செப்பென்று லொருத்தனேத்தான் றுறுமாறாய்ச் செய்வதென்ன கைதப்பிப்போச்சு தென்பான், கைப் பென்று லவன்வாயில் மண்ணைப்போட்டுக் கடாக்ஷியிந்த நால்வைத் தோன் குருதான்பாரு, அப்பென்றால் மேலேறிச் சவ்வீரந்தா னடை க்குமடா குப்பிவாயை யடையாதென்றால். 303

அடையாம லிருந்தகுப்பி சிலாகைவிட்டா லடியிலே காகரக்குந் தீயைமாற்று, விடையாதே யடைந்தகுப்பிப் பருவக்கேளு மேலேறிப் பதங்கிநன்று யிறுகினுக்கால், தடையான வோட்டில்நடு கருப்பேபற் றுந் தடுத்துவிடுந் தீமருந்து குளிர்ந்தபின்பு, குடைபோலே பளிங்கு நிறஞ் சவ்வீரந்தான் குற்றமில்லை மூன்றுவைப்பில் கொச்சிதானே.

## கொச்சி சவ்வீரஞ் சடாதாரசெந்தூரம்.

## சத்தி செந்தூரப்பற்பம் சிவம்.

தானென்ற சடாதார செந்தூரங்கேள் தாரணியில் மானிடர்நோய் தீரும்வண்ணங், கோனென்ற பூரணசந்தி ரோதயமொன்று கொடுஞ் சுருக்காஞ் சூதகெந்தி செந்தூரமொன்று, ஆனென்ற அப்பிரேக செந் தூரமொன்று அப்பனேபவள வெள்ளிவங்கபற்பம், தேனென்ற சண் முகமா மறுமுகவரான திறமான முகமாறுஞ் சிவசத்திதாமே. 305

## சடாதார மாத்திரை.

தாமிந்த செந்தூரம் பற்பமாறுந் தனித்தனியே கழஞ்சியொன்று நிறுத்துவாங்கிக், காமிந்த கல்வத்தில் சாம்பல்விட்டுக் கலந்தரைத்துக் கடலையள வுண்டைசெய்து, நாமிந்த நிழல்தனிலே யுலர்த்திக்கொண்டு நாலாறு யிருபோதி லுண்பதற்கு, போமிந்த பூசினிக்காய்ச் சீந்தி மாவும் புகழான அசுவமா விஞ்சிமாவே. 306

## அனுபான பஞ்சகெவிய லேகியம்.

மாவென்ற கருவேலங் காயும்பூவு மன்னவனே யுலர்த்திடித்து மாவாய்ச்செய்து, ஆவென்ற பஞ்சகெவிய மஞ்சுங்கூட்டி யதினுடனே கியாழவகை யறைந்தேன்முன்பே, காவென்ற கடைசரக்கு மிளநீர் பாலுங் கடிதான யோண்ட நெய்தான்கூட்டி, சேவென்ற லேகிய மாய்ச் செய்வாய் சொன்னேன் செகத்திலுள்ள லேகியந்தா னிதற் கொவ்வாதே. 307

ஒவ்வாத ஆயிரத்து அன்னூறுதன்னி லுறுதியாய்ப் பஞ்சகெவிய லேகியத்தின்போக்கு, செவ்வாகச் சொல்லவில்லை பிலம்பெறாது திரும்பியிந்த வறுநூற்றில் சேர்த்தேன்மாவை, நவ்வாக நவரத்தின மணிகோர்த்தாப்போல் நாட்டிவிட்டேன் லேகியந்தா னினிப்பொய் யாது, முவ்வாகச் செய்துகொண்டு லேகியத்தைமைந்தா முருக னென்ற சடாதாரச் செந்தூரங்கூட்டே. 308

கூட்டுவாய் லேகியந்தான் கழஞ்சிரண்டு குடோரமடா யறுவகை யும் பணந்தான்ரண்டு, ஊட்டிடுவாய் பொழுதொன்றுக் கிப்படியே மைந்தா உத்தமனே யிருபோதாய் மண்டலந்தான்கொள்ளு, நாட்டி லுள்ள பிணிகளெல்லா மேகத்தாலே நலம்பெரிய நோய்வருதல் நவி லக்கேளு, தாட்டிகமா யுணவருந்தல் பசித்தல்மோகஞ் சஞ்சரித்தல் முழுக்குவிடல் கிலேசங்கோபம். 309

## மேகத்தால்வரும் வியாதிகள்.

கோபமிஞ்சிப் பொரிகலங்கிக் கிலேசமானல் கூர்மனங்கே சேத் துமத்தில் புகைந்துசாடி, தாபமிஞ்சி அஸ்திக்குள் ரத்தம்வற்றித் தசை வற்றிச் சுக்கிலமுந் தண்ணீராகி, மோகமிஞ்சிச் சஞ்சரித்தால் கடுப் பெரிவுந்தோன்று முக்கில்ரத்தம் வெள்ளைவிழுந் தயிரும்போலாம், ஆக மெல்லா மடிந்தோடி யடங்கிப்போகு மதுவுமஞ்ச லிறைச்சிமீனுங் கழுவும்வாரே. 310

வாறுன மதுபோலும் பானம்போலும் வாயிலிட்டால் கைப்பு ளிப்பு சட்ரசம்போல், வீறுன நோய்மிகுந்தால் ரத்தம்வீசும் விருது பெற்ற நோயிதுதான் பெரும்பாடப்பா, தேறுது தேகமடா யென்ன கொண்டுந் தீயிலிட்ட மட்டையைப்போல் சுரித்துவாடுங், கூறுன

பித்தமீறில் ரோகியாவான் குறும்பரே பெண்களுக்குப் பெரும் பாடாமே. 311

பெரும்பாடாம் பெண்களுக்குப் புருடனிலுமதிகம் பேய்க்கூத் தாங் காமநிலை யதிகமாம்பேர், உரும்பட்டாய்ப் புதுவெள்ளம் பலநிற மாய்வீழும் உத்தமனே வாய்வேறி வலித்துநொந்து, கரும்பாடாய்த் தேகமெல்லாங் காணக்காணக் கசைவற்றாய் வற்றிவிடுங் கனல்கொண் டேறிப், பெரும்பாடாய்ப் பெண்களுக்கு வருகும்பாரு பாருலகில் புருஷருக்கும் வருமவ்வாறே. 312

வாறான புருடனுக்கு நீரிழிவேபாடு வருகுமடா முந்திமுந்தி வெள்ளைநித்தம், ஆறான வியாதியப்பா நோய்கட்கெல்லாம் அடங்காத மேகத்தா லதிகமாச்சு, பேறான வியாதியிலே கிணறொன்றுண்டாய் பெருத்தசெடி புல்மூடிப் பசாசுகூட்டம், தூறான சுரமதனில் புரண்டு மெத்த நட்பமாய் மேகமது நுழைக்குந்தானே. 313

நுழைந்தவர்கள் செடிபூடும் பசாசுந்தள்ளி நோயில்லா தேறிவிட் டே யரூபியப்பா, விழைந்தவினை வருவதல்லால் மேகத்தாலே மேல்வ ரப்பு கீழ்வரப்பு வறியார்மோகர், குழைந்துகுழைந் தோடிநித்தங் கூடிக் கூடி குரும்பரெல்லாங் கெட்டார்கள் கூடும்போச்சு, அழைந்துழைந்து நின்றறிந்து யறிவில்கூடி யாசைதள்ளி நீண்டவனே யதீதனுமே. 314

## பஞ்சகெவ்விய லேகியத்துடன் கொள்ளும் பற்பச்செந்தூரம்.

ஆதியடா மேகத்தை யடக்கும்லேகியம் அதுவைத்தால் வெள்ளி பற்ப மதீதமாச்சு, சோதியடா மனோன்மணித்தாய் பவளபற்பம் துய் யவங்க பற்பமது பிர்மாவாச்சு, பாதிமதி சடையணிந்தோன் சங்ரோ தயமப்பா பகுத்தறிந்தீர் செந்தூர மந்தகாலன், வாதியடா மண்ணை யுண்போ னப்பிரேகந்தான் வகைக்குமொரு கழஞ்சாக ஆறுஞ்சேரே.

சேர்த்து வொன்றாய் லேகியத்திற் கொண்டாயானால் தீராத பெரும்பாடு அஸ்திமேகம், பார்த்திருக்கப் பலவிதமாய் வடியும்சீயும் பருவாய்வுஞ் சூசியொட்டி வலிக்கும்ரத்தம், கோர்த்தியடி வயிற்றி லங்கே கூப்பிட்டோடிக் குருகுரெனப் பொருமிமாதர் சங்கையற்று, ஊர்த்திருந்தாப் போல்நித்த மொழுகிவாசம் ஓகோகோ முகம்பிடிக்கா தெரியுந்தீயே. 316

## நோயில்லாமலிருக்கும்வழி.

தீயிலேதா னெரிந்துவிட்டா லேதுண்டாகுந் திறமான லயி வரைக்கு நோயில்லாமல், காயிலேதான் பூப்பிஞ்சி லுதிர்ந்திடாமல் கதிகெட்ட நோய்கள்வந்து அணுகிடாமல், கோயிலேத்தான் பேணும் வழி யொன்றுசொல்வேன் குரும்பரே யாஸ்தியைத்தான் நாலுபங் காய்த், தாயிலேயான் தர்மத்துக்கொருபங்காகுந் தனக்குவந்தநோய்க்கு மருந் தொருபங்காமே. 317

பங்கான ரண்டுமே பொசிப்புக்கப்பா பாருமிந்த படிவீதம் பகுந் துக்கொண்டு, ஏங்காமல் செய்துவந்தால் நோய்தானேது யென்மகனே லோகத்தோர்க் கிடரோயில்லை, தூங்காதே நோய்கொண்டோன் தீரா தென்றுந் துயர்தீரச் சுகதர்ம முன்னேசெய்வாய், நிங்காதே நித்தமிரு மருந்தைக்கொள்ளு நினைவோடு சதாசிவத்தில் பாரம்வையே. 318

## கருமவினையால்வந்த வியாதிதீர உபாயம்.

வையகத்தில் மனுடர்செய்த பாவத்தாலே வருகுமப்பா கர்மவினை மலைபோல் நோய்தான், பொய்யகற்றிப் பாடிவிட்டேன் கர்மகாண்டம் புத்தியுள்ளோன் பார்த்தரிந்து நிவர்த்திசெய்து, மெய்யகத்தில் மருந்து செய்தால் வியாதிதீரும் விருதாவில் வயித்தியனை பொய்யெண்ணாதே, வையகத்தில் பொருளிருந்தால் கர்மந்தீர்த்துக் கனதையுள்ள மருந்து கொள்வார் பொருளில்லாட்டால். 319

இல்லாத வறுமையுள்ளோன் நோய்க்கீடாறு லென்மகனே சிவன்பேரில் பாரம்வைத்துக், கொல்லாதே சீவசெந்து மனதறியத் தான் கோபத்தைத் தீர்த்துவிடு கொடும்பாவந்தான், பொல்லாத நடை யகற்றித் தலங்கடோரும் புண்ணியமாங் காலத்தில் தீர்த்தமாடி, நல்ல தொரு தானதர்ம மிகுகாசத்தில் ஞாதனா சடியில்,தந்தி கணபதியும் போத்தே. 320

போத்திசெய்வா யறுமுகரை வலமாய்வந்து புகழான சூரியற்கு மாதிவார, மூர்த்திகமாய்ப் பாற்கடல்விட் டெழும்புமுன்னே முழுகி னின்று நமஸ்காரம் நூற்றெட்டுச்செய், வாத்திநன்றாய் வினைதீரக் கிருபைசெய்யு மருந்தில்லா நோய்தீர்கள் வலிதுமெத்த, தோத்திர மாய்ப் பண்டிதனை யடுத்துக்கார்த்து துன்பநோய் தீருமென்று தொடர்ந்துக்கொள்ளே. 321

தொடர்ந்துகொண்டு ஒருமனதாய் நின்றாயானல் தொட்டுஅவன் கொடுத்ததெல்லா மருந்தேயாகும், நடந்தாலி சிவன்நானுங் கிருபை செய்வார் நல்லவர்க்குப் பொருளில்லா தப்படியேதீரும், விடந்தனைப் போல் மனதுடையோர் நோய்க்கிட்டானல் மேதினியி லிருந்துபின்பும் விடாதுபாரு, அடர்ந்தபின்னுஞ் சிசுகளைத்தான் சுற்றும்நோய்க ளது வறிந்து நிவர்த்திசெய்து மருந்துசெய்யே. 322

## சடாதார செந்தூர பஞ்சகெவிய லேகியம்.

மருந்துசெய்யுஞ் சடாதாரச் செந்தூரத்தை மகத்தான லேகியத் தில் வைத்துக்கொண்டால், விருந்துமெள்ள வந்ததொரு பெரும்பாடும் போகு மேலேறிப் பொருமிநின்ற வலிவாய்வுந்தீருஞ், சரிந்துவழிந் தோடுகின்றவெள்ளைாத்தஞ் சாந்தமாமாதவிடா தறுகாதப்பா, பொருந் துவலி சூசிகா சூலைவாய்வு போகும்டா தேகமெல்லாம் பொன்போ லாமே. 323

## பவளபற்பம்.

ஆகுமப்பா பவளபற்பஞ் செய்யக்கேளு அறைகிறேன் பவளமது பலந்தானென்று, சாகுமப்பா சவ்வீரங் கழஞ்சிலொன்று சடாமாஞ்சி வழஞ்சியஞ்சி முளகுநாலு, வாகுமப்பா குமரிச்சார் விட்டுஆட்டி மைபோலே ஆனபின்பு மைந்தாகேளு, வேகுமப்பா வில்லைசெய்து புடத்திற்போட வெள்ளையடா பவளமது வெளுத்ததீறே. 324

வெளுத்ததொரு பவளமடா மூலந்தீர்க்கும் வெளியான பவுத் திரமு முளைசீழ்புண்கள், தளுத்தபுத்து பருக்களுடன் ரத்தம்போகுந் தாகமும்போம் வாய்வுகளுந் தடையோயில்லை, பளுத்தவுடல் ரத்தமீறி சிவப்பேயாகும் பாருமினி பவளபற்பந் தேனில்கொள்ள, உளுத்தமாம் போலான உலகத்தோர்கள் ஓகோகோ மேகமெல்லாம் மொழிய லாச்சே. 325

## பவளபற்பம்.

ஆகுமப்பா பவளபற்பஞ் சொல்லக்கேளு அறையுறேன் பவள மது பலந்தானென்று, சாகுமடா மிறுதார் சிங்கியரிதாரஞ் சாதிருப்பி சவ்வீரங் கிராம்புநோரய், வாகுபெற நாலுமங்கே கழஞ்சுநாலு வரி குமரி பாலவிட்டு மைபோலாட்டி, பாகுபெற பவளத்தில் பிசரிமூசை பாரடியில் குமரிச்சார் பற்றிக்கொண்டே. 326

பத்தியதில் பவளம்வைத்து மேலுந்தாள்மூட்டிப் பருவோடு தட்டியிட்டுப் பலமெண்ணெய் நோய், அறைத்துலர்த்தி சீலேசெய்து ஆழக்குழிவெட்டி அதில்பரப்பி யெருவடிக்கி ஆறுகுகைவைத்து, பறத்திய னுமியிட்டுப் பாறவனலிட்டு பரைக்குமே பூசைசெய்து பருவமதிலெடுத்தால், நிறத்திறம் பவளமது வெளுப்பென்னசொல்வேன் நீறியது பொங்கிகுகை நிறைந்திருக்கும்பாரே. 327

## வங்கபற்பம், வெள்ளிபற்பம்.

பாரிந்தப் படிதானே வெள்ளிபற்பம் பகருகிறேன்ரூபாய்த் தவுடு பொடிபற்பாகும், வாரிந்த வங்கசத்தைத் தகடாய்தட்டி வலுவாக யுமிபோலே நறுக்கிக்கொண்டு, நீரிந்த பற்பாடகம் நிழலுலர்த்திடித்து நோக சீலேதனில் பறப்பிவங்கம், தேரிந்த பற்பாடக மதில்சுருட்டி கட்டி தீக்கொளுத்தி யிருதலையும் வெந்தாரியெடுமே. 328

## பித்தமேகத்தால் வரும்வியாதிகள்.

ஆச்சிந்த மேகத்தால் கபாலஞ்சூடாம் அடங்காத பீனிசத்திலெட்டுவாய்வு, மூச்சிந்த காசத்தி லாறுவாய்வு மூலத்தி லபானவரை மூலமாறு, லாச்சிந்த வகையாக நோய்களெல்லாம் வளமீறு மேகமே நோய்களுக்குராஜன், நாச்சிந்த மேகத்தால் சூலேபதினெட்டும் நடத்துகிற விதத்தையெல்லாம் நவிலுறேமே. 329

நவிலக்கேள் மேகத்தால் பித்தமீறும் நன்ருச்சு அரோசியங்கள் வேர்வைதாகம், நவிலக்கேள் வாதமொடு பித்தமையம் நடப்பின்றி பிரிபிரித்த கமலம்போலாம், நவிலக்கேள் கூடுவிட்டு கூடுபாயும் நாமழிக்கும் மேகத்தால் பித்தமீறில், நவிலக்கேள் சிரசுமுத லபான்வரை வெந்து நாகனென்ற கூர்மனெடு அபானன்கேளே. 330

அபானனென்ற தேவதத்தன் தனஞ்செயனேடு னரிவளிக்கும் வியானனெடு சமானன்திரிகானும்,வபானனென்ற பிருணனெடு வாய்வுபத்தும் வருமகாருசாவால் பின்செய்வார்கள், கபானனென்ற யிந்திரியம் வெந்துபோகுங் கவ்க்கிணத்தில் பாசிபற்றும் போலேதேக, மபானனென்ற அறிவுகெட்டு சூலேரோக மதிபோன்ற தேகமதை யழிக்கும் பாரே. 331

அளிக்குமப்பா யெலும்புரிக்கி வெட்டை சாய்க்கும் ஆகாகா தசையுரிக்கி ரத்தம்சாய்க்கும், களிக்குமப்பா யுள்ளிருந்து வெந்துவெந்து கடைகெட்ட நோய்களெல்லாம் வருகும்பாரு, பளிக்குமையா காசம்வெள்ளை தடிப்புவட்டம் பாழான புண்கறுப்பன் கைகள் கால்கள், கெளிக்குமப்பா சரீரமெல்லாங் குறுகிப்போகும் நோான சுக்கிலமும் தீப்போலாமே. 332

சுக்கிலமே தீயானு லினியேதய்யா சொல்லரிது அசனத்தை வேர்க்கும்பாரு, அக்குலமே அன்னத்தால் சமைந்ததேகம் அதுவெறுத்தால் சயமெட்டும் வருகும்பாரு, சைப்பிலமாய் திரியலாம் வாலைமட்டுங் கடைந்தாக்கால் கிருணியங்கே யாருமுண்டா, செப்பிளமா யமுதங்கள் வாங்கிப்போனல் செயமாக பிள்ளைகட்கும் நோயாம்பாரே.

பாருநீ சிரசுதனி லுண்டாம் ரோகம் பதினயிரத்து யெண்ணூற்று அன்பத்துநாலு, சாருமினி சரீரத்தி லரைக்குமேலே சாற்றுகிறே நாற்பத்து நாலாயிரத்து அறுனூற்றெழுபத்துரண்டு, ஆருமினி யரைக்குக்கீழ் பாதவரைமட்டும் அப்பனே யிருபத்து நாலாயிரத்து நானூற்று அறுபத்துநாலு, சேருமினி யூன்றுபங்காய் வகுத்துப்பாரு சிறப்பாக யெழுபதினுயிரம் நரம்புமாச்சே. 334

ஆச்சிந்த நரம்புக்கொரு வியாதியாகும் அடங்காது சொல்லவென்றுல் பெருநூற்பாரு, மூச்சிறுதான் விடுகாமல் பாடிப்போட்டேன் முக்கியமா மிந்தநூல் குறுக்கிச் சொன்னேன், போச்சிந்த பேச்சினிதா னேதுமைந்தா பிறந்தாக்கால் நோயில்லா திருக்கவேண்டும், வாச்சிந்த நோய்களெல்லா மேகாசாங்கம் வைக்கிறதோர் தயிலத்தின் வகைதான் கேளே. 335

கேளுநீ யமுக்கரு வில்வம்நொச்சி கெடியான சிறுகீரை நீர்முள்ளிநெரிஞ்சி, வாளுமலை தாங்கிவிலா மிச்சுயெட்டி மகத்தான சாரணையு மிலந்தை குருவிஞ்சி, நாளுமே யளிஞ்சிதூாய் சங்கங்குப்பி நன்னரி நாயுருவி நத்தைச்சூரி, மூளுமே மூக்கொளிஞ்சி குருந்தோட்டி பூலா நாய்க்கொட்டி நறுங்ண்டி செந்தொட்டி தண்டே. 336

தண்டோடு யிருபத்து அஞ்சுவகைவேருங் கடிதாக வகைக்கு அஞ்சு பலமதாக,துண்டமதாய் நறுக்கியிட்டு யிடித்துக்கொண்டு சுகமாக

பதினாறு மரக்கால்நீரில், ஒண்டவே பதினாறுக் கொன்ருய்க் காய்ச்சி யுறவாக வடிகட்டி வைத்துக்கொண்டு, கொண்டதொரு செங்கீரை முள்ளுக்கீரை கொடுவேலி சஞ்சீவி வாழைத்தண்டே. 337

வாழைத்தண் டோடஞ்சி வகையொன்றுக்கு வகைக்கஞ்சு பலமாக தூணிநீரில், கோழையன்றி யிடித்திட்டு சோடசத் தொன்ருக குருக்கிவிடு முன்கியாழ மின்னங்கேளு, ஆழையிலே முளகுவள்ளி முன்னைக் காட்டுபிச்சி அப்பனே முசுமுசுக்கை வெற்றிலையுங்குன்றி, பாழையன்றி கொடியாக வகைவகைக்கு பலமைந்து யிடித்துதுளதனிற்போடே, 338

இடித்திட்டு பதினாறுக் கொன்ருய்க் காய்ச்சி யிடுகலத்து முன்கியாழ மினிமேற்கேளு, வெடித்திட்ட சிவன்வேம்பு பற்பாடகம் விறுவெட்டை வெள்ளறுகு விஷ்ணுகாந்தி, கடித்திட்ட காந்தையொடு சிறுசின்னியாரை கற்குழை வல்லாரை வகைக்கஞ்சிபலமா, இடித்திடவே யறுமரக்கால் நீரில்போட்டு யெண்ணிரண்டாய்க் காய்ச்சிவிடு கியாழத்துள்ளே. 339

உள்ளபடி யின்னங்கேள் மருந்திருப்பை வாகையுரிசாகு மிளநெல்லிக் கீழ்க்காய் முருங்கை, வெள்வேலுங் கருவேலு மாலுமத்தி வேங்கையொடு பேய்க்கடுக்காய் சென்னகரைதவ்வல், முள்ளிலவு மாவலிங்கு புங்குதேத்தான் முதியாமல் காறத்து வேலுமச்சோடு, விள்ளவே பூவரசு அத்தியித்தி வேம்புகாட் டத்திகொன்றைப் பூவுகாணே. 340

காணிந்த வகைக்கஞ்சு பலமாம்பட்டை கங்கையொரு தூணிதனி லிடித்துப்போட்டு, பாளியொடு சூரணத்தொன் ருக்கியேதான் பதமாக வடிகட்டிமுன் கியாழத்தில்வாரு, வானியெனுஞ் சதாவேரி பிரம்புசேனை மால்வேறு கறுகுகொட்டி நெய்தலாகும், ஆனியாம் புளிநடலை கோறை நிபத்தல்லம் அல்லித்தாமரை காட்டு கறணை தானே.

தானுன கரிக்காளை சீனிகந்தம் தருவான முள்ளங்கி தண்ணீர்மிட்டான், பானுக பிடித்தந்த சாடிதன்னில்கொட்டி பதமாக முன்போலக் கியாழம்வாங்கி, தேனுன கியாழத்தில் கியாழஞ்சேரு செப்புகிறேன் மூங்கிலிலை தென்னமட்டை, மானேகேள் பனமட்டை தாளை விழுதோடு வளாுமல் விழுதுடனே வகைக்கஞ்சாமே. 342

அஞ்சுபல விதமப்பா தரித்திடித்து அடவாக நால்மரக்கால் நீரில் போட்டு, மிஞ்சாதே யெட்டொன் ரூய்க்குறுக்கி விரவியதை கியாழத் தில் விட்டுபின்பு, புஞ்சாதே தென்னம்பூ கமுகின்பூவும் பூவான பிச் சைமுல்லை வாகைப்பூவும், கொஞ்சுகின்ற கொண்ணப்பூ புரசுமாம்பூ கோதையரே மந்தாரை தாழம்பூவே. 343

பூவான மருந்தொன்று நந்தியாவட்டம் பூவிலுப்பை யிருவாட்சி புங்குநவ்வல், காவான செண்பகப்பூ வில்வப்பூவுங் கருவான செங்கழு நீ ரல்லியல்லி, கோவான யிளநீர்தா னிருதூணிக்குள் கொட்டுவாய்ப் பதினுருக் கொன்ருய்காய்ச்சி, தேவான கியாழத்தில் வடிகட்டிவாரு செவ்விளநீர் கிடைத்தாக்கால் சிறப்புதானே. 344

சிறப்பாய்க்கேள் கியாழமதை பத்திரமாய்வைத்து செப்பரிது த யிலத்தின் முடுக்குமெத்த, உறப்பாக யின்னமொரு சேதிகேளு உத்த மாம் நாறத்து வில்வம் விளாவும்வாழை, மறப்பான யெலுமிச்சு கெஜ விஞ்சிஞேடு மாம்பழமு மாதளையுங் கொமட்டிதானும், நிறப்பான கொன்றையத்தி சங்குதேத்தான் நிலையானமுந்திரிகை பேரீந்தோடே.

தோடந்த பழங்களெல்லாஞ் சொல்லக்கேளு சுகமாகப் படிக்கஞ் சு படிச்சாருக, ஆடந்த ஆவின்மோ ரிருதூணிக்குள் அடவாக பூரண த்தொன் ருக்கிச்சேரு, நாடந்த நாறத்துவிரை யெலுமிச்சோதி நல்ல தொரு கொளுவிஞ்சிக் கொட்டிதானும், வாடந்த மாதளையின் கொன் றைதானு மாம்பழமும் வெவ்வேறே வகையொன்றுக்கு. 346

வகையொன்று விதைபலந்தான் பத்துவீதம் வளமான சரக்கை யெல்லாங் கியாழஞ்செய்து, துகையொன்று சொல்லக்கேள் மருக் கொழுந்து செண்பகப்பூ யிருவாட்சி மருவும்நவ்வல், முகையொன்று வாகைபுளி யாரைபுங்கு முறைமசக்கி பெருந்தேக்கு துடரிவேம்பு, த கையாதே வகைக்கஞ்சு பலந்தாஞக தப்பாதே யாவின்பால் விருதூ ணிக்கே. 347

இருதூணி யாவின்பால் குறுணியாக்கி யிதமாக புளித்துவடி கட் டிவாரு, யொருதூணி பாலதிலே வெள்ளாட்டுப்பால் உறவாக்கி வார் த்துவிடு கியாழத்துள்ளே, விருதான கையான்சார் முருக்குப் பட்டை

மேனியமாம் பச்சரசி பொன்னாங்காணி, யுருவான துளசிசிறு பீளை
நொச்சி யுத்தமனே வாதத்தை யடக்கியென்றே. 347

ஒன்றான சிறுசெருப் படையினோடு உறவாக வில்லிலா மிச்ச
ங்கோரை, நன்றான வீழியொடு மணத்தக்காளி நலத்தகரைத் தக்காளி
யிலவுவெள்ளை, யென்றான கண்டுபொன் முசுட்டைதானுஞ் சிறப்
பான வெற்றிலையோ டாலுங்கேளு, கன்றாதே வகையொன்று சாறு
படிரண்டு கட்டகக் கியாழத்தில் கலந்துவாரே. 348

வார்த்தபின்பு லோகத்தார் பிழைக்கவேண்டி வளமான கியாழ
மொன்று சொல்லக்கேளு, சேர்த்தபின்பு வில்லைவிளா வரிகைசெகத்
தான சிறுநெரிஞ்சி பெருநெரிஞ்சி நீர்முள்ளியிலவு, கார்த்தபின்பு ணாயு
ருவி நத்தைச்சூரி கழஞ்சிகொட்டை செங்கொட்டை பூனைக்காலி, ஏர்
த்தபின்பு ஆவாரை கருவெள்வேலி யிதமான மாதளைப்பூ வாசுகொ
ன்றை. 349

கொன்றையொடு வகையொன்று பலந்தான்ரண்டு கூறக்கேள்
கதலியுட கிழங்குச்சாறு, நன்றாகத் தூணிநீர் தன்னில்மைந்தா நலமாக
வித்தெல்லா மிடித்துப்போட்டு, ஒன்றாக சோடசத்தொன் றாக்கிக்
கொண்டு உறவாகக் கியாழத்தில் பின்னங்கேளு, சென்றாடுங் குக்குல்
பெரு மறத்தின்பட்டை சிறப்பான வண்டுகொல்லி மரமஞ்சளாமே.

மஞ்சான மரமஞ்சள் கஸ்தூரிமஞ்சள் வாய்விளங்கம் வால்மிளகு
வெள் வெங்காயஞ், செஞ்சானஞ் சந்தனமுந் தேவதாரந் தக்
கோலஞ் சித்தரத்தைக் கிளியூரல்பட்டை, துஞ்சுமடா திரிபலையுஞ்
செண்பகப்பூ செவ்வியந் துடருமடா சடாமாஞ்சி கற்கடகச், சிங்கிம
ஞ்சிட் டியிலங்கங் கருவாய்ப்பட்டை வளமான தகரவிரை சீனந்
தானே. 351

தானென்ற சிறுதேக்கு கொத்தமல்லித் தன்னோடு வெட்பாலை
அரிசிகார்கோல், ஊனென்ற செவ்வள்ளிவேல் பிசின்வெம்பாடல் உத்
தகடு றோகணியும் வெந்தயத்தினோடு, கானென்ற பெருங்குரும்பை
பீதரோகணியுங் காரானை திப்பிலியுங் கடலிரஞ்சி, ஏனென்ற வலம்புரி
க்காய் வசம் பீருள்ளி யிசையான காமப்பூ மேனதகாணே. 352

காணுநீ வசுவாசி நாட்டு சீரகமுங் காட்டுள்ளி கந்தமொடு கருஞ் சீரமோமம், வேணுதே சாபுரமுஞ் சாத்திரவேதி விளங்குபுல் கடுகுட னே ருத்திராட்சம், பூணுமிருக் கொம்புதந்தங் கலைக்கொம்போடு புக ழான அதிவிடையஞ் சிவதைதானும், பேணுகின்ற கிரும்புடனே பத் திரியங்கூட பிலமான சதகுப்பி அக்குராவே. 353

அக்கிரா காரமொடு பெருங்காயந்தான் அலைவாயின் றுவாயுட னே கல்ப்பாசிதானுஞ், சிக்காதே நாகேசுரந் துயங்கல்க்காவி செம்ப ஞ்ச சாயவே சற்பங்கோடு, சொக்காதே வகையொன்று கழஞ்சி கேளு தாக்கடா பூரணந்தான் ரெட்டிவீத, மெக்காதே யிளநீரும் பத் தூண்டு மிரைபாகம் படியளந்து வாருவாரே. 354

வாதத்தில் மருந்தெல்லா மிடித்துப் போட்டு வாகாக பதினாறுக் கொன்றாய்க்காய்ச்சி, கூதத்தில் வடிகட்டிக் கியாழத்தில்வார் கூறக் கேள் கொம்பறக்கு கெருடப்பட்டை, சேகத்தில் அஞ்சனக்கல் கல் னூர்தானுஞ் செப்பரிய வாளமொடு முத்துசிப்பி, காதத்தில் குந்தரிக்கங் சருங்குந்தரிக்குங் கவனமென்ற வெள்ளைகுந் தரிக்கம்பாரே. 355

பாருநீ சாம்பிறாணி சூடன்சீனம் பண்பான கல்மதமும் வகை யொன்றுக்குச், சேருநீ பலமொன்று யிடித்துக்கொண்டு சிறப்பான தாழையிலை சாருவாங்கி, வாருநீ முக்குறுணி நீரில்போட்டு வாரமுடன் பூரணத்தொன் றாகக்காய்ச்சி, சேருநீ வடித்திறுத்து கியாழத்தில்வார் சிறப்பாக யெண்ணெய்விடச் சொல்லக்கேளே. 356

கேளுநீ யெள்ளெண்ணெய் படியீரஞ்சு கெடியான நறுநெய்யும் படிதானைந்து, வாளுநீ யேரண்டத் தெண்ணெய்கேளு வளமாக படி யைந்து முக்கூட்டாக, வாளுநீ யடுப்பேற்றிக் கியாழஞ்சேர்த்து வா கான தீப்போடு மண்டலந்தானப்பா, கோளுநீ வாராமல் நந்திபூசை கொடுத்தவரை யாகுகிசெய் யெண்ணெய்க்குள்ளே. 357

உள்ளபடி யின்னங்கேள் கற்கஞ்சொல்வே னுத்தமனே திரிகடு கு சிறுநாவற்பூ, தள்ளவே யேலமொடு பூலாக்கிழங்கு தகரையொடு

அதிமதுரங் கோஷ்டம் சீரகமு, மள்ளலெனும் வங்காளப் பச்சைகூட்டி வளமான உரத்தோடு மகரப்பூவுங், கொள்ளவடா வீரமறி தாரங் கெந்தி கெடிதான சவுக்காரஞ் சதிக்காயே, 358

சாதிபத் திரிபலேயும் ஐங்காயந்தான் சடாமாஞ்சி கல்காரி லவுங் கப்பூபட்டை, நீதியா முப்பத்து ரண்டுவிதம் நிறுத்திடுவாய் கழஞ்சியது பாலிலாட்டி, சோதிபெற யெண்ணெயிலே கலந்துகொண்டு சுப்ரமண்யர் பூசையிரா லாகுதியேசெய்து, வேதியர்க்கு அன்னமிடு விநாயகர்க்கும் விளங்கவே பூசைசெய்து கூறக்கேளே. 359

கூருன தயிலமது மெழுகுபதமானல் கொத்தவன்றன் விரலாளி தயிலத்துள்ளே, வீருன தயிலத்தில் விரலிட்டுப்பார் விரலாழி அதை யெடுக்கச் சுடாதுபாரு, வாருன வசதிமான் வயித்தியனே யானல் வளமாக ருசாங்கத் தயிலம்வைப்பான், போரான சித்தர்களே செய்ய வேண்டும் பிணிகொண்ட வயித்தியனல் முடியாதென்னே. 360

என்னவே தயிலமது பதமாங்காலாம் யெடுத்தபொரு நோய்களெல்லாந் தீருந்தீரு, மன்னவே சிவயோகி வடிக்குங்கால வடிகலசந் தனிற்போட மருந்துசொல்வேன், பன்னவே நறும்புனுகு சவ்வாதிேேடு சாதிகோ ரோசினையுங் குங்குமப்பூபூரஞ், சொன்னமொழி தவருதே சாதிகஸ்தூரி சோடசமாம் பூரணமாய்த் தூக்குதூக்கே. 361

தூக்கென்று லகிரியடா ஆத்தாள்பூசை சொல்லரிது பானமுண்பான் தெய்வமென்பான், மூக்கென்று சுழிமுனையில் லென்தாய்கூத்தே முசியாமல் பார்த்தவர்க்கு மிறப்பிறப்புமில்லே, வாக்கென்றல் தப்பாது மச்சகேந்திரா மறந்துவிட்டோம் முன்தானே கியாழமென்று, பாக்கொன்று மிளகொன்று வகைக்குயேழு பத்தாறு நாலுபலம் பகுந்துபோடே. 362

போடுபல மோனருக்கு சிலம்கடித்தான்விட்டு புகழாக யெட்டொன்றுய்க் குறிக்கிவாரு, ஆமப்பா புலத்தியனே தயிலமெத்த அனுமக்கு அருளிருந்து அடியோர்க்கீந்தால், பாடுமெத்த யெண்ணுதே முடித்தாயானல் பரப்பிரம்மா லன்றியினி பிணிவேறில்லே, வீடுமப்பா பிலத்துதடா சிறிதுகாலம் விளேயாட மாதர்களும் விரும்புவாரே. 363

விரும்புவார் தயிலத்தை முறிந்தாலய்யா விருதுபெற்ற கன்னியர்கள் மருவுவார்பார், அரும்புவார் வண்டுவந்து முகந்தாப்போல ஆசைகொண்டு கன்னியர்க ளலைவார்மைந்தா, கரும்பொழுகி போலிருகிக் கட்டியாம்போ லதையெல்லாம் வச்சிரமிட்ட காயமாகும், பெரும்புகழாய் சொல்வானேன் செய்துபாரு பிணியற்று நரைதிரைபேரம் சொர்னமாமே. 364

சொர்னமாந் தயிலமதை வடிக்கும்போது சுந்தாமே சொல்லுகிறேன் மருந்துஐந்து, மன்னநடை அம்மிதனில் பொடித்துப்போட அகலமாந் தாழியொன்றில் ஓலைப்பூவு, பின்னமன்றி பிச்சிப்பூ முல்லையிருவாட்சி பெருவகில் சண்பகப்பூ பெரியதாக, வன்னமாம் பாத்திரத்திலேந்துந்தூவி வடிதாளி கிராம்பதுவும் நெல்லும்போடே. 365

நெல்லுமேல் தாளிநன்றாய் யிருத்திவைத்து நேமிசிவ காமாட்சி பூசைசெய்து, வெல்லுமே வடித்துநன்றாய் விநாயகர் முன்பாக விடுவாச மருந்தோடே வைத்துப்பூசி, வெல்லுமே நாராயண வயித்தியபாகம் விதித்தவரு காலிலொன்று பூசைபண்ணி, வல்லபமாம் வயித்தியர்க்கு வெகுமானஞ்செய்து மனதுவா தெட்சணைகள் திறக்கச்செய்யே.

செய்யவே சோம்பாதே ஆசியாதே சிறப்போடே யுபசாரஞ் செய்வாய் நன்றாய், வெய்யலே யூழியம்போல் சினேகம்போல வெறுவசனம் நட்பொன்று மனதில்கொண்டு, தொய்யவே வயித்திய பாகத்தையீயார் தொழிலாளி யைதெரிந்தால் மாயோன்சாபப், பையவே யிருந்திறுக்கும் நாயோமிஞ்சும் பத்தமுத்தத் தயிலத்தைப் பதனம்பண்ணே. 367

பண்ணுன தயிலத்தில் பூநீறப்பா பாங்காக கழஞ்சுரண்டு பொடித்துத்தூவி, ஒண்ணுன நெல்லுக்குள் புதைத்துவைப்பா யுத்தமனே பொருந்துநாள் பார்த்துமுழ்க, கண்ணுன சீக்காயும் வென்னீரோடு காயமெல்லாஞ் சந்திரன்போ லொளியேவீசுங், கண்ணுன தயிலத்தின் வாசங்கேழ்க்கில் காணுது நோய்களெல்லாந் தவறிப்போச்சே.

தவறுமல் முழுகிவரில் மண்டலத்தின் தயிலத்தின் பெருமைதன்னை சொல்லக்கேளு, தவறாதே மேகமென்ற திருபதுந்தான் தருகாது கடல்புக்குஞ் சூலைபதினெட்டுந், தவறாதேசயமெட்டுங் குன்மமெட்டுங்

தடையில்லா கிராணியுமோ ஆறும்போச்சு, தவறாதே பாண்டாறு மூலமாறு தனித்துவிடு மிருவதுநீ ரினிலும்பாரே. 370

பாருநீ வாதத்தி லெடுத்த நோய்கள் பறந்துதடா பீனிசங்கள் கபாலவாய்வு, சேருநீ தேகவலி யுளைவுகாந்தல் சேகறுச்ச பித்தமெல் லா மெரிவதாக, மேருநீ யன்றவிஷ நீர்த்தோஷங்கள் மீறுமஸ்தி ரோ கங்கள் நயனரோகஞ், சேருநீ குலவகை மேனிகட்டுவீக்கந் துயர மாம் வெளுப்போடு தடிப்புப்போச்சே. 371

போச்சென்றால் குட்டவகை பதினெட்டுந்தான் புகழான பெரு வியாதி கரைப்பான்காச, மூச்சென்ற கிரந்திபதி னெட்டுந்தானே மூளையான சூனியங்க ளெல்லாம் போகுங், காச்சென்ற தயிலமது வருடமூழ்கில் கடல்புக்கு மேகரா சாங்கத்தாலே, ஆச்சென்ற வச்சி மிட்டகாயமாச்சு ஆகாகா யின்னமூன்று சொல்லக்கேளே. 372

கேளப்பா தயிலமது பதமாங்காலாங் கிருபையுள்ள சித்தர்களுஞ் சிவயோகிக்கும், வாளப்பா நவசாபந் தீர்த்துக்கொண்டு வயிரவற்கு மனதுவரப் பூசைசெய்து, கேளப்பா வாராதுயென் சாபந்தீர்த்து கொடுத்திடுவாய் மன்னர்கயி லஞ்சுமோதி, வேளப்பா யெரித்தசிவன் நிர்த்தஞ்செய்வான் வெகுமோக வசிகரமாந் தயிலப்போக்கே. 373

போக்கிதுபோ லில்லையடா தயிலப்போக்கு பொல்வாத பாவி யென்றால் வாய்தப்பாது, ஆக்கினிசோர் குளிந்துவிட்டால் தண்ணீ ராகும் அறிந்துசெய்வான் வயித்தியன்தான் பிர்ம்மாவாச்சு, வாக்கு மன தொன்றாகிச் செய்தவர்க்கு மைந்தனே கனகாபி ஷேகஞ்செய் வாய், நீக்குங்கள் மருந்தெல்லாம் வேண்டாம்பாரு நெடுமாலின் சொ ரூபமென நிறமுமாமே. 374

ஆமப்பா ஆலயங்கள் சுயம்பாம்லிங்க ஆண்டவனுர்க் கித்தயில மபிஷேகஞ்செய், தாமப்பா வெள்ளியென்ற வாரந்தோறுந் தருகா மல் மண்டலந்தான் அரைக்கால்வீதம், நாமப்பா மனமுருகி அபிஷே கஞ்செய் நறசென்ம மல்லவடா தேவன்தேவன், போடுமப்பா புழுவு மெல்லா மொழிந்துபோச்சு புண்ணியவானுனைக்கால் தயிலஞ்செய்யே.

தயிலமது காசிடைதான் பொற்கிண்ணத்தில் தாண்டவஞ்செய் நடராசர் சபைகள்தோறும், தயிலமது தேன்கலந்து செய்வேத்தியஞ் செய் தர்ப்பரமா மருணகிரி நாதரேக்ஷர், தயிலமது தங்கமையா தின முங்கொள்ளத் தங்கம்போல் தேகமுமாந் தடையோயில்லை, தயிலமது கர்மமடா ரிஷிகள்சித்தர் தான்மூழ்கச் சிவமேருந் தடைபடாதே.

சிவமேறும் வசிகாங்க லெட்டுமோடுஞ் சீவகளை லெட்சுமியின் கா ந்தியுண்டாந், தவமெய்தும் விட்டகுறை யானல் வாய்க்குஞ் சண்டா ளர்க் கித்தயிலம் வாயாதையா, பவமேரி பாதகநோய் கொண்டோர்க் கப்பா பணவிடைதான் கொண்டுவிடநோய்கள்தீரும், அவமான பாத கர்க்கு யீய்ந்தாயானல் அரகரா சாபமுண்டு அறிந்துசெய்யே. 377

செய்வதுதானருக்கு சிவயோகிக்குத் திரவில்நின்ற சித்தருக்குஞ் சிவகாமிக்கும், ஐவருக்கா மாதாா மாதிதாய்க்கு ஆமப்பா ராசாங்கம் அருமைமெத்த, வையகத்தில் கீர்த்திபெற்ற மன்னர்க்காகு மகாமேக ராசாங்கம் வைத்தவனேதேவன், பையவது செய்பாகங் கைபாகங் கள் பாடினே மாயிரத்து யிருநூற்றில்காணே. 378

ஆயிரத்து யிருநூற்றில் தயிலமெத்த அறைந்ததி லோர்சங்கமிது போலில்லை, காயாத்த மூருமடா பொய்யோயில்லை கடினமப்பா நரை திரைபோம் வருஷமூழ்கில், சாயுச்சியம்பாடவருஞ் சரஸ்பதியுஞ் சொ ல்வாள் தயவானதிரூேதாயி சாய்ந்துபோவாள், தாதுவிர்த்தி யுண்டா கும் நோயுந்தீருந் தவத்தினல் பிதுதவந்தான் செய்துகொள்ளே. 379

செய்வதுதான் தயிலவகை மெத்தவுண்டு சிலதயில மேற்குமடா சிலதேருது, வையகத்தில் மானிடர்க்கு நோய்கள்பேதம் வகைவகை யாய் முகபேதஞ் சரீரபேதஞ், சைவமது மாங்கிஷமுஞ் சத்திபேதஞ் சாதுரிய தொழில்பேதம் ஊணின்பேதம், பொய்களவுகட்காமங் கலை கள்நிந்தை போட்டஞ் சினைபோக்கிப் பொறிபோல் சொல்லே. 380

## சந்தனுதித்தயிலம்.

சொல்லிவந்த வயித்தியந்தான் ரண்டுலக்ஷந் துகையதிலே தயில மது கோடாகோடி, சொல்லிவந்தே னறுநூற்றில் சந்தாதி சொல் பெரிய தயிலமையா சுருக்குமெத்த, அல்லல்துய ரகற்றிவிடும் நோயுந்

தீரும் ஆச்சரியத் தயிலமருந் ததைநீகேளு, கல்லாந்த சட்டையது பலமுமெட்டு நாலிரண்டு பெண்மரக்கால் நீரில்போடே. 381

பொடியாகத் தரித்திடித்து அனலில்வற்றி புகழான கியாழமது குருணியானல், வடிவான நல்லெண்ணெய் குருணிதன்னில் வடிகட்டி வரித்துவிடு கியாழந்தன்னை, குடியான கணபதியுங் கந்தனையு மப்பா கும்பமுனி சாபமது நசிநசியென்றேதி, அடியான தூர்கனத்த நார்ப் பரைக்குளப்பா அரகரா கற்பதனை அனலில்போடே. 382

போடேநீ யிருவெளிதா மரையின்வளையம் புகழ்பெரிய விலாமிச்சு நன்னரிவேரும், போடேநீ முத்தக்காசும் வகையொன்றுக்கு புகழாக பதினாறு பலமேதூக்கி, போடேநீ தூணிசலந் தன்னில் வைத்துப் புகழ்பெரிய தயிலமதில் கூடவாரு, போடேநீ யெருக்குவாழை குமரிவாழை புகழான கார்த்திகையின் கிழங்குஅஞ்சே. 383

அஞ்சுமே வகைக்குபலம் பதினாறுக்கி அப்பனே அரைத்தூணி சலத்தில் வற்றில், தஞ்சமென்றே தயிலத்தில் கூடவாரு தருவான வெட்டிவேர் பலந்தாநாலு, மிஞ்சாமல் மிளகதுவும் பலந்தாநாலு மீறு பூ லாவிருக்ஷம்பலந்தாநாலு, கொஞ்சுகோஷ்டம் தேவதாரம் பலந்தானெட்டு குறிக்கிசலந் தூணில்வைத்து கூடவாரே. 384

வாரேநீ யகில்கட்டை யமுக்குருமல்லி வளர்வேங்கை வில்வவேர் வகையொன்றுக்கு, பாரேநீ பதிநாரு பலமாய்த்தூக்கி பக்குவமாய் தரித்திடித்து பாணிபதினறில், நீரேநீர் வத்தியபின் னெட்டொன்ருக்கி நேர்மையுள்ள தயிலத்தில் வடித்துவாரு, சேரேநீ பட்டையுடன் வேர் கியாழங்கேளு கிறந்தனுல் அரசு அத்தியித்திநவ்வல். 385

ஆத்திகுரு கொட்டிநல்லி மருதுஆத்தி ஆவாரை மாதளை உருசுவேல் வெல்பூலா, பாத்திசரக் கொன்றை நெய்தல் வளையும்வேம்பு பாங்கான சாரணையுஞ் கிறுகீரைவேருங், காத்திகரு வேல்ப்பட்டை சீந்திகல்லோட்டி கயல்வேளை நொச்சிவேர் நத்தைச்சூரி, பாத்தியாய் வகைக்குபல மெட்டாய்தூக்கிப் பாருலகில் தரித்திடித்துப் போடுவாயே. 386

போடுவாய் சிலவதுதான் நூணித்தன்னில் பூரணத்தொன் ருக்கி வைத்து தயிலஞ்சேரு, சாடுவாய்பச்சிலையின்சாருகேளு சதிகரிப்பான்

வல்லாரை விலாத்திமுசுமுசுக்கை, நாடுவாய் சரையிலையுந் துளசிபொ ன்னாங்காணி நலமானதென்னம்பூ கீழ்க்காய்நெல்லி, கூடுவாய் குமரி நெல்லிமிளகுதக்காளி குணமாகும் முடக்கொத்தான் கணப்பூடு வெள் அறுகே. 387

வெள்ளறுகாம் வெற்றிலையும் பருத்தியெலை முசுட்டை வெத்தி சிரு செங்கழுநீர் கருவேம்பிலையும், பள்ளமென்ற பொடுதலையும் பிறமிவெட்பாலை பாருமெத்த சாருவகை படிரண்டாய் பிழிந்து, வள்ள ளெனுந்தயிலத்தில் கூடவாரு வளர்பசுவின் பால்குருணி கூடவாரு, கொள்ளவிஞ்சி யிருள்ளிச் சாறுபடிநாலு குணமான யெலுமிச்சம் சாறுபடிரண்டே. 788

ரண்டாகு மிருநான்கு ஆறுமாதக்காடி யியலான சாயவேரண்டு பலம்லைத்து, பண்டாகும் பசுவின்மோர் பசுயிரெட்டில் பருமிளகு பலமெட்டு பாக்குபலமெட்டு, துண்டாகும் வயித்தியது பூரணத் தொன்றாக்கி துயர்தீருந் தயிலமதில் விட்டுக்கிண்டு, அண்டர்தொழு தேத்துமிந்த தயிலத்தில் கரக்கம் அரைமஞ்சள் மரமஞ்சள் கஸ்தூரி யாமே. 389

வே று.

ஆமேதிரிபலைதிரிகடுகு அரத்தைஒமம்அதிமதூரம்
நாமேசிங்கிநறுக்குமூலம் நல்லகோஷ்டம்நாகப்பூவு
காமேவெந்தியமாசக்காய் கறுத்தவெட்பால்விளாவரிசி
தாமேயமுக்குருவெம்பாடல் தனித்தகடுகுரோகணியே. 390

பிராணியேலமிருசீரம் பத்திரிகிரும்புசாதிக்காய்
கிராணிகல்நார்கல்மதமு மகிறும்தேத்தான்வால்மிளகு
அராணிசிவதைகெருடபச்சை ஆடுந்தேக்குபிலவங்கம்
புராணிகூகைநீற்றுருசு புகழாம்பாசிவகைக்கெட்டே. 391

வகைக்குக்கழஞ்சியெட்டாக மானுருரலில்தானிடித்து
தகைத்தயிளநீர்தனில்நனைத்து சார்ந்தவம்மியில்தானரைத்து
புகைத்தயிளநீரில்லாது புதிதாய்சலமொன்றாகாது
பகைத்தபாகந்தப்பாமல் பாருமுன்னீர்தனில்கரையே. 392

கரைத்துவாருதயிலத்தில் கற்கமடியில்பிடியாமல்
சுரைத்துவிரிந்தவகப்பைதன்னால் சுழலக்கிண்டுகைவிடாமல்
நெறைத்தமருந்துபின்னால் நிறையுமரைப்புங்கியாழுமே
குரைத்தயெரிப்புகைப்பாகங் கேளுந்தயிலமெல்லோர்க்கும். 393

எல்லாரும்பண்டிதரே யானால்பினியேதுபூமிதனில்
வல்லாநூல்கள்வாகடமும் வளருந்தாதுபிணியிருந்து
கல்லாநூல்கள்பாராமல் காடுமலையுஞ்செடிபூடுஞ்
சொல்லாமசக்கும்வயித்தியற்கு தொழில்கள்வொன்றும்பலியாதே.

பலிக்குந்தயிலம்வடிப்பதற்கு பாகவாசமிடுஞ்சாக்கு
கலிக்கும்பூரம்புனுகுசட்டங் கஸ்தூரியுங்குங்குமப்பூவும்
அலிக்குங்காளைகோரோஜனையும் அளகாபுமமும்வகையொன்று
சலிக்குங்கழஞ்சிமூன்றாக சாரப்பொடித்துவாரிவையே. 395

வைக்குந்தயிலமகாராசா மாதுபோன்றிருப்பவற்காம்
செய்க்குள்விளையும்வெல்லாமை சீருமேகஞ்சிலந்தந்தால்
தங்கவுழுதுபலன்காண தருவான்குருணிகொருகொட்டை
பைக்குளடங்கும்பசுவுக்குப் பருகுமேய்ப்பும்பலந்தருமே. 396

உருமேதயிலம்நெய்க்கிறுதங் தாயாம்பற்பஞ்செந்தூரம்
உருவாம்லேகியமாத்திரைக்கு மொன்றுங்குறைந்தாலாகாது
கருவாம்பாகங்கைமுறையுங் கனிபோல்மனதுசோம்பாமல்
அருமைஅருமைதியானத்தால் அபிஷேகஞ்செய்யகமனத்தால். 397

கனகமப்பாதயிலமொன்று கடினமேகராசாங்கம்
எனவேதயிலமேவாதி யெல்லாந்தீர்க்கும்சந்தனாதி
வெனலாம்விளைக்கும்விழ முட்டோநாலுதயிலத்தில்
அனலைமாத்தும்சந்தனாதி அறைந்தோம்வகையாய்வைத்திடுமே. 398

வைக்குந்தயிலம்பதம்பார்த்து வடிக்குமெழுகுதிரண்டபதம்
அய்க்குமைந்துகாத்தோனை அழகாமயில்வாகனனையுந்தான்
மைக்குளாடும்நிர்வாணி மைந்தாரிஷிகள்நவகோடி
நெய்க்குள்வடையும்பொரிகடலை நிலையாம்பழமுந்தேங்காயே. 399

காயுங்கரும்புஞ்சர்க்கரையுங் கனிவால்மிளகும்வெற்றிலையு
மாயும்புஷ்பதெட்சணையு மகிழ்ந்தேநாழியினிமறக்கால்
தாயும்லெட்சுமிதீபம்வைத்து தருவாய்சாம்பிராணிதன்தூபம்
நோயுந்தீர்ப்பார்கும்பமுனி நூறுவகைக்குமுந்நூருசெபியே. 400

செபித்துசாபம்நிவர்த்திசெய்து செயமாந்தயிலமதனைவடித்து
சபித்துவடிக்கும்பத்திரிதான் கழுவிதூபந்தான்காட்டி
குவித்துகுறுணிநெல்லின்மேல் குணம்யிருத்திபாத்திரத்தை
புவித்தபுஷ்பம்பிச்சிப்பூ கொழுந்துமுல்லைபூப்பரித்தே. 401

பரித்துயதன்மேல்பொடிவாச மருந்தைத்தூவியடுப்பில்நின்று
எரித்துகொதிக்கும்தயிலமதை யிறக்கிபுதுசாய்க்கம்பளியிற்
கரித்தகடுகுட்படநிகழ்த்தி கரியகூட்டகம்பளியை
வரித்துகட்டிக்கட்டநன்ருய் வலித்துமுறுக்கிப்பிழிந்திடுமே. 402

பிழிந்ததயிலம்பெருமைதனைப் பேசப்போமோபிள்ளாய்கேள்
அழிந்தசடமாம்லோபிக்கு ஆகாத்தயிலம்வாயாது
யொழிந்தபூசாபலத்தினலே புகழாங்கற்பஞ்சிவயோகி
தெளிந்தமனதுபின்வாங்கார் நில்லாராசர்க்கொப்பாமே. 403

ஆமேஒப்புஆருமில்லை அறிந்தமட்டும்நாமுரைப்போம்
நாமேசொன்னேம்சிவனுக்கு நாட்டில்சுயம்பாஞ்சிவலிங்கந்
தாமேதயிலமபிஷேகஞ் சாத்தும்படியுமண்டலங்கால்
போமேபாவந்தலைமுரைக்கும் பிதிர்க்கள்சொற்கமடைவாரே. 404

வேறு.

வாருன தயிலமதை வடித்துக்கொண்டு மாதுசிவ காமிசிவன் சொன்னவாக்குத், தாருன தானியபுடம் வைத்துக்கொண்டு தவாமல் மண்டலமே முழுகுவாய்னீ, பேருன வென்னீருஞ் சீக்காயாகும் பிள்ளாய்நீ புலத்தியனே மச்சகேந்திரா, தாருன வயித்தியபாகம் நாலிலொன்று தயவாக கொடுத்துநீ வெகுமானஞ்செய்யே. 405

செய்துவரும் வயித்தியருக்கு மனங்கோணமல் செயமாகத் திருத்திநீ செய்யாவிட்டால், அய்யேகேள் சாபம்வரும் நோயுந்தீரா அறி

ந்துகொண்டு சாஸ்திரமும் அவிழ்த்துபார்த்துக், கொய்துவிட்ட மாம் போலே வாடிப்போகுங் குடியிருந்த நோய்களெல்லாங் கடலேபுக்கும், பையநின்று அறுத்துவிடும் வியாதியெல்லாம் படரான சடலநோய் கள் பறக்குந்தானே. 407

பறக்குமடா மேகமறு பத்துநாலும் பதியிருந்த மூலமுதல் பவுத் திரமும்வாய்வு, பறக்குமடா கணைவாய்வு அஸ்திமேக மதிசார கிரு ஷ்ணமூல நீரிழிவு, தூக்குமடா கெட்டகண்ணுங் கபாலவாய்வுஞ் சூலைசய மந்தார காசமெட்டும், நிற்குமடா வெளுத்திருந்த உடலில் ரத்தம் நின்றபித்தஞ் சோகைமுதற் பாண்டுபோமே. 408

போகுமடா அக்கினிமந்தம் அபானச்சூடு பொல்லாத வாய்வி ரைச்சல் அரைச்சோர்விழுதல், நோகுமடா லஸ்திமுதல் தசைபுண் ணுகி நொந்தபுண்ணு மாறிவிடுந் தாகம்வேர்வை, சாகுமடா ஒன்றொ ன்று வாதபித்த சேத்துமந் தலைகாலாய் பிறிந்துதன் நிலையில்நின்று, யாகுமடா அடிவயிற்றில் சுரந்தவிக்க மபானனொடு சமானனையு முதா னன்தானே. 409

தானென்ற நாகனொடு திரிதேவதத்தன் தனஞ்செயனோ டெழு வாய்வுங் கடையோயில்லை, பானென்ற வ்யானனொடு கூர்மன்ப்ருணன் பத்துபே ரேவல்செய்யுந் தளவாய்சித்தன், ஆனென்ற ஐவருமே பஞ்ச கர்த்தாள் அழகான கரணங்கள் நாலுஞ்செய்வாய், தானென்ற தத் துவங்கள் தொண்ணூற்றாறுங் கணக்கில்லை தயிலத்தை மூழ்கிப்பாரே.

மூழ்குவாய் மண்டலத்தில் நோயுந்தீரு முன்பின்னாய் சொல்ல வில்லை தயிலப்போக்கு, வாழ்குவாய் வேதாந்தஞ் சித்தாந்தம்ரண்டும் வழங்குகின்ற கிரந்திமுதல் குன்மமீளும், ஆழ்குவா யணைத்திந்த ஆயி ரத்திருநூறும் அப்பனே சூத்திரந்தான் பொய்யுமில்லை, தாழ்வுந்தான் வாராது சஞ்சீவியது தயவாக அறுநூற்றில் அறைந்தேன்பாரே. 411

அறைகிறேன் பழிதவருன் பத்தியந்தான் அறையக்கேள் பத்தி யந்தான் முழுகுமுறைதோறும், அரைகிறேன் கைப்புளிப்பு புகையி லையுமாகா அசடான கனிவகைகள் பலகாரமாகா, அறைகிறேன் பால்

மோருந் தயிருமாகா ஆகாது புணர்ச்சிபகல் நித்திரையுமாகா, அறை கீரேன் பூசினிகா யுளுந்துமொச்சை அறைக்கீரை குளிர்ந்தசல மாகா தென்னே. 412

ஆகாது தள்ளிவிடு அருந்தக்கேளு அவரைக்காய் சிறுகீரை முருங் கப்பிஞ்சி, பாகான சிறுபயரு துவரைநெய்யாம் படர்பீர்க்கு தன் னுடனே வழுதலேயின் பிஞ்சாம், வாகான மானுடனே யுடும்புமாகும் வயல்பயறு சுறுமீனுக் தேளியாகுஞ், சாகாதே குளத்தகரை காண்ட கருவாடு சக்கரையு முசலாகு மிளகுமாமே. 413

மிளகாகுஞ் சீரகமாங் கருவாப்பட்டை வெந்தியமாம் சாதிக்கா யேலமாகும், பிளவாகும் வெற்றிலேயாம் கிரும்புமாகும் பின்னேயொ ன்று மாகாது சொல்லக்கேளு, அழகாக யிவ்வளவுங் கூட்டிக்கொ ண்டு அப்பனே புலத்தியனே மச்சகேந்திரா, பலவாகுந் தயிலங்கள் முழுகும்போது பரிமாத்தா வென்னீரே முழுகுவாயே. 414

மூழ்கிவர மண்டலத்தில் தீரும்நோய்கேள் முசியாது சொல்லு தற்கு யின்னங்கேளு, தாழ்குவாய் சிலவிஷநீர் சொரிசிரங்கு கருமரு ந்து அஸ்திபத்தி தணலாஞ்சூடு, வீழ்குவாய் கைகால்கள் குளேந்துகுத் தல் விருவிருப்பு குளிர்ச்சிமுரை சுரங்களோடு, வாழ்குவாய் குத்திரு மல் கக்கல்கோழை வாழ்பெறவே காமாலே யெல்லாம்போமே. 415

போகுமே நேத்திரத்தில் புகைச்சல் செவிகுத்து புண்ணுகி நீர்ப் பொழிந்து மயிருதிருங் கண்ணும், ஆகுமே தலேசொரிவு மூக்குநீர்பா ய்தல் அலேந்துபல்லு நாவிருகுஞ் சிங்கரூக, மேகுமே மண்டைசூலே விஷநீர்வேர்வை மெய்குடைச்சல் விழிசிவப்பு மேலாம்வாய்வு, தாகு மே மலேகடந்து கடலும்புக்கி தயவான சிவகிருபை தயிலமூழ்கே.

## தளசெந்தூரம்.

மூழ்குவாய் செந்தூர மறச்செந்தூரம் முன்னுறைத்தோ மினி கேளு தளசெந்தூரந், தாழ்வதுதான் வாராமல் சரக்கையெல்லாந் தட் டிநன்றுய் சுத்திசெய்து யெடுத்துக்கொண்டு, ஆழ்குவா யத்துடனே காந்தம்ரண்டும் அனருக்கி யின்சாக்கா லீயம்வாங்கி, வாழ்குவாய் குப்பியொன்று பூதிப்பார்த்து வளமாக மண்ணேந்து மொருநிரையு மாமே. 417

ஆமடா செந்தூ ரமிந்தநூலில் அறியவகை சொல்லுகிறேம் ரச செந்தூரம், போமடா நோயெல்லாந் தளசெந்தூரம் புகழுகிறேம் புல த்தியனே மருந்துகேளு, நாமடா காந்தத்தி னியத்தோடே நலமான அயத்தினுட யீயந்தானும், வீமடா வகைக்குயெடை பத்தாய்சேர்த்து வாலைரசம் நாலுபத்து யெடைதான் தூக்கே. 417

தூக்கியே சுத்திசெய்த கெந்தியப்பா துளாந்திரங் கட்டிநன்ரு யு ருக்கிக்கொண்டு, தாக்கியே யீன்றுபத்து யெடைதான்தூக்கி தடிப் பான வட்டோடு அடுப்பில்வைத்துத், தேக்கியே தீயெரிநீ ஓடுசுட்டா ல் திறமான யீயமதைப் போட்டுருக்கி, ஆக்கியே ரண்டுமொன்ருய்த் தண்ணீரானல் அப்பனே அதில்ரசத்தை விட்டுக்கிண்டே. 418

கிண்டையிலே வெங்கார மஞ்சுதூக்கிக் கெடியாகப் பொடித்தி திலே போட்டுக்கிண்டு, அண்டையிலே கெந்தியைத்தான் பொடித்து வைத்து அப்பனே தூவுதூவு அடிபற்ருமல், கிண்டையிலே தீப்பிடியா திருக்கவேணும் குப்பென்று தீப்பிடித்தால் குடிகெடுங்காண், பண் டையிலே சொன்னகதை போல்பாராமல் பதனமாய்த் தீயெரிப்பாய் பார்த்துப்பார்த்தே. 419

பார்த்தெரிநீ யீயமது ரசத்தைவிட்டால் பக்குவமாய் வெண்காரம் போட்டுக்கிண்டு, சேர்த்திடுநீ கெந்தியிட்டால் காத்துக்கிட்டரு திரம் பாட பொடியாயிறுக்கிக் கல்வத்தாட்ட, ஆத்துமணல் தூள்பொடியு மானபின்பு அப்பனே கழுத்தறுத்த குப்பிக்கேற்றி, சார்த்துநீ மண் ணேழுஞ் செய்தபின்பு சட்டிதனில் காலங்குல மணலையிட்டே. 420

இட்டுமணல் கழுத்துமட்டு மானபின்பு எடுத்துவா லடுப்பிலேற் றித் தீபம்போல, கட்டுநன்ரு யட்டதிசை பந்தம்பண்ணிக் கணபதிக் கும் வயிரவற்கும் வாலைத்தாய்க்குங், கொட்டுநன்ருய் வாமபுஷ்பம் வ டமாலைதேனுங் கோவின்பால் பழந்தேங்காய் சர்க்கரைபாக்கிலையுஞ், சட்டுவன்ற ரசமிட்டுமிகச்சேவிநீ தப்பாமே யென்குருவே அகத்தீசா வென்றே. 421

என்றுருகி மனங்குவிந்து பூசைசெய்து என்மகனே தீபம்போ லிருசாமந்தான், கண்டுநீ தீயெரிப்பாய் கமலம்போல்சாமங் கலங்கா மல் உள்ளெரிப்பா யைந்துசாமங், குண்டுசட்டி குப்பிக்குள் தீயேயேரி

குழம்புபோல் மருந்துருகி கெந்திவாசங், கண்டவுட னரிதார மூன் றுந்
தாக்கி கடுகவே குப்பிக்குள் பொடித்துப்போடே. 422

போட்டுநீ சிலாகைகொண்டு துழாவியப்பா புகழாக குப்பிதனி
லடைத்துக்கொண்டு, ஆட்டுகுப்பி யடுப்பேற்றி வைத்தபோதே அடிக்
கடிநீ ஓடுகொண்டு மூடிப்பாரு, தாட்டுகுப்பி வாய்பிடித்துக் கொண்
டால்பாரு தகுமான ஓடதுவும் வாங்கொட்டாதே, வாட்டுகுப்பியோ
டத்ததாவும் வாராதப்பா வாயில்குப்பி தீவந்தால் வாங்கிப்போடே.

வாங்கடா மனோசிலைதா னஞ்சுதூக்கி வளர்திரு குப்பிக்குள்
பொடித்துப்போடு, தாங்கிமெள்ளச் சிலாகைகொண்டு அடிக்கடிதான்
கிண்டு தளத்திலே குப்பிக்கீழ் பத்துஞ்சுத்தும், ஏங்கிமெள்ள குழம்
பிறுகி மெழுகுதீய்ந்து எடுத்தபுகை தீயாகும் நேரம்பார்த்து, ஓங்கி
வெள்ளை யீரைந்து பொடித்துமாட்டு உற்றபுகை கண்தனிலே புகையும்
போமே. 424

போமடா வாயிரும் புண்ணுய்ப்போகும் பொல்லரத புகையப்பா
பாஷாணந்தான், தாமடா முகத்தைபக்க மொதிங்கினின்று தயவாகக்
குப்பிகிண்டு புகைபடாமல், ஆமடா சரக்குவகை யெட்டுமாச்சு ஆதி
குரு முப்பூவழலை கழஞ்சுபோடு, நாமடா ஒளிக்கவில்லை கிண்டிப்
பாரு கண்டுநத்தை போலுருகும் கட்டிபாரே. 425

பாருநீ செண்டுகட்டி பலவாய்நிற்கும் பக்கத்தில் குப்பிக்குள்
பத்திசேர்ந்து, ஆருநீ யறிவாய்க்கே ளந்தமுறைவைக்க அப்பனே
குருகாட்ட அறியலேனும், கூருநீ குப்பிவாயில் புகைதான்வெள்ளை
குமுகுமென்று வருமோடு வெறுத்துப்போகுஞ், சீறுநீ யிதுவறிந்து
தீயேமாற்று சிறப்பான செந்தூர மண்ணைப்பாமே. 426

ஒப்பேது மற்றதொரு செந்தூரங்கேள் ஓகோகோ முடிந்தகுரு
தளசெந்தூரம், வைப்பரிவா னுலகத்தில் கோடிகொண்டு மகத்தான
குருவாகும் அவனேக்காரு, தப்பல்ல செந்தூரம் நோய்கட்கெல்லாந்
தருவான சஞ்சீவி மறலிவந்து, குப்பென்று போனவுயிர் வுடலில்
வந்து கூடழியா தனுபான மறிந்துசெய்யே. 427

செந்தூர முருகாமல் தீயைமாற்று சிவப்பேறுஞ் சிலாகைமுனை யிட்டுப்பார்த்தால், வந்தேறுஞ் செந்தூரம் வாயடைக்கும் வாயடை யா தேசிவக்குந் தஞ்செந்தூரம், வெந்தாறு மடுப்பில்தான் கடிகை நாலு வீற்றிருந்தா லிறக்கிகுப்பி தோய்க்கக்கேளு, பந்தாடை சுத்தி குப்பி வாய்க்குள்ளேற்றிப் பதனமாய் நீர்மணலும் விழுகொண் ணுதே. 428

ஒண்ணுன குப்பிதனை யுடைத்துப்பாரு உண்டையுண்டை யாயி ருக்கு முருக்கம்பூப்போல், கண்ணுன வாதிமகன் செய்யவேணுங் கதி கெட்ட வயித்தியனே செய்யப்போருன், உண்ணுன யிருமருந்து உண்டுபாரு உனக்குயினி மிர்த்தீவு மொன்றுமில்லை, பெண்ணுன பிள் ளைகட்குங் கொடுத்துப்பாரு பிணந்திரும்பிப் பேசுமடா பிலத்துப் போமே. 429

## சாதிலிங்கச் செந்தூரம்.

பிலத்துப்போஞ் சாதிலிங்க செந்தூரங்கேள் பேசாதே சாம்பி ராணி கூடனுந்தான், பலத்துக்கு வகையொன்ருய் வாங்கிமைந்தா பக்குவமாய் கல்வத்தி லரைக்கும்போது, பிலத்துருகி மெழுகுபோல் பிடித்துக் கொள்ளும் பின்வழித்துப் பத்துண்டை யாகச்செய்து, குல த்திலே குப்பிவைப்பு சாதிலிங்கங் குறையாமல் கட்டியொன்று பலந் தானென்றே, 430

ஒன்ருன கட்டியிலே மெழுகொன்றைப்பூசி உத்தமனே சீலை சுத்தி மிகக்கொளுத்தி, நன்ருக வெந்துவந்து ஆறினுக்கால் நழுகா மல் மறுபடியு மெழுகுபூசி, குன்ருமல் வெந்துவந்து ஆறினுக்கால் குணமான மிளகுதனை திரும்பிப்பூசி, பன்னுகப் பத்துவிசை மெழுகு பூசி பார்மகனே சீலைசுத்தி யெரித்திடாயே. 431

எரிந்துலிங்கங் கட்டிபோ லென்னசொல்வேன் இயல்பான திரி கடுகு வகைக்குக் காலாய், பொரிந்தசட்டி தனில்வறுத்துப் பொடிக் கும்போது புகழாகச் சாதிலிங்கங் கட்டினத்தையெடுத்து, பரிந்துட னே கூடவைத்து மைபோலாட்டி பதனமாய்ச் செம்பதனில் வைத் துக்கொண்டு, கருந்துவல்லங் கருப்புட்டி தன்னிலேதான் கனமாகப் பணவிடைதான் வைத்துக்கொள்ளே. 432

கொள்ளடா கிரந்திகுட்டஞ் சூலையேது குஷ்டமொடு வாய்வு நின்ற வலிகளேது, தள்ளுமடா பரங்கியொடு கரப்பன்புண்கள் தளு தளுப்பு வண்டுகடி தடிப்புவெள்ளை, கொள்ளுமடா தாகத்தில் தண் ணீர்போலாம் கொடியுதிந்த நீர்சோகை பாண்டுவெப்பு, கள்ளமென்ற வருதோஷஞ் சன்னிமூர்ச்சை கதித்தமந்த வாய்வடைப்பு யிஞ்சிச் சாறே. 433

சாற்றிவிடப் பணவிடைதா னெஞ்சடைப்பு சாந்தியாம் பித்த வாய்வு வயிற்றெரிவுகாந்தல், ஆற்றிவிடும் வியாதிகண்டு கியாழம்வை த்து அதில்பணந்தான் போட்டிருந்த அனேகநோய்கள், தீர்த்துவிடும் லிங்கமடா சுருக்குமெத்த தீராத வியாதியெல்லாந் தீர்ந்துபோகும், கூத்துவனும் நோய்களெல்லாம் காலன்காலன் குணமதிலே கோடிய வர்க் குண்டுகாணே. 434

## வலிசன்னிகள் விபரம்.

காணப்பா லோகத்தில் மானிடர்க்கெல்லாங் கடினமடா வலி வஞ்சு சன்னியாகும், வீணப்பா குமரகண்ட னமரகண்டன் விழுந் தழுக்கும் பிரமரண்டன் காக்கைவலி வொன்று, ஆணப்பா முசல்கண் டன் வலியஞ்சு நோய்க்கும் அடங்காது பிர்மகண்டன் சாத்தியன்தா ன், தோணப்பா கண்டறிய வேணுமப்பா தொடுகுறிபோல் சொல் லுகிறேன் குணத்தைக்கேளே. 435

## குமரகண்டன் வலிநிதானம்.

### வேறு.

குணமாங்குமாகண்டவலி குறுகும்நாக்கும்மிகக்கோணும்
பணமாங்கழுத்துதோள்விம்மி பார்க்கப்பதத்திலிறுத்திவைக்குஞ்
சணமாமூலம்நோய்செவிகண் ணூராய்ந்தேபுறத்தில்வடித்துநிற்கு
மணமாம்வாதபித்தஐயமென வருகுஞ்சன்னிகுணமிதுவே. 436

## நமரகண்ட வலிநிதானம்.

இதுவேநமரகண்டன்வலி யெடுத்துக்கிடத்துமூர்ச்சைபோம்
மதுவேகைகால்மெய்யெங்கு மடித்துவொடித்தாப்போலுளையும்
பொதுவேகண்டஞ்சிரசுமுகம் புதுவெள்ளம்போல்நீரொழுகும்
பதுவேநெஞ்சுந்தோள்முதுகும் பற்றிவலிக்குமுதிரமதே. 437

உதிரந்தன்னில்நாள்சென்றால் உற்றுவலித்துச்சுரோணிதத்தை
பிதாப்பிதுங்கவொட்டாமல் பின்னுங்கொப்பவாய்வாகுங்
குதிரக்குத்திமாதர்சங்கை குடிபோம்சொன்னேஞ்சிலநாளில்
அதிரும்வாதபித்தமையம் அடர்ந்தசன்னியிதுதானே. 438

## பிர்மகண்டவலி நிதானம்.

இதுவேபிர்மகண்டன்வலி யெடுத்தகைகால்காலுதருங்
கதுவாய்கண்ணுந்தான்பார்க்கக் காலைநீட்டிக்கிடத்திவைக்கும்
பொதுவாய்ப்பார்த்தவயித்தியரும் பிழையாதென்பார்கைபார்த்து
அதுவேவாதபித்தமையம் அடர்ந்தசன்னியறிந்திடுமே. 439

## காகவலி நிதானம்.

அறியும்காகவலிதானும் அலருங்கண்ணுமேல்நோக்கி
பிறியுமலமுஞ்சலநீரும் பெருக்காந்துடையுமடக்காமல்
செறியுந்தொண்டைநாவுலர்ந்து சிலேத்மமிஞ்சிசன்னிவேர்வை
குறியாம்வாதபித்தமையங் கொண்டசன்னியிதுதானே. 440

## முசலகண்டன்வலி நிதானம்.

தானேமுசலகண்டன்வலி தண்ணீர்தீயும்க்ஷணப்போதில்
ஊனேயுடலில்வாய்வெழும்பி வுற்றுமுகத்தைத்தான்வலித்துத்
தேனேயொழுகும்வாய்தன்னில் திரைபோல்நுரையுந்தள்ளுவிக்குங்
கானேகண்ணுங்கைகாலுங் கனத்துவுளைக்குஞ்சன்னியிதே. 441

## வலிசன்னிகளில் சாத்திய அசாத்திய நிதானம்.

இதுதான்வலிகளஞ்சுக்கு மெடுத்தகுணத்தைத்தானுரைத்தேன்
மதுதான்குமானமர்கண்டன் மறியுங்காகமுசகன்வலி
சதுராநாளுஞ்சாந்தமதாந் தயிலமொத்தமருந்துசெய்தால்
பிதுராம்பிரமகண்டவலி பிணந்தான்றிரும்பிப்பேசாதே. 342

## விஷமுட்டித் தயிலம்.

பேசாதே விஷமுட்டித் தயிலஞ்சொல்வேன் பிள்ளாய்கேள் வெள்ளாட்டுப் புழுக்கை பலம்பத்து, தூசாதே கார்த்திகையின் கிழங்குபலம்பத்து துயர்தீருங் காட்டுள்ளி கிழங்குபலம்பத்து, வாசாதே சவுரியுட கிழங்குபலம்பத்து வரிசையாம் பிரம்பினிட கிழங்கு பலம் பத்து, வீசாதே நூருண்டின் வேம்பின்பட்டை விருதப்பா ரண்டு பத்து பலம்தான் தூக்கே. 443

தூக்கிடுவாய் பறங்கியுட பட்டைபலம்பத்து துடியில்லா தேழு மொக்கத் தறித்திடித்துக்கொண்டு, தாக்கிடுவாய் தாளிதனில் கெந் தகத்தூளப்பா தனித்தபல மஞ்சிடித்து விரவிக்கொண்டு, ஆக்கிடு வாய் பூப்புடமாய்த் தயிலங்வாங்கி அப்பனே தயிலமிடை அஞ்செண் ணெய்கூட்டி, தேக்கிடுவாய் வெள்ளுள்ளி மேல்தோல்போக்கித் திமிரி யரைத் திரியூட்டித் தயிலம்வாங்கே. 444

வாங்கியே பூப்புடமாங் தயிலமிடைசேர்த்து வரிசைபெற யேழை யுந்தான் ரேசித்தப்பா, தாங்காதே பெருங்காயம் பலமொன்றப்பா துயர்தீருங் திரிகடுகு பலமுமூன்று, பாங்காகப் பொடித்திந்த தயிலத் தில்தூவி பழுதில்லாச் சீனியது பலமைந்துபோட்டு, ஏங்காதே திரி லோகத் தின்பூபதியு மென்னசொல்வேன் வகைக்குஐந்து கழஞ்சு கூட்டே. 445

கூட்டிநன்று யடுப்பேற்றிக் குருங்கொதியாயிட்டு குரும்புபோல் பதம்வரும்போ திறக்கிமைந்தா, சாட்டிகமாய் கணபதிக்குஞ் சண்முக ற்குந் தயவாகப் பூசைசெய்வாய் தெட்சணைகளீய்ந்து, மாட்டிடுவாய்க் காசெடைதா னுவிநெய்யில் மைந்தனே பிரட்டியுண்டால் சொல்லக் கேளு, கோட்டிசெய்யும் வியாதிக்குக் கொடுத்துப்பாரு குறும்பரோ தீருகின்ற வியாதிகேளே. 446

கேளப்பா வாதமேக தடிப்புநாலு கெடியான பித்தமேக தடிப்பு ஆறு, தோளப்பா சிலேற்பனத்தில் மேகம்பத்துந் துத்திப்பூ விரித லொடு வெளுப்புமாறும், நாளப்பா பித்தத்தில் வாதநீர்கூடில் நலமான காப்பனீர் சூலையுடன்புக்கில், நீளப்பா நாள்சென்ற விஷநீராந்தடிப்பு நிர்மூல மாக்கிவிடு முடம்பெல்லாந் தடிப்பே. 447

தடித்தவிடந் திமிர்ந்துவிடு முண ச்சியில்லை தளதளத்துப் புண் ணுகுந் தேகமெல்லாம், அடிக்கடிதான் நீரேத்தும் சத்திவாதம் அழ கான சன்னிபதின் மூன்றும்போகுந், தடிப்புபெரு வியாதிபத்துந் தவறுண்டேபோந் தன்னுக்குள் வியாதியென்றதெல்லாம் போகுந், தேடியிந்த நூல்வைத்துப் பூசைபண்ணித் திறமாகப் பத்துநாள் தயி லங்கொள்ளே. 448

பத்துநாள் காசெடைதான் கொண்டுபாரு பளபளத்த தேகமது சொர்னமாகு, மத்துவிடும் வியாதியெல்லாம் விஷமுட்டித்தயில மரு மைமெத்த வறுநூற்றில் யானுஞ்சொன்னேன், செத்துவிட்ட பிணந் திரும்பி யெழுந்துபேசுஞ் செயமான லோகமொடு பூபதியின் றிறந் தான், ஆத்துமடா ரெணவீக்க வாய்வையெல்லாம் அப்பனே வழலை யுடன் கொண்டுபாரே. 449

கொண்டுவந்தா லிம்மருந்து பத்தியந்தான் சொல்வோம் குண மாகும் பரியாடு கோழிபன்றி மறைகள், கண்டுபச்சை மீனிறைச்சி நாரியர்களாசை நாட்சென்ற கீரைமுளை நற்கனிகள்தேங்காய், உண்டு ளுந்து மொச்சைகொள்ளு உள்ளிகடுகெண்ணெ யுயர்புளிப்பாம் எள் ளுபால்பூ சினியுந்தள்ளி, கொண்டுவிடு சிறுபயரு துவரை பொன்னுங் காணி குறும்பரே சிறுகீரைநெய் யவரையாமே. 450

வரையாதே முருங்கைமணித் தக்காளிவற்றல் மறுசட்டி கொட் டினமோர் சிறுபுளிப்பேயாகுங், கரையாதே நெல்லிக்காய் சீரகமிளகு காயங்கரு வேப்பிலையுங் கடலுப்புசுத்தி, துரையாதே வெற்றிலையும் பிளவுசுன்னமாகுந் தூள்முதலாய்ப் புகையிலைசற்றுந் தொடாதே கையால், நரையாதே ரோமமெல்லாங் கறுத்துப்போகும் நாகரத்தின மணிபோலே நன்றும்பாரே. 451

## வல்லாரைநெய் கிருதம்.

பாரப்பா தேகங்க ளிருபதுக்கும் பாடுகிறேன் பற்பத்தின் நெய் யைக்கொள்ள, சேரப்பா நெய்வகைகள் மெத்தவுண்டு சிறப்பானநெய் யைக்கேள் வல்லாரைநெய்தான், ஆரப்பா யினமறிந்து செய்யப்போ றார் ஆயிரத்து அன்னூற்றில் அழகாய்ச்சொன்னேன், சீரப்பா நெய் கிருதங் கொண்டுபாரு சோராது நோயெல்லாஞ் செயிக்கும் நெய்யே.

இந்தநெய்யை வாணிசிவ காமிசொன்ன ளியம்புகிறேன் புலத் தியனே யிதுபோலில்லை, வந்தநோய் வல்பிணிகள் தீருமிந்நெய்யில்வல் லாரை கொடுப்பை வாழைப்பூமூலம், கந்தமா மறிகருணை சிறுகிழங்கு சீன நாட்டில்புளி கடலைநெய்தல் கொட்டிக்கோரை, சத்தமாஞ் செங் கழுநீர் தாமரையின்கிழங்கு சார்பான பிரண்டையுட னமுக்கருங் கிழங்கே. 453

கிழங்கையெல்லாம் வில்லைசெய்து மோரில்வெந்து கிளரியே யுலர் த்திநெய்யில் வறுத்திடித்துக்கொண்டு, வழங்கவஸ்திர காயஞ்செய்து வைத்தபின்பு வாழ்காரப்பன் பொடுதலையும் நெரிஞ்சிகீழ்க் காய்நெல்லி, தழங்குகண்டங் கத்திரியுந் தூதுவேளைநீலி தைவேளை துளசிவில்வங் காரையொடுசிந்தி, அழங்குமுடக் கொத்தானும் ஆவரையிலந்தை அத் திபெருந் தும்பைநெல்லி யறுகம்புல்லே. 454

புல்லான அறுகம்வேர் மாதளையின்பழமும் புகழான யெலுமிச்சு வில்வத்தின்பழமும், நல்லாகுந் தைசூரி யிலவுகறிசுவையும் நாட்டில் பெரும் பூசினிக்காய் குமரிகுளிமிட்டான், சொல்லாதே கரிவேம்பு அவரைதுத்தி கொழுஞ்சி சுகமான சதையொட்டி சுழலாவரையிலை யும், எல்லாந்தான் சாருநெய்க்கு நாலத்தொன்று இருவகைக்குப் பசு வின்பால் யிளநீர் சரியாமே. 455

சரியாகு மூதண்டக் கியாழம்விட்டுச் சாறுகளும் பழச்சாறும் கியாழபசுமோரும், விரிவாக நாட்சென்று புளித்தகாடி வீரியமாய் விட்டுநன்றாய் படிவெதுப்ப வைப்பாய், பரிவாகுங் கடைசாக்கும் பத் திரையுமேலம் பாருமன்ன பேதிஅதி மதூமொடு சாதிக்காயும், அனி தாகுந் திரிபலைதிரிகடுகுகல்நார் அருமையிரு சீரகமுங் கிரும்புமாசக் காயே. 456

காயமொடு யிந்துப்பு கடுகுரோகணியுங் கருவாயுங் கோட்டஞ் சத குப்பைசந்தனமோமம், வாய்விளங் குரேசானி அதிவிடயந்தா னும் வகைக்குஒரு கழஞ்சாக வடியேழுகாயரைத்து, தாயானபசுவின் பா லரைத்துகரைநெய்யில் தானெரித்து வற்றிபத மெழுகுதிரிவட த்து, பேயாகே ளாறுமுன்னே கிழங்குபொடிகொட்டி பிலமான சீனி யெட்டு பலமிட்டுக்கிண்டே. 457

கிண்டிநன்றாய்ப் பேரிந்து முந்திரிகை பழமுங் கிழித்துமுளை வி ரைதள்ளி வகைக்குபலமொன்று, ஒண்டிநின்று கணபதிமுன்வைத்து

ப்பூசைசெய்து ஒருநாளைக் கிருபோது மண்டலந்தா னுண்ண, பண்டு செய்த பலனிதுதான் வல்லாரைக்கிருதம் பலிக்குமடா முன்கிழங்கு மதிலேசேரு, அண்டுமரைப் பலம்வகைக்கு நிறுத்தளவாய்க் கூட்டி ஆத்தாள்தான் சொல்லியது யானுரைத்தே னேய்கேள். 458

நோய்போற வழிகேளு அபானவரைசாடி கொடிக்குமுன்னே அஸ்திமுதல் தசைநரம்பு குளிரும், வாய்வுவரும் வெந்துகளை பிளிபித்தசோகை வயிற்றுவலி வாய்நீரிரக்கம் அஸ்தியுடசுரமும், பாய்படுக்கை அசதிநித்திரை பித்தவேர்வைதாகம் பஞ்சுபோல வெளுத்தவுடல் ரத்தமூறும், தாயிடுஞ்சோர் சிவனப்பா தாரமிடவுண்டு தடைபடா தரைத்துவிடு தனிமூலம் போமே. 459

மூலாத்த முளைமூலம் பவுத்திரம்புண்ணுறு முள்மூலம் சீழ்மூலம் பரிவளையம் போகுங், காலனடா கிருணியாறுங் கைகால்கள் சுரப்புங் கண் தூக்கம் ஊஷ்ணங்கள் கபாலவாய்விடியும், வாலவசி காளெனவே வசிகாமுண்டாம் வாழாது நெய்யையுண்டு ராத்திரிக்குக்கியாழம், போலவொரு கழஞ்சுக்கு பொடித்துசலம்நாழி போட்டுவற்றி நித்திரை போங் காலமதில் குடியே. 460

குடித்தவுட னெய்செரித்து குளிர்ந்துவிடுந்தேகங் குணங்கோடியுண்டுமினி குடிலமில்லை நோய்க்கு, அடிக்கடிதான் தினமருந்து வேறென்று வேண்டா மானேகண் திரளாது அஸ்திரெத்த மூறும், வெடித்தசுரம் வெந்துவிடுஞ் சுரோணிதமூறும் வீண்பலவா மருந்து கொண்டால் விந்திழியும்பாரு, கடித்தபேய் நாக்குநெய்யை கொண்டு நீகாலன் நலங்காமல் நெய்யுண்ண வணுகான்காலன். 461

அணுகானே காலனப்பா நெய்யைக்கண்டால் ஆனகன்னி திரண்டுமாத சங்கைபிற விடையாம், வணுகாகுந் தப்பில்லை பற்பமிதில் சேர்த்தால் வரும்பிணிநோய் கண்டவுடன் வாய்வுபோற்றும், தொனியாகப் பாடவருந் துயாமெல்லாந்தீருந் தோழியரு மாப்பிளைமார் சுகம் பெறவு மாகும், பிணிபோகுஞ் சூட்சத்தில் பலபலவாம் போக்குப் பேய்மக்க ளுக்காகப் பிறந்ததிந்த நூலே. 462

## பெரும்பாட்டுக்கு மருந்து.

பிரித்தபெரும் பாட்டுக்கு மருந்தை யினிகேளு பேசாமல் நற்சரளை தினமொன்ருகக், கரித்தநெஞ்சா வரைத்ததின்மேல் பொதிந்து மைந்தா கனலுக்குள் வேகவைத்துக் கருக்கிடாமல், பொரித்தபின்பு யெடுத்துமேல் பரணிமாவும் பொல்லாத சிலாம்பொலிம்பு தள்ளிப்போட்டு, விரித்தஅம்மி தனிலரைத்துப் பனவெல்லத்தை வித்தகனே பாக்களவு மேலேவைவையே. 463

வைத்தரைத்து மூன்றுதினங் கொண்டாயானல் வையகத்தில் பெரும்பாடு வாங்கிப்போகுங், கைத்தகரி கழுவினதுங் காடிமஞ்சள் கலங்கலாய்ச் சிவந்து மீனின் வாசம்போல, தைத்தகுட லழுகிவாசம் வெள்ளை மோர்போல் நாற்றமடா துடைவலிகால் வலியுஞ் சிமிழ்போல், தைத்த முளகாய் சுருங்கினப்போல் வயிற்றிற்புண்ணுங் தாக்கடா மூன்றுதினம் பெரும் பாடுந்தீரும். 464

## பெரும்பாட்டுக்குப் பூப்பட்டைதயிலம்.

தீருமே தயிலமொன்று பூப்புடத்தில்கேளு சிவன்வேம்பு திருகுகள்ளின் தேத்தான்பட்டை, பாருமே வேம்பினு ருண்டின் பட்டை பருவிலுப்பை அழிஞ்சிநொச்சி புன்குவாகை, சாருமே புரசு புன்னையெருக்குயெட்டி சாவியுகாய் ஆலரசு அத்தியித்தி, சேருமே கொடுவேலி மூக்கனையின்வேருஞ் சென்னகரை பூவரசு கடுக்காய் மாந்தோல். 465

தோலாகும் புனமுருங்கை சங்கங்குப்பி தோணிதொடை வேளைதூய் மருளூமத்து, காலாகுங் கெந்தியரி தாஞ்சீனங் கருத்தாட்டின் புழுக்கைநண்டு நத்தையூமச்சி, வேலாகும் வெள்ளாட்டு நிணமுந்தானும் விரும்பியதோர் முதலைநிணஞ் சமானதாக, கோலாலே நிறுத்துபலம் பத்தாய்வெட்டி குறுகயிடி கார்த்திகையின் கிழங்குமஞ்சே.

அஞ்சாகுங் கடைசரக்கு வகைக்குபல மொன்ருய் அலர்த்திடித்துப் பழம்பாண்டத் தமுக்கிச்செம்மி, கொஞ்சமடா சவுரிகொத்து மருந்தின்மேலே கூடாமல் விரித்தமுக்கிப் பரந்தசட்டி, தஞ்சமெனக் கவிழ்த்துமூடி மேதிச்சாணி தாக்கியடை பின்புநன்ருய் பொருந்திக்கொண்டு, துஞ்சாமல் குழிவெட்டி சட்டிதாரில் துளைநடுவாய்ப் பயருமட்டா கலயம்வையே. 467

கலயம்வாய் பொருத்தசட்டி கவித்துப்பாளே கம்பியடா சிலாகை யொன்று கலயத்துள்ளே, அலேயாமல் சட்டித்தூர் குழிசமைய நன்று யப்பனே வெருவடுக்கித் தீயைமூட்டு, குலேயாதே வெந்தாறி பிரித்துப் பாரு குருந்தூசி மண்மணலுந் தயிலத்துள்ளே, நிலேயாதே தயிலமடா யிறங்கிநிற்குந் நிர்தூளாம் வியாதியெல்லாம் நினைவாய்ப்பாரே. 468

பார்ப்பனவில் தயிலமப்பா யிறங்கிநிற்கும் பதனமா யதையெடுத் துப் பத்திரம்பண்ணு, கூர்ப்பறிந்து வியாதிகட்கு கொடுக்கும்நோங் குழப்பியே கிண்டியொரு பணம்போலாட்டு, சேர்ப்பதென்ன பற்ப மடா ரசபற்பந்தான் சிறுகவரை பணவிடைதான் சேர்த்துக்கொண் டார், ஆற்பனத்துக் குறுதிசொன்னேன் தீரும்நோய்கேள் அரகா குட்டமுதல் சூலேபோமே. 469

போகுமே வண்டுகடி துண்டுபுள்ளி பொல்லாத கருங்குட்டஞ் செங்குட்டந்தான், ஏகுமே யெலிகடியுஞ் சில்விஷந்தா னென்னசொல் வேன் விஷநீரா லெடுத்தரோகஞ், சாகுமே பறங்கிப்புண் கிரந்திப்புண் ணுஞ் சாசாத்துச் சொரிகின்ற கரப்பனுறும், வேகுமே மண்டையில்நீர் விரிவுபத்து மேலான வியாதியெல்லாந் தீருந்தானே. 470

## முசுவாக்கினி லேகியக் குளம்பு.

தானென்ற லேகியமாங் குழம்பைக்கேளு தனியாவி னீரதுதான் தூணிவாங்கி, காசென்ற கருத்தாட்டி னீரோதூணி கலந்துசம னுகவே கரைத்துக்கொண்டு, பானென்ற பானேயொன்றில் வேடுகட்டி பால கனே அஞ்சுதரம் வடிதான்கொண்டு, தேனென்ற நீரையெல்லாம் பாண்டத்திட்டு திரண்டமிள கொருபடிதா னிடித்ததூளே. 471

ஒருபடிதான் கடுக்காய்த்தூள் கொட்டைதள்ளி உத்தமனே திப் பிலியின் துண்டுசுக்கு, நிருபடிதான் வகைக்குபல மூன்றுஅப்பா நீர்த் தூளா யிடித்துக்கோ சலத்தில்போட்டு, மறுபடிதான் சட்டிகொண்டு வாயைமூடி மண்செய்து அடுப்பேற்றித் தீயைமூட்டி, சிறுபடிதான் சிறுதீயா யெரிசாமமையா சிறப்புடனே கமலம்போல் சாமமாமே.

ஆமப்பா காடாக்கினியாம் ரண்டுசாம அனலெரிந்து வற்றிநன் ருய்ப் புகைந்துதிஞ்சு, வேமப்பா மருந்தெல்லாம் புட்டுபோல வெந்

துள்ளே பச்சியுமாய் கருகிமேலே, போமப்பா பானைக்குப் பொடுபொ டுத்து புகைந்துமண்டி முகம்பிடிக்கப் போகாநேரம், சாமப்பா பானை யைக்கீ ழிறக்கிவைத்து சட்டி திறந் தாறியபின் மருந்தைக்கொட்டே.

கொட்டிநன்று யுருக்கையிலே நெகிழ்ந்துமைந்தா குழம்புபோல் வரும்பருவ மெடுத்துக்கொண்டு, கட்டியென்ற வாய்வுவெப்பு கண்டை குன்மங் கசுமால கோதாமு மபானவீக்க, மட்டியா மூத்திரத்தில் சூலை பெருவயிறு மைந்தனே மலக்கோவை சலக்கோவைகுத்தி, கெட்டி யாய்த் தீர்க்குமிந்த காமாலைசோகை கிரந்திகுட்டங் காப்பன்வண்டு கடிவிஷமும் போமே. 474

விஷநீரால் தடிப்புவெள்ளை புற்றுவிழுதல் மேகத்தால் மலசலங்க ளடைப்புத்தீரும், அசதிமெத்த ஆயாசம் வாந்திவேர்வை அடிக்கடி தான் ரத்தமது வற்றும்வாய்வு, கிசகரிபோ லூதுகின்ற வாதவீக்கங் கேட்குமடா லேகியத்தி னுறுதிமெத்த, பிசகாத புலத்தியனே மச்ச கேந்திரா பேர்கேளு முசுவாக்கினி லேகியமிதுதானே. 475

## சவர்க்கார லேகியக் குழம்பு:

தானென்ற லேகியமா மொன்றுசொல்வேன் தனியாவின் ஆட்டு நீர் சமன்தான்றாணி, கோனென்ற கொம்மட்டி தலைவிரிச்சான்காயுங் கொண்டுவந்து முற்றினதா யிடித்துச்சாற்றை, பானென்ற பாணையின் முன் னீரிேனுடே படிரண்டு அளந்துவிட்டு பகரக்கேளு, வானென்ற வாரியுப்பு சவர்க்காரமீந்து வளையலுப்பு கல்லுப்பு பாரையுப்பே. 476

உப்பான கெவுரியுப்பு அமுரியுப்பு யெவாச்சார மடியுப்பு சீனக் காரஞ், செப்பான நவாச்சார மன்னபேதி சிறுபடிகி பலமொன்று நிறுத்துப்போட்டு, கைப்பான கடுக்காய்த்துள் மிளகுதூளுங் கலந்து அரை படியளந்து போட்டுக்கிண்டி, சிப்பான சட்டிகொண்டு கவிழ்த் துக்கொண்டு சீலைமண் ணேழுசெய்து அடுப்பிலேற்றே. 477

ஏற்றியெறி முத்தீயுஞ் சாமம்நாலா யெரித்துவற்றி கரிவாசம் புகையுங்கண்டால், மாற்றிவிடுந் தீயாறி யிறக்கிப்பானை மறுசட்டி திற ந்துகல்வம் வழித்துப்போட்டு, ஆற்றிவிடு தேன்போலே வழியும்பாரு அரைத்துவிடு சுண்டைக்கா யளவாவுண்டை, ஆற்றிவிடு நோய்களுட பேரைக்கேளு அடர்வுதிர சூலையுடன் கெண்டைவெப்பே. 478

வெப்பான புகைபோலே திரண்டுவாய்வு விலாப்புறத்தி லண்டிநிற் கும் அபானவாய்வு, அப்பாகேள் தொண்டைகட்டி திரட்சியாக அடி வயிறு மேல்வயிற்றை அண்டிநிற்குங், கொப்பாகு மூன்றுவிறல் கனத் தில்வாய்வு கொளுகிநின்று நெஞ்சுமுட்டி மூச்சாடாது, தப்பாதே பெருவயிறு விடநீர்வீக்கந் தணியாத மகோதரமுஞ் சாடிப்போமே.

சாடிவிடுஞ் சவர்க்காரக்குழம்பைக் கண்டால் சத்தியுட திரைசூலை கோவைமூன்று, மோடிவிடுங் கரப்பான்முதல் குன்மமெட்டு மொடுங் காத வாதவிஷ நீர்கள்போகும், வாடிடுமே சரீரத்தில் நீர்கள்வற்றி வணங்காத பெண்களுடன் வாழப்பண்ணுந், தேடியிந்த குழம்புரண்டு மறுநூற்றில்தான் செப்பினே மருந்துகொள்ளத் தீரும்நோய்கேள்.

தீரும்நோய் மனுஷருக்குச் சொல்லக்கேளு திடமாகக் கைபார் த்து முகத்தைப்பார்த்து, சாருமப்பா மருந்துசெய்தால் நோயுந்தீருஞ் சண்டாளர்க் கெத்தனைதான் மருந்துகொண்டால், ஆருமப்பா அறி யார்கள் ஆற்றில்கரைப்புளியை அவ்விதமே கர்மத்தின் வியாதிபாரு, நேருமப்பா ஒண்ணுரண்டு மருந்துசெய்தால் நீதியுள்ளான் கர்மிக்கி மருந்துமாமே. 480

## மருந்துண்ணு மாதம்.

மருந்துண்ணு மாதத்தைச் சொல்லக்கேளு மைந்தனே சித்திரை யில் பாதிதள்ளி, அருந்துவது அற்பிசியாம் பாதிமட்டும் அப்பனே தக்ஷணத்துக் கறைந்தசேதி, பொருந்துகின்ற வியாதிகட்குச் செந்தூ ரங்கேள் போகுமடா லேகியங்கள் கிருதபற்பம், வருந்திவைத்த தயி லங்கள் மாத்திரைகள் வாரியுண்ண சூரணமுங் கியாழமாமே. 481

ஆமடா தைமாதம் பத்துக்கும்மேல் அறையுறே மாசிமட்டு மருந் துண்ணலாகும், போமடா சாத்தியமாம் வியாதிவந்தால் தருகாது மருந்துகொள்வாய் தடையேயில்லை, நாமடா பெருநூலில் மருந்து வைக்க நலமான மாதத்தை நவின்றேம்பாரே. 482

## வயித்தியம் பலிக்க மந்திரம்.

பாருநீ வயித்தியந்தான் சொன்னதெல்லாம் பலிக்கவென்றால் மந் திரத்தைப் பகரக்கேளு, ஆருந்தான் சொல்லார்கள் நூலிலில்லை அகார

முதல் உகாரமுமே மகாரங்கொண்டு, சேருநீ ஓம்சிவாய வசியென்று
செபித்தாக்கா லக்ஷமுரு திரந்தான்பாரு, கோருநீ யெழுத்தொன்றி
லடங்கிப்போச்சு கூப்பிட்டால் கோடிவித்தை குடலுமாமே. 483

## குடல்வாய்வின் குணம்.

### வே று.

குடலும்விலாவும்அடிவயிறும் கொண்டேகுத்தியேப்பமிடும்
கடல்போல்வயிறுமுதுகுநெஞ்சும் காந்தசிறுநீரிறங்குமப்பா
முடலுங்கைகால்மெய்யெங்கு மூளையும்பசியுந்தானசித்து
படல்போல்வாதகுடல்வாய்வு பகர்ந்தோமிதுதானேயிதுவே. 484

## பக்கவாய்வின் குணம்.

இதுவேபக்கவாதவாய்வு ஏதுசெய்யுங்குணங்கேளாய்
அதுவேகைகாலொருபுறந்தான் அடித்துவொடித்தாப்போலுளையும்
மெதுவாய்சுரமும்வேர்வையுமாய் விட்டேநரம்புவொருபுறத்தில்
பொதுவாய்த்தளர்ந்துநீர்புகுந்து புறங்காலடிவயிறுவீங்கிடுமே. 485

## விக்கலுக்கு மருந்து.

இடுமேஅசாத்தியவியாதிகளி லெடுத்தவிக்கல்நிறுத்துதற்குப்
படுமேசெருப்புசுட்டசாம்பல் பாக்குமிளகுதிப்பிலியும்
குடுமேசுட்டுத்தேனோடே குழப்பிகொடுக்காவதனில்
விடுமேவிக்கல்நாக்கருப்பு விரைந்தசாசரப்பொடுங்கிடுமே. 486

## சன்னிமூர்ச்சைக்குக் கலிக்கமாத்திரை.

ஒடுங்குஞ்சன்னிமூர்ச்சையொடு உள்ளேசுவாசமோடிவிடில்
ஒடுங்கோல்கலிக்கம்நயனத்தி லெல்லாவியாதிவிடங்களுக்கும்
தடுங்கும்விரிச்சான்கொம்மட்டி தகரைவிரையுங்கிழ்வித்தும்
விடுங்கோல்மிளகுதுரிசுதுத்தம் வெள்ளிவிரையும்சீனியிட்டே. 487

இட்டேயரைக்கப்பேய்ப்பீர்க்க னிலையாம்வல்லிச்சாறறைத்து
கட்டேகுளிகைநிழலுலர்த்தி கண்ணிலிடுகும்நேரமதில்
தட்டேகுளிகையொன்றெடுத்து சற்றேயுட்புங்குப்பைமேனி
விட்டேகசக்கிகண்ணிலிட விண்ணில்போனவுயிர்மீளும். 488

## கலிக்கமை நசியம்.

மீளுங்கலிக்கமின்னமொன்று வேகமதிகமிதுபோலில்லை
வாளுங்காயஞ்சூதமிந்து வளருந்துருசுசீனமுடன்
தாளுங்காரஞ்சாரஞ்சுண்டை தனியாமிளகுபிவைபத்தும்
வீளும்விரிச்சான்கொம்மட்டி விரையின்தயிலம்விட்டரையே. 490

அரைத்தபசுவின்வெண்ணெயிலு மடைத்தேபசுவின்கொம்புதனில்
நிரைத்தேநோய்கள்சன்னிமுதல் நெடுநாள்சென்றமுசல்வலிக்கும்
விரைத்தேவிஷங்கள்மூளுதற்கு வேலயிலையில்மைத்தடவி
உரைத்தேகசக்கிராசிதனில் உள்ளேநசியமிட்டிடுமே. 491

இடுமேமையக்கண்ணிலையும் எல்லாவிஷமுந்தீருதற்கு
கொடுமேயுள்ளேயனுபானத்தில் கொளுத்தித்திரியாந்தும்புரத்தை
படுமேமேனியிலதனிலும் பகருங்காதில்பிழிந்துவிடில்
விடுமேசன்னிவலிவிஷங்கள் வெரிநாய்நரிகளெலிவிஷமே. 492

## சன்னிவிஷங்களுக்கு வீரராசன் குழம்பு.

விஷமாமென்னப்பட்டதற்கு வீராசன்குழம்பைக்கேள்
நிசமாரசமுங்கெவுரிவெள்ளை நீலிகாரந்தாரமிந்து
வசமேகாயந்துருசுதுத்தம் வாளஞ்சீனமிளகுசுக்கு
பிசகாக்கொல்லன்கோவையின்வேர் பெருத்தவிஷத்தின்விரைகூட்டே.

கூட்டுமருந்துபதினைந்துங் குணமாம்வகைக்குப்பலங்காலாய்
வீட்டுமூஞ்சூர்தானடித்து வேம்பினெண்ணெய்தனைவார்த்து
மூட்டுநன்றாய்வடிகட்டி மூசியாதடுப்பின்மேல்தூக்கி
காட்டுநீமண்டலந்தான் கடந்தால்கல்வத்தரைத்திடுமே. 494

அரைக்குமருந்துதனைக்கேளு ஆனகொமட்டிக்காச்சாறு
நிரைக்கும்படிதானிரண்டளந்து நெருப்பில்கொதித்துவற்றியபின்
வரைக்குங்குழம்பைகல்வமதில் வாளஞ்சுத்திசெய்துகொண்டு
சொரைக்கப்பலந்தானுமட்டாய் சேர்த்துயெருக்கம்பால்வாரே. 495

வார்த்துமரைப்பாய்மருந்தையெல்லாம் வளமாஞ்சாமமிரண்டரைத்துத்
தேர்த்துந்தேங்காய்தனையுடைத்துத் திருத்திப்பூவையருந்துநன்றாய்
பார்த்துநெய்யைபிழிந்துவிட்டுப் பதமாயரைத்துயிருசாமங்
கூர்த்துங்குமட்டிக்காய்விரைசைக் குணமாயிடித்துஅடைபிடியே. 496

பிடித்தஅடையுமுலகத்தில்நன்ருய் பிலத்தக்கலசந்தனிலடைத்து
அடிக்கீழ்தமரில்கலயம்வைத்து ஆட்டுயெருவைமேலடுக்கி
தடித்தபுடந்தாறுறியபின் தயிலமெடுத்துவிட்டரைப்பாய்
பிடிக்தமெழுகுதேன்போலே வருகும்நேரம்வடித்திடுமே. 497

வளித்துகொம்புசிமிளில்வைத்து வளமாய்மண்டலந்தான்கழிந்தால்
புளித்தகாடிகொழுக்கவைத்து புகைமேல்காட்டியுருக்கிடாமல்
சளித்தகுழம்புஊசிடாமல் சாறும்ரவியில்திறந்துவைத்து
புளித்தகுழம்புவிடங்களுக்கு வகன்றேஞ்சன்னிவலிதனக்கே. 498

வலிப்புவிடங்களென்றதெவ்லாம் வருமேமஞ்சவிடையத்தில்
கலிக்குங்கலிக்கசியமிடு காதில்பிழிந்துதூம்புரமுங்
கெலிக்குமமுரிவெற்றிலேயில் கேளும்பயரிடைகொடுத்துவிடில்
பலிக்கிங்குழம்புவிடங்களுக்குப் பகரிலுயிர்களிறவாதே. 499

## ருத்திராங்க தயிலம்.

இறவாதநோய்க்குத்தயிலமொன்று யியம்பக்கேளும்புலத்தியனே
திறமாமின்னூலறுநூற்றில் தேறச்செய்வாய்கைம்முறையாய்
மறைவாய்ச்சொல்லவில்லேயென்று மாதுசொல்லயான்சொன்னேன்
பிறவார்தயிலமூழ்கினபேர் பிர்மபிண்டம்பிலத்திடுமே. 500

பிலத்ததயிலம்ருத்திராங்கம் பிள்ளாய்வில்வம்அறுகுநொச்சி
சிலத்தில்சித்தாமுட்டியின்வேர் சித்திரமூலம்நத்தைச்சூரி
தலத்தில்வேர்கள்வகையாறுந் தரித்துப்பலம்நூற்றிருபதுமே
சலத்தில்குறுக்கித்தூணிவிட்டு சேருந்தாளிகிரப்பணிந்தே. 501

அணியாய்தூபந்தாழிதனில் அதில்வார்கியாழமீராறும்
பிணிபோம்நல்லயெண்ணெயது பிரட்டிபடிநாளளந்துவிடு
தணியாந்தீபமடுப்புதனில் தாழியேற்றிச்சண்முகற்கு
கனிவாய்ப்பூசிகணபதிக்குங் கட்டைபுகைத்துவேடுகட்டே. 502

கட்டாய்வெட்டிசந்தனத்தூள் களரவாருதூணிசலங்
கொட்டாய்பலந்தானிருபதிட்டு கொதித்துபடிநாலதில்வாரு
தட்டாய்மிளகுதூணிசலந் தாக்காய்பலந்தானிருபதிட்டு
விட்டதண்ணீரெட்டிலொன்ருய் விடுவாய்தாளிதனில்சேரே. 503

சேரேவேங்கைதூாதன்னை சிறப்பாயிடித்தூண்டுபத்து
வாரேதூணிநீர்விட்டு வற்றிக்கியாழம்படிநாலு
பாரேநொச்சிக்கரிப்பானும் படர்ந்தகுன்றிதூதுளையும்
நேரேகொடுப்பைவல்லாரை நிரையாமேனித்துளசியுமே. 504

துளசியிஞ்சிபச்சைமஞ்சள் துகையாம்பத்துவகைக்குச்சார்
இளையயிடித்துப்படிரண்டா யிதமாய்ச்சீலைவடிகட்டி
குளையவாருதயிலத்தில் கோவின்பாலுபடிநாலு
விளையுமிளநீர்படிநாலு விடுவாய்தயிலந்தனில்சேரே. 505

சேருமிலாமிச்சிசிறுவேலி செயமாம்வகைக்குப்பலம்பத்து
வாரும்நீர்தான்றூணிதனில் வற்றிபடிகால்தயிலத்தில்
காருங்கற்கங்கடைசாக்கு கதித்தகோட்டமாத்தையக்கிரு
பாருமதூரதேவதாரம் பச்சேமாஞ்சில்மகாயேலம். 506

ஏலங்கிராம்புசாதிக்கா யிணங்கும்பத்திரிசதகுப்பி
மூலமகலுந்திரிகடுகு முலுவாமல்லிகைச்சோலம்
வாலமிளகுமாசக்காய் வாய்த்தரோகணியிருசீராங்
காலஓமப்பாகடுகுவெப்பால் கதித்தசிவதைசெண்பகமே. 507

பகமேசிறுநாவல்செவ்வறுள்ளி பழையஅபினுந்தாளிசமுஞ்
சுகமேசிங்கியிலவங்கஞ் சொன்னமருந்துவகையொன்று
துகமேகழஞ்சிநாலாகத் துள்ளவுரலிலிடித்துநைய
அகமேயிளநீர்தனிலரைத்து அப்பாலதனில்கரைத்துவிடே. 508

விட்டுஅடியில்படியாமல் மெதுவாய்கிண்டுகைவிடாமல்
வெட்டிவேர்தான்பலம்நாலு வெற்றிலைநீரால்தானரைத்து
கொட்டித்தயிலம்நிலப்பனையுங் கோரைமூலங்கோடுவேலி
தட்டிவகைக்குப்பலமரைதான் தனித்தயிளநீலரைத்துவிடே. 509

விடுமேதயிலங்கொதித்துவற்றி விரைந்தமெழுகுபதம்பார்த்து
கொடுமேதாளிவடிபாத்திரங் குங்குமப்பூகோரோசினை
படுமேபுனுகுகஸ்தூரி பாருங்கழஞ்சிமூன்றப்பா
தடுமேபிச்சிமருஓலை தருஞ்செண்பகப்பூபாத்திடுமே. 510

பரத்திவாசமருந்துபொகு பதமாயிட்டுத்தயிலத்தில்
இரத்தமெழுகுபதந்தன்னி லிதமாவிட்டுக்கம்பிளியில்
உரத்திக்கிட்டிக்கொண்டுநன்று யுருட்டிமுறுக்கிப்பிழிந்துகொண்டு
நிரத்தகணபதிபூசைசெய்து நிவர்த்திசெய்வாய்ரிஷிசாபம். 511

செய்ததயிலமுழுகுதற்குச் சீக்காயுடனேவென்னீராம்
பையமுழுகுமண்டலந்தான் பாருந்தீரும்நோய்கேளு
நய்யுஞ்சிரசில்பீனசமும் நாசிநீர்கள்காசமும்போம்
கையுங்காலுமெய்யெங்குங் கனத்தவாதவலிபோமே. 512

போகும்வாய்வுமேலேப்பம் பொருமல்மூலவுட்டிணமுஞ்
சாகுங்கரப்பன்பிணிதீருஞ் சத்திபித்தஞ்சதிவேர்வை
ஆகுஞ்சிரசில்விஷநீர்கள் அணுகாதிந்தத்தயிலத்தில்
வேகுமேகமிருபதுமே விஷநீர்தோஷமணுகாதே. 513

அணுகாதிந்தக்குத்தலுந்தான் அசத்திவாதவலிதீரும்
அணுகாச்சிரசில்நீர்தோஷ மடக்குஞ்சூலைபதினெட்டும்
அணுகாச்சயங்கள்காசமுத லாகும்பல்லிசிங்கரோகம்
அணுகாக்கன்னங்காதெழுச்சி யப்பாதயிலமுழுகினர்க்கே. 514

## அமிர்தசஞ்சீவி சூரணம்.

### வே று.

மூழ்குவாய் மேகமென்ற தெல்லாம்போக முக்யமையா அமிர்த சஞ் சீவிகேளு, ஆழ்குவா யமிர்தவல்லி பெருந்துண்டாக அதிர்பாணி பச்சைநன்று யறவேசீவி, தாழ்குவாய் தச்சனைக்கொண் டுளியால்சீவி தகடுபோல் கல்லுரலி லிருப்புலக்கைகொண்டு, பாழ்குவாய் பெரும் பொடியொன் றில்லாமற்றூன் பஞ்சுபோ லிடித்துபுது பாண்டத் திட்டே. 515

இட்டுமட்டாய் சலத்தைவிட்டுக் கையால்தேய்த்து இதமாக மிதந்ததெல்லாம் கத்திகொண்டு, கட்டுமடா மூன்றுபத்து கடிகையப் பா கலங்காமல் தெளிவெல்லா மிறுத்துப்போட்டு, தொட்டுமட்டாய் சாக்கையெல்லாம் பொடித்துக்கொண்டு துப்புரவாய்ப் பாண்டத்திற் சீலைபூண்டு, வட்டமதாய் கோடிவஸ்திரந் தன்னில்வாரி வாகாகப்பிழி ந்துமாவை ரவியிற்போடே. 516

போடுவது அதிராமல் விரித்துக்கிண்டி பூப்போலே யிறுகிவரும் பருவந்தன்னில், சாடுவது பின்னிடித்துப் பாண்டத்திட்டு சக்கைமிதந் தறித்திடிற்பின் சாய்ப்பாய்நீரை, பாடுபட மலையாதே சொல்லக்கேளு பருவமடா மருந்தினிட பாகம்வாய்க்கும், வாடுமே காசசலந் தண்ணீர் வற்றும் வாத்திக்கும் தாளியப்பா தெள்ளிப்போடே. 511

தெள்ளிநன்றாய்த் தாளியது பிழிந்ததாகத் தெளிவிறுத்து மாக் கன்னி சம்பத்துகொண்டு, தள்ளிவிடு நாழிகைதான் முப்பதானல் தனைப்பிழிந்துவுலர்த்திவஸ்திர காயஞ்செய்து, அள்ளியே தூள்தனையே பாண்டத்திட்டு அப்பனே முன்முறைபோல் பாகஞ்செய்து, புள்ளியில் லா தாவிமோர் நீர்மோராக புளியில்லா தொன்றுக்கு நால்தான்வாரே.

வார்த்துப்பார் கலக்கிதெளி விருத்துப்போடு வளரவியி லுலர்த்தி வஸ்திர காயஞ்செய்து, ஆர்த்துபசும் பால்காய்ச்சி மாவில்விட்டு அப் பனே விரவிபுட்டா யமுக்கிச்செய்து, பார்த்துமே சாமத்தில் காயவைப் பாய்ப் பத்திரமாய் பலபேர்கள் கண்படாமல், ஏர்த்துமடா சஞ்சீவி யிதுபோலில்லை யென்மகனே மேகமெல்லா மெழுந்துபோமே. 519

எழுந்துபோ மமிர்தமாம் வெகுபோக்குண்டு யென்மகனே கடை சரக்கு நெய்யுந்தேனும், வழுந்துபோஞ் சீனியிட்டு லேகியஞ்செய்து வாரியுண்ணச் சூரணஞ்செய் கிருதம்நீசெய், கழுந்துபோங் கிண்டி யுண்ணு மாவில்சீனி கலந்துண்ணு காரசார மாவில்தட்டி, பழிந்து போம் வியாதிக்கு ரசபாஷாணம் பரிவான செந்தூரம் புறப்பந்தாட்டே.

---

## அமிர்தசஞ்சீவி லேகியம்.

தாட்டியுண்ண லேகியமாய்ச் செய்யக்கேளு தருவாகக்குருமுக மாய்ப் பாடிஞேம்பார், ஏட்டிலில்லை யிம்முறைதா னறுநூற்றில்சொன் னே மெடுத்துப்பா ரிரண்டுலக்ஷம் வயித்தியந்தான், பாட்டெழுதி வைத்தோருஞ் செய்யாராகில் படுபாவி செய்தகர்மம் பஞ்சில்தீப்போல், மூட்டிவிடு முன்வினையால் வந்தநோய்க்கு முழுபாகம் லேகியமாய்ச் செய்யக்கேளே. 521

கேளப்பா கூவிளத்தின் பூவிலத்தி கெடியாகப் பலம்பத்து மாவீ ரெட்டுந், தூளப்பா செய்துகொண்டு பூவையுந்தான் றுயர்தீருஞ் சீன த்தின் பட்டைவாங்கி, வாளப்பா வெட்டியாவின் பாலில்வெந்து வள ரவியி லுலர்த்திபொடி வஸ்திரகாயம், கேளப்பா அமிர்தவல்லி மாவில் பாதி கெட்டியாய் வல்லாரை சிறுபுள்ளடியே. 522

அடியான கொடுப்பைகுரு விஞ்சிதாழை ஆகவைந்து வரைக்கு மே பலமாய்த்தூக்கி, வடிபானே தனிலடைத்து வாருநீரை வகைக்கு நால் படியாக வைத்துவைத்து, படியான ரண்டையும்பா ரந்தவீதம் பவ்வீதப்பருவிளநீர் பாக்குவந்தான் பாலாடையாகுங், குடியான யிள நீர்தான் குரும்பையாகா குத்திவரில் பாலாடை யிருக்கநன்றே. 523

இருக்குகின்றயிளநீர்தானினிப்பேயாகு மில்லாட்டால் முன்பின் தா னுப்பேகைக்கும், பெருக்குகின்ற கியாழம்போ லிளநீர்மூன்றும் பிள்ளாய்கே ளேழரையி லெல்லாம்போட்டு, கரைக்கின்ற பலமதுதான் பன்னிரண்டு கரைந்துவடி கொண்டுதாளி காப்புக்கட்டி, குருக்கினிதா னிஞ்சிபலம்பத்துவாங்கி குருவில்லைதோல்போக்கிக்கொட்டிக்கிண்டே.

கிண்டிவெந்து வரும்பருவ மறிந்துமைபோல் கேள்மகனே அரை த்துஅதில் கலக்கித்தீபங், கொண்டுவரக் கடைசரக்கு கூகைநீறு கோட் டம்வால் மிளகுயிரு சீரமேலம், கெண்டுபத்திரி காய்கிறும்பு சிவதை யக்கிறுப் பாருமன்னபேதி வோமம் நருக்குமூல, மிரண்டுதிரி கடுக ரத்தை மதுரங்காய மேலான தாளிசமு மதிவிடையமாமே. 525

விடையமொடு திப்பிலியும் விளங்கந்தேத்தான் விதையுடனே முந்திரிகை பேரித்தொக்க, சடையாதே மருந்துவகை முப்பதாச்சு சாதியொன்றுக் கரைப்பலந்தான் சட்டிகாய்ந்தால், அடையாளம் நெய் தெரிந்து மருந்தைக்கொட்டி அனல்தாவ வறுத்திடித்து வடிதான் கட்டி, சுடலாகா குகையன்ன பேதிகாயஞ் சூக்ஷமடா முந்திரிகை பேரீத்தஞ்சே. 526

அஞ்சாதே குங்குமப்பூ கோரோசனைகஸ்தூரி அழகான கற்பூர மினந்தானேந்து, மிஞ்சாதே வகைக்காறு கழஞ்சாத்தூக்கி மெதுவாகப் பொடித்துமுன் மருந்திற்சேறு, தஞ்சமென முன்பாகில் மாவைக்

கொட்டித் தனிப்பட்டைச் சூரணமு மதின்மேல் கொட்டி, கொஞ்ச மாய் நெய்யைவிட்டுக் கிண்டிபாகங் குழம்பிறுகி வரும்போது குடிக் கும்நெய்யே. 527

குடித்தநெய்க்குள் கடைசரக்கை கொட்டிக்கொண்டு கொதிவிடு நெய் செம்பவே குடிக்குமட்டும், படித்தபஞ்ச தாரையப்பா பலமீரா று பறுமணியாங் கற்கண்டு பலந்தானுலும், இடித்ததனைப் பொடியாக்கி யதிலேதூவ யென்மகனே அடியில்பிடி யாமல்க்கிண்டு, தடித்தநீ ரில் லாம லேகியத்தில் தயவாக யுறக்கியப்பா தேனேவாரே. 528

வார்த்துமப் படியுணர்ந்து விட்டுக்கிண்டு வடிமெழுகா யூரவைப் பாய் காரோட்டில்தான், பூர்த்தியாய்க் கணபதிக்குஞ் சிவகாமிக்கும் புகழ்பெரிய சித்தாதி பதினெண்பேர்க்கும், நேர்த்தியாய்த் தூபதீப நைவேத்தியங்கள் நிறைமரக்கால் தெட்சணைக ளங்கங்கேதான், கோர் த்திடுவாய் வடமாலே நிர்வாணிக்குங் கொடுஞ்சாபம் நிவர்த்திசெய்து கூறக்கேளே. 529

கூறுகிறேம் லேகியத்தைக் காரோட்டோடே குவித்துநெல்லைப் பாத்தியதின் மேலேவைத்து, ஆறுமுகன் சந்நிதிக்கு யெதிரேவைத்து அறுகுதும்பை துளசிவில்வ மப்பாதூவி, நீறுகையி லெடுத்துநீ பாபா த்தைநோக்கி நியாசமுதப் பிரணவத்தா லலேந்துமூன்றும், வேறுமினி யில்லைநவ சாபந்தீர்ந்து விரைந்தகுரு துளசிதன்னுல் போற்றுவாயே.

போற்றுநாலி லொன்ருக லேகியத்தை புகமுனிக்கென் றேபாகம் பரத்தியற்குச், சாற்றினேஞ் சதுர்பாகங் குருதெக்ஷணையுஞ் சாற்றி யே கைவசஞ்செய் நோயுந்தீரும், போற்றியே பத்திரமாய் லேகியந் தான் புண்ணியர்கள் செய்வதல்லால் மற்ருேர்க்கையா, ஆற்றிவிடுமேக மெல்லா மார்தான்செய்வார் அறைந்ததில்லே நூல்களிலே யனேகங் கோடி. 531

கோடிவித மாய்ச்செய்வா ரிதுக்கொவ்வாது குருவினுட நூல் பார்த்தோர் செய்வார்பாகம், பாடியதோர் காமத்தின் படியேசெய் தால் பரப்பிரமன் விதிமுடிந்தால் பண்டிதோரை, வாடிமுகஞ் சம்ப வனே வழிபோவென்றுல் வரும்பாவஞ் சொல்லறியோம் நயமேவே ணும், தேடியிந்த வமிர்தசஞ் சீவிமாவுஞ் சிறப்பான லேகியமுந் திறந் தான்காணே. 532

காணிக்த லேகியத்தை வியாதிகண்டு கடுகளவு செந்தூரம் பற்பம் வைத்து, ஊணிந்த மண்டலந்தா னுண்டாயானு லொழிந்துவிடு மே கத்தி லெடுத்தநோய்கள், பூணிந்த மேகமெல்லாம் கருவாம்நோய்க்கு புறம்பொன்றுங் கருக்கவில்லை பிலவான்ராசா, தோணிந்த பாகத்தின் படியேசெய்தாய் துடாராது சூலைவிஷ வாதம்போமே. 533

வாதம்போம் பித்தமஸ்தி சுரமும்வாய்வும் வாந்திமந்த மதனுட னே கரப்பான்சூலை, சீதமுத வூஷ்ணமுஞ் சிலேற்பனத்தில் சிக்குகின்ற வாதபித்தங் காசம்போகுஞ், சூதகமாங் கெற்பவாய்வு சுரோணிதமாங் கட்டி சோறைரத்தம் நீரினுலும் செறிப்புத்தீரும், பாதமுதற் சிரசு வரை பெருநீரேறி படர்ந்தவெள்ளை கறுப்புபத்துந் தட்டிப்போமே.

போகுமப்பா வினைகள்முதல் சஞ்சீவிகொண்டாப் புண்ணியரே பத்தியந்தா னிச்சாபத்தியம், சாகுமப்பா வியாதியெல்லாந் தீருந்தீருஞ் சஞ்சீவி மருந்திதுதான் கூடிற்றுனல், வேகுமடா பத்தியங்கா ரொன்று மாகா வென்னீர்பால் நெய்துவரை அவரைப்பிஞ்சும், பாகுமதாங் கீரைமுளை முருங்கைப்பிஞ்சு பருவதாம் வென்னீரு மிளகுங்கூட்டே.

கூட்டுவா யுப்புசுத்தி செய்துக்கொண்டு கொழுத்தமோர் கறிகூட் டப் புளியாகாது, நாட்டினில் சயமிளைப்பு சூலைபதினெட்டும் நவமூலம் பவுத்திரத்தில் முளைகள்ரத்தம், ஏட்டிலினி யென்னவென் றெழுதப் போரோ மெழுபத்தி ராயிரமாம் வியாதிக்கெல்லாஞ், சூட்டிவிடச் செ ய்துகொண்டால் சுகிர்தமுண்டு சொர்க்கலோக முங்கிடைக்குஞ் சூக்ஷு ங்காணே. 536

## விஷநோய்க்கு அமிர்த சூரணம்.

காணிந்த அமிர்தமாம் பலந்தானுறு கற்கண்டு சீனிரண்டு பலந்தா னுறு, கோணிந்த கூகைநீர் பலந்தானென்று கோரோசினை கிராம்புதிரி கடுகுயேலம், வேணிந்த சாக்காறுங் கழஞ்சியாறும் வேதித்து மண்ட லமே கொண்டாயானல், ஊணிந்த மேகமெல்லா மொழிந்துபோகு முஷ்ணங்க ளணுகாது வறிந்துபாரே. 537

## வயித்திய சாஸ்திரங்கள்.

அறைந்திட்ட வயித்தியந்தான் ரண்டுலக்ஷம் அதில்பாதி குருநாடி அடவுஞ் சொன்னேன், அறைந்திட்டசூத்திரந்தா னையாயிரத்தி லறிய

லாம் வியாதிகளி னுண்மையெல்லாந், திறந்திட்டேன் கர்மகாண்ட முந்நூற்றிலப்பா தீராத நோய்க்கெல்லாம் நிவர்த்தி சொன்னேன், அறைந்திட்டேன் சாஸ்திரமுங் குறுக்கிச்சூஸ்திரம் அறுநூற்றி லொளிப்பில்லை யதிகந்தானே. 538

## வாத பித்த ஐய மேகமுதலாகிய வியாதி வருங்குறிகள்.

தானென்ற மேகமது விருபதுந்தான் சமானனெடு பானனுற வாகும்போது, கானென்ற தேவதத்தன் யேறிமிஞ்சி கடிதான சிலேற்பனத்தில் புகைந்தேசாடி, ஊனென்ற திரேகத்தில் சூலைபதினெட்டும் உற்றுப்பார் கரப்பனேடு கிரந்திமாய்வு, வானென்ற மேகத்தால் காசமெட்டும் வருகுமப்பா வாதபித்த மையநீரே. 539

ஐயனே சிலேற்பனத்தில் வாதமேக மதிகரித்தால் வாய்வேறி யுளையுந் திரேகம், வையாதே நீர்சிரசில் நாசிகண்வாய் வளுவளுத்து வொழுகுமடா வாய்வுவெப்பும், பையவே நீரிழிவு செறிப்புகுன்மம் படர்வெளுப்பு தடிப்புமண்ட வாதம்பாரு, கையான மேகமடா வாதங் கூடில் கத்தியுமாய்க் கிடாயுமாய்ப் பித்தம்பாரே. 540

### வே று.

பித்தமாமேகமாறில் பெருத்தநீர்வாதங்கூடில்
அத்தமாஞ்சதையும்வெந்து அரைக்குக்கீழசைந்துநாடி
குத்தயாஞ்சூலைநீர்கள் கொடுமையாம்நரம்பில்வீழ்ந்து
பத்தமாஞ்சுரமுங்காயும் பாரில்நீர்சிரசில்காசம். 541

காசமாம்வேர்வைமீறி கடைகெட்டசயமேகானு
மோசமாம்பித்தவாத முழுமையுமூன்றுங்கூடில்
நாசமாம்வற்றித்திரேகம் நடப்பிலேயிருமல்கக்கிப்
பாசமாய்க்கூடிக்கொண்டால் பரவெளிவன்னிமூழ்கே. 542

வன்னியாம்சிலேற்பனத்தின் வாதமேமேகங்கூடில்
கன் னிமேலாசையானல் கைதொட்டால்விந்துவீழுங்

குன்னியேவாய்வுமேறி குத்தியேசொருகும்பக்கம்
பன்னியேசிரசில்ரோமம் பரிந்திடும்பொடியும்புண்ணே. 543

புண்ணுமாய்ச்சூலைநீர்கள் பொட்டுபோல்காசுமட்டாய்
சண்ணுமேசொரியுங்காந்தல் சச்சரப்பொழுகும்நீர்கள்
பண்ணுமேவாதமையம் பாதத்திற்சிரசுமட்டும்
வண்ணுமாய்த்துத்திப்பூப்போல் வருகும்நீர்குட்டந்தானே. 544

தானென்றகர்மகாண்டந் தன்னிலேவிரிவாய்சொன்னேம்
ஊனென்றவுடம்புக்கெல்லா முற்றதோர்நோயின்செய்கை
வானென்றபாவஞ்செய்து வருகிறவியாதியெல்லாங்
கானென்றகர்மந்தீர்த்துக் கருத்துடன்மருந்துகொள்ளே. 545

## மருந்துகொள்ளும்போது பத்தியம்.

கொண்டபின்கலையுமப்பா கொடும்புளியுப்புமாற்று
வண்டரேமனிதரப்பா மருந்துண்ணிலணைவார்பெண்ணை
விண்டதோர்விந்துவிட்டால் வெருமுப்புகூடாவிட்டால்
கண்டதோர்மேகமிஞ்சிக் கருவதுசுத்திசெய்யே. 546

சுத்திசெய்துப்புங்கூட்டுச் சொன்னேனுன்மருந்தின்செய்கை
சத்தியஞ்செய்தாலுந்தான் தரணியில்மனிதர்க்கெல்லாம்
பத்தியமுப்பேயாக பாடினேம்பலநூல்பாரு
முத்தியாமருந்துகொள்ள முதுமையுமிளமைநிற்கும். 547

## மேக ராசாங்கத் தயிலத்தில் சேர்மானம்.

நிறந்திட்ட வயித்தியந்தான் ரண்டுலட்சம் நின்றுபார் தயிலத்தில் கோடாகோடி, திறந்திட்டேன் மேகரா சாங்கமெல்லாந் திரும்பி நின்ற தயிலத்தில் பாகங்கேளு, கறந்திட்ட கடைசரக்குக் கெல்லாமுக்கியங் காரமடா மிளகொன்றை யல்லாவில்லை, பிறந்திட்ட தயிலத்தில் நீரேறுமல் பிச்சிபுஷ்ப நீர்பிடிக்கும் பிலத்தைக்கேளே. 548

பிலமான தயிலங்கள் படிதானென்று பிள்ளாய்கேள் மிளகுபலமரைதான்கேளு, நலமாகக் கட்டிநன்றாய்க் கட்டிப்போட்டு நடுப்பிலே முழுகுமுறை பிழிந்துமூழ்கு, நலமாகத் தானியபுடம் புஷ்பம்லைத்து.

நவலோகங் காய்ச்சிமுறை வெதுப்பிமூழ்கு, குலமான தயிலமப்பா சுறுக்குமெத்தக் குடிபோகும் வியாதியெல்லாஞ் சிறப்புத்தானே. 549

சிறப்பான தயிலங்கள் மிலாக்காய்கட்டை செப்புறேன் கியாழமிட்டால் வாசம்பார்த்து, மறவாதே பின்புமதில் பாதிஜலம்விட்டு மைந்தனே கியாழம்வைப்பா யடக்குமட்டுங், திறமான அறைப்பெறிப்புப் புடபாகங்கள் தேர்ந்தநிறை யளவுபதந் திறந்தப்பாமல், அறமான சாத்திரத்தை யறிந்துசெய்தால் அடங்காத நோய்களுண்டோ கண்டுபாரே.

## குழந்தைகள் கணம்-8-க்கும் விபரமும் மருந்தும்.

கண்டுபார் வயித்தியந்தா னறுநூறுகுங் கடைசியிலே பாடிவிட்டோ மார்க்கங்கிட்டார், அண்டிவருங் குழந்தைகட்கு வாலைசந்திரன் அழகான கணமதுவும் பதினெட்டுண்டு, சண்டமா ருதம்போலே யெட்டுமார்க்கஞ் சாத்தியமாம் பதுமங்கே வாலைக்கில்லை, பண்டுசொன்ன தசவாய்வு பதறிநிற்கும் பார்த்தரிந்து வயித்தியந்தான் வுணர்வாய்ச் செய்யே. 551

உணர்த்திப்பொடித்துத்தூளானல் உற்றவண்டவெண்கருவில்
சிணத்தில்பக்கம்பால்துளிதான் சீராய்விடக்கருசியாகும்
அணைத்துமருந்தில்விட்டரைத்து ஆனகடிகையேழரைதான்
அணைத்துவழிக்கும்பருவமதி லப்பாவழித்துக்குளிகைசெய்யே. 552

செய்யேகுளிகைகழஞ்சரைக்கால் திறமாங்குளிகைநிழலுலர்ந்தால்
வெய்யோரவியில்கடுகுவெய்யில் வளமாயுலர்ந்தால்சாம்பிராணி
மெய்யாப்புகைத்துசிமிளில்வைத்து மேலில்வரும்நோய்க்கிதுகேளு
ஐயாஆர்தானிதுக்கொப்பு அரனேயல்லால்வேறில்லை. 553

இல்லைபூமியிலொருத்தருந்தா னெழுபத்திராயிரம்நோய்கட்கும்
நல்லசாலபூபதியே நாட்டில்கண்டோரில்லையில்லை
தொல்லைசெந்தூரமுண்டோர் துலையாப்பூபதியுண்டாக்கால்
சொல்லாப்பெரியோர்கையிலுண்டு சூக்ஷமற்றுயிருப்போர்க்கே. 554

இருக்குமடந்தானுரறிவா ரில்லத்திருப்பார்வறுமைகள்போல்
பெருக்கப்போகாரொருவரிடம் போனல்பிரியவொட்டார்கள்

கருக்களறியாமானிடர்க்குக் கதறிப்பேசிவருவதென்ன
நெருக்கும்படிதான்பூமிதனில் நோமறுநூறுமருந்தறிவார். 555

அறியார்பூபதிசெந்தூரம் அழகாய்முடிப்போன்றுனுகும்
பிறியாநோயும்பிணிதீரும் பிர்மாவளர்த்தால்பேசிவிட்டு
சிறியேன்போரேனெனத்தொழுவார் திறமாம்பூபதிமார்க்கமிது
குறியாம்வயித்தியர்காணுமல் கோடிக்கொருத்தரிருப்பாரே. 556

இருந்தாலிந்தசெந்தூர மெவருஞ்செய்துகொண்டிருந்தால்
பொருந்தாநோய்களிதைக்கண்டால் பேசாதோடிப்போய்விடுங்காண்
வருந்தாவியாதியேதெனினும் வளமாயனுபானத்தோடருந்த
பொருந்தாவியாதிவருவதில்லை புகழுஞ்செந்தூரமுப்பிதுவே. 557

## உப்புபற்பம்.

உப்பினைப்பற்பஞ்செய்ய வுரைக்கிறேன்வாய்வுக்கெல்லாஞ்
செப்பமாந்திருகுகள்ளி சிறந்ததோர்கட்டைவெட்டி
அப்பனேமுழந்தானுள்ளே அடைப்புவைத்தாற்குள்சோற்றை
நிப்பமாய்த்தோண்டிநன்றாய் நிறுத்திடுபலந்தானெட்டே. 558

எட்டிடுகறியுப்புத்தா னிந்துப்புதன்னிற்பாதி
கொட்டிடுவெடியுப்புக்கால் கூட்டியேதாளிசத்தாற்
கெட்டியாயரைத்துத்தள்ளி கட்டைக்குள்ளடைத்துக்காயக்
கட்டிடுகளிமண்கொண்டு கட்டைமேல்சாணியப்பே. 559

அப்பியேயெருவில்வைத்து அதின்மேலுமெருவைக்கொட்டி
செப்பியேதீயைமூட்டி யெரித்துஉள்கட்டைவற்றி
சப்பியேஉப்புக்குள்நீ தாக்கியேபிடிக்குமுன்னே
தப்பியேதீயைவிட்டுத் தள்ளியேஆறவையே. 560

ஆறிப்பின்கட்டைக்குள்ளே அடைத்ததோர்மருந்தைக்கொட்டி
ஊறிப்பின்தாளிசாத்தா லொருசாமங்கல்வத்தாட்டி
ஏறிப்பின்ரவியில்வில்லை யெடுத்தடைபிடித்துலர்த்தி
சீறிப்பின்வில்லைகாய்ந்தால் சித்தோட்டில்வைத்துமூடே. 561

மூடியேமேலுமோட்டை முழப்புடந்தன்னிற்போடு
ஊடியேயெரித்துஆட்டி உத்தமதாளிசாற்றில்

நாடியேயரைத்துப்பின்னும் நலமானபுடமொன்ருனல்
ஆடியேபுடமொன்ருச்சு அப்பனேமருந்துகேளே. 562

கேளுமுன்பூநீருப்பில் கெடியானதுருசுகூட்டி
வாளுமுன்புடத்தில்போட வயித்தியநூறிற்சொன்னேம்
மாலுமுன்சொல்லிவைத்த மகாகுருபலங்கால்தூக்கி
ஆளுமுன்பூநீருப்பில் அன்பாகக்காலேதூக்கே. 563

தூக்கிடுமுன்னுப்புத்தான் துயர்தீரபலமும்நாலுந்
தூக்கிடுங்கல்லுப்புக்கால் துவர்ப்புடன்வருப்புங்காலு
ஆக்கிடுபலந்தானைந்தும் அப்பனேகல்வந்தன்னில்
சாக்கிடுஅரைக்குதாளி சாற்றினுல்சாமம்ரெண்டே. 564

ரெண்டுமேசாமமாட்டி நேர்ப்புடன்வில்லைசெய்து
கண்டுடன்ரவியில்வைத்துக் காய்ந்தபின்னெடுத்துக்கொண்டு
அண்டர்தம்பிரானைப்போற்றி அன்புடனருந்தினுக்கால்
தெண்டந்தான்செய்துபித்தந் தெறிந்துமேயோடுந்தானே. 565

வேறு.

ஆமேகணைகளெட்டுமிஞ்சி அப்பால்வகைதானைந்துசொன்னேம்
போமேகர்மம்நிவர்த்திசெய்து பொலிவாயமுர்தந்தனக்குநெய்யுந்
தாமேகணைக்குள்பதினெட்டுந் தடையோயில்லைசிறுமுன்னில்
நாமேசொல்வோங்கிருதமென்ன நன்ருய்த்தீரஒருமருந்தே. 566

மருந்தாங்காந்தலோகமதை மடக்குங்கண்டீர்முன்சரக்கும்
பொருந்தவரைத்துவடிகட்டிப் போடுபலந்தான்பதின்மூன்று
வருந்திப்பாருமறுநூற்றில் மகத்தாய்காந்தலோகமதை
அருந்தநெய்யில்மஞ்சாடி அப்பாயிட்டுக்கொடுக்கநன்றே. 367

நன்ருய்லோகமண்டூரங்காந்தம் நலமாமண்டலஞ்சாடியரை
பன்ருங்கிருதம்நெய்யிலிட பறக்குங்கணைகள்பதினெட்டும்
வின்ருங்குழந்தையுடலில்வந்த வீரும்விடநீர்கணைபிரமி
கன்ருரில்லிவயித்தியநூற் கசடர்கையில்கிட்டாதே. 568

வேறு.

கிட்டுமோபாவிக்கப்பா கிடைக்குமோவூரிற்சோர்தான்
செட்டுகள்போலேவூரில் சேர்ந்தவர்பிழைப்புக்காகும்

திட்டமாய்நூல்கள்கிட்டி தெளிந்தவர்மவுனத்தெய்தி
எட்டுமேயறியோமென்று ஒருவரோடுரையார்தாமே. 569

தானேகணேகள்பதினெட்டுந் தணுகாபித்தமீறிவரும்
ஊனேபிரளிவாய்வேறி வுற்றகிருமிபித்தமிஞ்சி
தேனேசோகைவெளுர்மேனி திமிர்ந்துவிஷநீர்காமாலே
பானேமலசலந்தான்சுருங்கிப் பாண்டுவருத்தும்பித்தகணே. 570

கணேக்குமருந்துவெண்ணெய்க் கியாழம்லேகியங்கிருதம்பொடி
அணேக்கும்லோகமண்டூரங்காந்த மல்லால்கணேகளற்றுவிடும்
துணேக்குமனுபானஞ்சொன்ன தெல்லாந்துடருங்காந்தசெந்தூரம்
பிணேக்கவென்ருல்நூல்பார்த்துப் பேணிக்கொண்டுப்பீறவதே. 571

## பாஷாணந் தின்னவர்க்கு முறிப்பு மருந்துகள்.

ஆபத்துவந்தவேளே யருந்தினுல்பாஷாணத்தை
கோபத்துவெண்ணெய்கோவை கொடுப்பவைசிறுநீரைகாரை
தூபத்துபசளேநீலி துவாதகிதழையுங்காடி
ஏபத்துமிளகுவுள்ளி யெருமையின்றயிருந்தானே. 572

தாமேதுவாலேசந்தனத்தைத் தயிரில்குழைத்துமேல்பூசு
ஆமேயதனில்மிளகுதேனில் அப்பாயமுரிதணேப்புகட்டு
போமேநாயின்கஷ்டமதைப் புகட்டுங்கடுகாய்வென்னீரில்
போமேபிரமன்லபிமுடிகில் பிழையார்தாரம்பெருத்திடுமே. 573

## நோய்களும் புத்திகளுங் குறிப்பு.

பெருத்தஅரிவுவுண்டானல் பேசக்கேளுபுலத்தியனே
வருத்தநோய்கள்வருகிறதும் வளமாமூலகிருச்சினமும்
ஒருத்ததலேயிடிகண்ணேயு முதிருங்குன்மவாய்வுகளுங்
கருத்தகாப்பன்சொரிசிரங்குங் காணுகோசம்நீரிறக்கம். 674

நீராமிளப்புகக்கல்சயம் நீங்காப்பாண்டுபெருவயிறுஞ்
சோராமேகம்நீர்ச்செறிப்புச் சீழூரத்தங்கிராணிமுனே
போராஞ்சூலேபதினெட்டால் பெருத்தகுட்டங்குரைநோய்கள்
தீராதெட்டில்மூன்றுவகை திறமாஞ்சூலேவாதமேகம். 575

வேறு.

வாதத்தால்மேகசூலே வந்திடும்விரணசூலே
போதத்தால்வெள்ளைவீழ்ந்து பொருமியேபுண்ணுங்கோசம்
வீதத்தால்தொப்புள்மூலம் வெந்துமேயெரியுங்காந்தி
நீதத்தால்நீரிறங்கில் நிர்மூலமெரிச்சல்தானே. 576

எரியுமேயபானகோச மெங்குமேதுளைக்குந்துண்டாய்
விரியுமேவிஷநீர்வாய்வாய் விரணத்தில்கடுத்துகுத்துச்
செரியுமேவாதம்வாய்வால் சுரங்களுஞ்சன்னிதோஷங்
கரியுமேதேகம்வாடிக் கதறியேகுளிரும்பாரே. 577

பாருநீவாதவாய்வால் பருமேகவிரணசூலே
ஆருமேஅரியார்விந்து அழிந்திடும்புத்திரனுசங்
தாருமேமேகத்தாலே கருஞ்சூலைவிரணம்புக்கில்
ஊருமேமருந்துசெய்ய வொருவருமறியார்காணே. 578

காணலாம்பாடிவைத்தக் கருவுநூலறுநூறப்பா
வீணலாம்பார்த்தாலென்ன வெறும்பனியீபோலாகும்
தூணலாந்துரும்பேயாகுந் துரும்புதூணுகும்பின்பு
தோணலாஞ்சாஸ்திரத்தைத் துன்மார்க்கர்க்கியவேண்டாம். 579

ஈயலாமறிவுள்ளோர்க்கு யிகபரமிரண்டுமெய்தும்
நோய்களைக்கண்டுநாடி னுட்பமாயறிவானுகில்
பாய்தனில்கிடக்கும்பேர்க்கு பருவமாய்மருந்துசெய்வாய்
சாயலாம்பின்புவந்தால் சரிநிற்கும்படிசெய்வாயே. 580

செய்வதுலோகந்தன்னில் செனிக்கின்றமனிதர்க்கெல்லாம்
எய்வதுநாம்புகேளு யெழுபத்திராயிரந்தான்
வெய்வதுநாம்புகொண்டு வியாதியும்வருகும்பாரு
அய்வதுபாவத்தாலே அவரவற்கெய்தும்பாரே. 581

பாவமேசெய்யானுகில் பாரினில்புனிதனுகில்
நோவதுவந்துகொண்டால் நுட்பமாய்த்தீர்ந்துபோகுந்
தீவதுசெய்பாவிக்கு தீராதுநோய்கள்வந்தால்
சாவதுவாதபித்த சிலேற்பனத்தோடுங்காணே. 582

ஓடுத்திடுமொடுங்காதென்றும் வுறுதியாய்நாடிபார்த்து
அடுத்தசொல்லார்தான்காண்பார் ஆயிரத்தொருவருண்டு
எடுத்ததோர்சாத்திரத்தை யேகமாயறிவோர்க்கெல்லா
மடுத்ததேமருந்துநாடி மற்றவரறியாரண்ணே. 583

அறிவார்பெரியோர்பெருனூலில் அழகாம்நாடிமருந்தினமும்
பிறிவாய்க்குறுக்குசூத்திரமாய்ப் புதைத்தபொருளைக்குருமுகமாய்
நெறிவாய்வணங்கிப்பொருளீந்த நினைவாய்நூல்கள்தேடிநிற்குஞ்
செறிவாய்நோய்கள்வருங்குறிகள் சேருமேகவிஷரே. 584

வே று.

மேகத்தா லுடல்மெலிந்து தளர்ச்சியாகி விந்துகெட்டு அஸ்திக்குள் சதைகள்வற்றி, மோகத்தால் சூடெழும்பி வெள்ளைவிழு முதிர்ந்தாக்கால் ரத்தங்கள் முதிர்ந்துகாலும், ஆகத்தி லுள்ளகைகா லுளைச்சல் காணும் அன்னமுந்தான் வெருத்துவரும் ஆசைபோகும், போகத்தா லுள்மூல மபானவாய்வு பொரிபட்ட பஞ்சதுபோல் வெந்துபோமே.

வெந்துஅஸ்தி விந்துவற்றில் தேகமேது விஷவாய்வால் வாதபித்தந் துடர்ச்சியாகில், வந்துவிடுங் கபாலத்தில் நீர்தானேத்தும் வாழ்மேக மிருபதினுல் வருகும் நோய்கள், சந்தயம்வே றெண்ணுதே யிதினற்சூலே சார்ந்துவருந் தூர்ப்பனெடு கிரந்திகுட்டங், கொந்துகொந்தாய் புடைத்தெழுந்து நரம்புசிக்கி கூனிகைகால் விரல்களெல்லாங் குருகுந்தானே. 586

குருக்குபுண்ணுய் வெடித்துமே குஷ்டநோய்வந்து கூறுகெட்டு யிருந்திடம்விட் டெழும்பொட்டாது, பிருதியடா சாஸ்திரந்தான் ஆயிரத்றன்னூற்றில் புகழ்ந்துவிட்டோ மருந்துகட்கு குரைநோய்க் கெல்லாஞ், சுருதியதில் பார்த்தறிந்து செய்தாலல்லோ சுகமாகுங் குருவழலை கூடிற்றுனல், விருதாவில் குருவறியா மருந்துசெய்தால் வேறுமப்பா வளர்ப்போலே விளங்குந்தானே. 587

கதிருவருங் கரப்பனுட சிரங்குவகைகேளு கபாலத்தில் வருமேககரப்பான்ரண்டு, வருதிவாய் கரப்பனென்ற சொரிசிரங்குரண்டு வளர்பித்த விடநீரா லெடுத்தசொரிமூன்று, உறுதியென்ற சிலேற்பனத்தில் கரப்பனுவு ஊன்பத்திபடர்கரப்பா னரைகீழ்ரண்டு, பருதியென்றகுரைகுட்டங் கிரந்திபுண்கள் பாருபுழு கிருமிசூலே பீசத்தில் மூன்றே. 588

பீசமுதல் பாதவரை சிரசுமட்டும் பிரிவிரிவாய் நாமத்தை குடலெலும்புகூடும், வாசமதில் யுட்புகுந்த வாறுபோல வகைவகையாய்த் துளைத்துபழ மலத்தைவற்றி, தோஷமுதல் சுரம்வாய்வு தொடுக்கும் விடநீரால் துடர்கிராணி வரைவரையாய் துளைத்துமீளும், நாசம்வரு மேகமிரு பத்துமுதலாகும் நட்புத்தி னிப்பொசிப்பு நல்விஷம்போல் நீரே. 589

விஷநீர்கரப்பா னங்களும்போம் விளம்பினே முன்னூற்றில் செந்தூரங்கள், பிசகாதிரும்நூற் றஞ்சில்பறபம் பிள்ளாய்கேளுஞ் சொல்லிவைத்தேன், அசைவாமிந்நூற்றில் யாமுரைத்தோம் அழகாங்குழம்புதளசெந்தூரங், கசவாம்பாண்ட கற்பூரங் கடிதாமருந்தைக் குடித்திடுமே. 590

குடித்தால்மருந்துகியாழமுடன் குடிபோம்நோய்கள்பேர்கேளு
அடித்தானத்தில்மலக்கட்டா யபானஞ்சுருங்கிகிருமியுண்டாம்
வெடிக்குங்கரப்பன்பதினெட்டும் விஷநீரெங்குமேல்பாய்ந்து
தடிக்குஞ்சிறங்குபறந்தேறி தருகாசொரியுமுதிர்ந்திடுமே. 591

ஊருமுளையுசிறங்குமிடுப்புகைகால் வோகோவாதவுளைச்சலுமாம்
பாருமேகம்பெருத்துவிழும் பாரில்படுக்கச்செல்லாது
வாருஞ்சிலையவிழ்தத்தாலும் வாகாய்சொரிமேல்மலர்ந்தாலும்
ஆருங்கொண்டால்மருந்துதனை ஆருக்கிராணியாறிடுமே. 592

ஆறுமூலம்பவுத்திரமும் மறைவாய்ச்சொல்வான்கழிச்சலும்போம்
வீறும்வாய்வுகுன்மமும்போம் விளைப்புகக்கலிருமலும்போந்
தாறுமாராய்விரிவுபத்துந் தடித்தசூலைபுண்களும்போம்
நாறுங்குட்டங்குறைநோயும் நன்றாயொழியுமருத்தினமே. 593

இனமாய்வியாதிவருகிறது மியல்பாய்மருந்துகொடுக்கிறதும்
நினவாயறுநூர்தனிலுரைத்தோம் நீங்காவியாதிநீங்குதற்கும்
பிணமாய்போனவுயிர்மீண்டு பின்னும்வியாதிவருகாமல்
பிணமாம்பொன்கள்சிலவழித்தால் பகர்பூபதிசெந்தூரமுண்டோ. 594

## சர்வபூபதி மாத்திரை.

உண்டாம்பூபதிமாத்திரையை யுரைப்பேன்மாந்தானவர்க்கு
அண்டப்பொருள்கள்செலவழித்து ஆக்கைதனக்குவருந்திடிலே
கண்டால்சகலநோயகன்று கடலில்வீழுங்காணமல்
விண்டாலாகாதென்றெண்ணி விள்ளாதிருந்தோம்நூல்களிலே. 595

நூலாமறநூல்பார்ப்போர்க்கு நுணுக்கம்பூபதிசொல்லுகிறேம்
மேலாஞ்சந்திரோதயமு மிக்கநவரத்தினபூபதியுந்
தாளாமற்றசெந்தூரமுதல் தனியாமாசச்செந்தூரங்
காலாங்காந்தசெந்தூரங் கடிதாங்குன்மங்குடோரியுமே. 596

குடோரிசண்டமாருதமுங் குணமாம்லோகமண்டூரம்
பிடோரிவாதாராட்சதனும் பிலமாங்காலன்கெவுரியுமாய்
விடோரிசாமம்பத்துவகை வெவ்வேர்வகைக்குக்கழஞ்சிரண்டாய்
நடோரிரசமும்நீர்விஷமும் நவிலுங்கெந்தம்நேர்நாபி. 597

நாபிவெள்ளையரிதாரம் நலமாம்லிங்கமனேசிலையுந்
தாவுங்கெவுரிதுருசுபத்துந் தனியாம்வகைக்குக்கழஞ்சுவொன்று
மேவுமாத்தைத்திரிகடுகு மேவுங்கிராம்புவெண்காரஞ்
சீவுமாஞ்சியவச்சாரமிந்து சேர்ந்தகூடன்பத்தாச்சே. 598

பத்துவகைக்குக்கழஞ்சொன்றாய் பாராய்வீரங்கழஞ்சொன்று
கத்திபரியும்வாளமஞ்சு கடுக்காய்விதைபோல்கழஞ்சஞ்சு
ஒத்துமருந்துமுப்பத்துமூன்று மொன்றாய்கல்வமதனிலிட்டு
வைத்துவாளமாத்திரந்தான் வளமாய்சுத்திசெய்துகூட்டே. 599

கூட்டியரைக்கவகைகேளு கொடியசித்திரமூலியின்வேர்
ஆட்டிக்கறித்துப்பலம்ரண்டு மழகாஞ்சலத்தில்நாழி
வாட்டியனலில்வற்றினக்கால் வளமாங்கியாழமுரியானல்
தீட்டியரைப்பரய்மருந்துதனை நிலையாங்கியாழம்விட்டுவிட்டே. 600

விட்டேயரைத்துமுகிந்தபின்பு விதமாய்நிழலிலுலர்ந்தாக்கால்
கொட்டேமிளகுபலம்ரண்டு கூர்ப்பாயிடித்துவொன்றாண்டாய்
முட்டேயடுப்பில்முன்போலே மிளகில்நீர்தான்விடுநாழி
வட்டேவற்றிவுரியானல் வார்த்துமருந்தில்விட்டரையே. 601

அரைத்தகியாழமுகிந்தபின்பு அலரநிழலிலுலர்ந்தாக்கால்
நிரைத்துமருந்துபாஷாணம் நிலையாம்நாபியிட்டதற்கு
கரைத்தால்களவுமற்றாற்போல் கனத்தசுத்திமருந்துகட்கு
விரைத்தால்மருந்துகளையில்லை விடுவாய்வழலைக்குருக்கழஞ்சே. 602

குருவுங்கழஞ்சுகூட்டிநன்றாய்க் குணமாய்பொடித்துரவியுலர்த்தி
தருவாங்கல்வந்தனில்பரப்பித் தாவும்பழச்சார்தான்செமிந்து

உருவாஞ்சாமமீராறு வுற்றமைபோல்தானரைத்து
பருவாந்தகடுபில்லையதாய்ப் பருத்ததுண்டுபேர்செய்யே. 603

துண்டுபோலோட்டில்வைத்து துணிவுடனெடுத்துமூடி
கொண்டுவாகற்சுன்னத்தைக் கேவுநீர்தனிலேநீற்றி
பண்டுமேவகலில்வைத்துப் பாகமாய்மூடியேதான்
சுண்டிமுன்சீலைமேவி சுத்திடுவில்லையோடே. 604

ஓட்டின்மேல்மூன்றுசீலை வுணர்வாகசுத்திக்காய்ச்சி
காட்டினிலெருவடுக்கிக் கனமாகக்குவித்துமையா
வாட்டியேவைத்துமேலும் வளர்செகமெருவைகொட்டி
காட்டிடும்புடமாறிப்பார் கனகுருவுப்பின்பற்பம். 605

பற்பத்தில்குறையொன்றில்லைப் பராபரம்பூமிநாதஞ்
செப்பமாய்பூநீதன்னில் செய்கின்றகுருதான்மூன்றும்
ஒப்புமாய்முன்னேசெய்தால் ஓகோகோவுப்பின்பற்பம்
தப்பல்லாவாய்வுக்கெல்லாந் தடையில்லைகாலந்தானே. 606

தானென்றவாய்வுவேது தனிக்கட்டிவலிகளேது
ஊனென்றவுதிரந்தன்னி லுருமியேபொருமலேது
வானென்றவிலாவில்நின்று வலிக்கிறவலிதானேது
சானென்றஉதிரத்துள்ளே சார்த்தவாய்வெல்லாம்போமே. 607

போகுமேமூலவாய்வு பொருமியேமூலஞ்சிக்கி
வேகுமேமலத்தைக்கட்டி விடாமலேபொருமிகுத்தி
தாகுமேஅன்னங்கொண்டால் தடைபடுஞ்செரிக்கொட்டாது
ஆகுமேஅந்ததேகம் அனல்கொண்டுரத்தம்போமே. 608

போமல்லால்தேகம்புண்போல் பெருத்ததோர்மூளையும்வாய்வு
தாமல்லால்பித்தவாய்வு தான்சிறசேறிக்குத்தும்
ஓமல்லால்வாதவாய்வு உளையும்பின்காலுமேலும்
வாமல்லால்வயிற்றில்குத்தும் வற்றிடும்விந்துதானே. 609

விந்துதான்வற்றிமேகம் வெள்ளையுங்காணும்நித்தம்
வந்துதான்குன்மமெட்டும் வலிகுன்மசத்திகுன்மங்
குந்துதான்குத்திகுத்தி கூக்குரல்செய்யவும்வாய்வு
பெந்துதான்மலட்டுவாய்வு பெருஞ்சூலைகெற்பவாய்வே. 610

வாய்வுதானல்லோவெல்லாம் வளர்க்கின்றசீவனுச்சு
தாழ்வானல்கொண்டதெல்லாந் தமியாதுதீயும்போச்சு
கோழ்வாரதெல்லாம்பாரு கூடியஅபானவாய்வால்
பாழ்வானகூடுபோச்சு பாருநீபற்பங்கொள்ளே. 611

கொள்ளுவாய்லேகியங்கள் குடிநீரில்மாவில்தேனில்
அள்ளுவாய்சூரணங்கள் ஆவின்பால்வெண்ணெய்சீனி
விள்ளுவாயிஞ்சிசுக்கு வெல்லமாம்பற்பங்கொள்ள
தள்ளுவாயெல்லாம்பத்தியந் தனியுப்புமோருமாமே. 612

மோருமாமிஞ்சியாகு முளைக்கீரைதுவரையெல்லாம்
பாருநீபரமஞ்செய்யப் பாடினேமுன்பின்சூஸ்திரம்
ஆருநீஅறிந்துநூல்கள் அங்கங்கேயிடந்தோறும்பார்
சேருநீநூல்கள்வாய்த்தால் செய்தமுன்றவங்கள்தானே. 613

தவத்திநூல்னூல்கள்வாய்த்தால் தரித்திடும்வியாதியெல்லாம்
அவத்தினல்வரும்நோய்கண்டு அறிந்திடும்வயித்தியந்தான்
பவத்தினல்நூல்கள்பார்த்துப் பருந்திடுமருந்துசெய்து
சிவத்தினல்மனதுகூர்ந்து திருவடிபிடித்துக்கேளே. 614

கேளுநீஅறுநூல்தன்னைக் கெட்டியாய்குருவைத்தேடி
வாளுநீலோகத்துள்ளே வழங்கியமருந்துசெய்து
தாளுநீவாதம்பார்த்தால் தாணியில்கெட்டுப்போவாய்
கேளுநீவாருமற்றுன் கூர்ந்துநீநூலைப்பாரே. 615

பாருநீநூல்கள்கோடிப் பாடினர்சித்தரப்பா
ஆருந்தான்அறியச்சொன்னர் அறிவுள்ளசட்டைநாதர்
தாரும்நீரென்றுவாங்கித் தாணியில்கிழித்தார்மூலர்
சாரும்நூலெல்லாத்திற்குஞ் சபித்திட்டோமிதுதான்பாரே. 616

## இன்னூல் வெளிப்பட்ட விபரம்.

இதுதானறுநூற் பாண்டுவைப்பு யெளிதாமறுநூற் றிரண்டு சொன்னே, மதுபோலில்லை யிந்நூல்போல் மார்க்கங்கிட்டா குகையில் வைத்தோம், பொதுவாமுனிக ரிஷிகளுந்தான் பொதியைவந்து யெனைப்பணிந்து, சதுராயிருக்கு மங்காளில் சாஸ்திரந்தான் பார்க்க ஆற்றூர். 617

## வாதசாஸ்திரத் தொகைகள்.

பாரப்பாபாடினது ரண்டுலக்ஷம் படுபாதி லக்ஷந்தா னதனில்பாதி, கூரப்பா அன்பதினா யிரந்தானல்லோ குறுக்கியதில் பதினாயிரத் தொன் றுதொட்டு, நேரப்பா பெண்ணாயிரத் தொன்றுமாக நிலையாக வதைக்

குறுக்கி வையாயிரந்தான், சேரப்பா வாதமாய்த் திரட்டிவைத்தேன்
செகத்திலே கிடையாது அரையிலுண்டே. 618

## வயித்திய சாஸ்திரத்தொகை.

உண்டான வயித்தியந்தா னனேகமுண்டு ஓகோகோ வதில்குறி க்கி லக்ஷமப்பா, நன்ருகப் பாடினது பதினுயிரந்தான் நடுவாகக் குறி க்கிவைத்தே னையாயிரந்தான், கண்டாயோ நாடியுட பரீட்சையெல்லா ங் கருவாக நிகண்டெனவே யெட்டுஞ் சொன்னேன், கொண்டேகு மலேபூமி கடலிலுள்ள குறியாக மருந்துவகை பிறப்புஞ் சொன்னேன்.

வகையான தொன்றுமூ வாயிரத்தில் வடிவான சரக்குரண் டாயி ரத்தில், தொகையான ஆயிரமா மெண்ணூரப்பா சூக்ஷமா மாயிரத்து அன்னூருகுந், தகையான ஆயிரத்து இருநூறப்பா தப்பாது தொண் ணூறு வைந்துநூறும், பகையான அறுநூறு மூன்றுகாண்டம் பரி வான தன்னூற்று முன்னூருமே. 620

முன்னூறிருநூற் றன்பதுமா மொழிந்தோ மெண்பதறுபதுமாய்
தந்நூலன்பது முப்பதுமாய்த் தாக்கிபதினுல் முகிந்ததுவே
இன்னூலறுநூர் முனிரிஷிக ளென்னைவணங்கி கேட்டபின்பு
நன்னூல்தருவோ மொருத்தருக்கும் நயந்துகேட்டால் கொடுக்காதே.

## பாபிகளுக்கு நூலீயவேண்டா மென்பது.

ஆகபாவிபூமியிலே யனேகமுண்டுசண்டாளர்
வாகவணங்கிகுடுவென்று வாழ்த்திபிறரோடாசைசொல்வான்
ஏகமடையானிரக்கமல்லா னிடும்பருண்டுநூல்கொடுத்தால்
போகபாவமெத்தவரும் பொருளையீயாருத்தலுண்டோ. 622

## நூல்கொடுக்கப் புத்தி.

ஈயுமிரக்கம்பஞ்சமுத மியல்பாமறிவுசாஸ்திரங்கள்
பாயுஞ்சரித்தல்நடையிருத்தல் படிக்குமேற்கும்நூலிருந்தால்
நோயுந்தோஷம்வாருது நொடியில்முறைகள்தெரிந்துகொள்வான்
தாயும்வாய்க்குமுன்னிற்பாள் தறுகாதொழில்கள்பலித்திடுமே. 623

பலிக்கும்வாதவயித்தியமும் பாருமெண்ணூற்றிருமூலர்
பொலிக்கும்போகர்சட்டமுனி புகழுங்கொங்கணர்கருவூர்
கொலிக்குங்கோரக்கர்மச்சமுனி கூறும்ரோமறிடக்காடர்
வலிக்குமழுகண்ணர்கமல வியாக்ரமறவாலுஞ்சுந்தரவாதமிதே. 624

இதுதான்அறுநூற்ருயிரத்துக் கெளிதாம்வயித்தியமிச்சூத்திரம்
பொதுவாமடையர்க்கீயாதே பொல்லாநரகில்வீழ்வார்கள்

சதிராய்க்குணமும்பஞ்சபூத தயவுமிரக்கமுள்ளோர்க்கு
கதியாம்நூல்களீவதென்று வேதமுறையுமறிந்துநல்கே. 625

கண்டேமனதுபொருளாசை காமக்கள்ளங்குருநிந்தை
வண்டர்தமக்குப்பொருளீந்தால் வருகும்பாவந்தொலையாது
பண்டேயுள்ளசிவஞானம் பற்றிவந்துவயித்தியன்முன்
தொண்டேசெய்துநூலாசை தொடர்ந்தோர்க்கீந்தால்தோஷமில்லை.

## வாசியோகப் புத்தி.

இல்லந்தன்னிலிருந்தாலே யிகமும்பரமுமுறவல்லோ
வல்லசாஸ்திரம்பார்ப்போர்க்கு வாசிவருகும்புருவமையம்
வெல்லுமட்டுமுள்ளடங்கி வெளிபோம்நாளும்விடுகாமல்
அல்லும்பகலுஞ்சிவாயவசி அவ்வாசிவாயவாவெனவே. 627

வானோர்முனிகள்ரிஷிகள்சித்தர் மறைத்தவாசியடக்கமதை
நானேஅறுநூர்கடாசியிலே நன்றாய்வெளியாய்ச்சொல்லிவிட்டேன்
போனார்மாந்தருட்புகுந்தால் பொலியுமமிர்தந்தேன்போலே
ஊனேயுடலில்நோயுமில்லை உற்றகுருவாலறிவாயே. 628

## நூல் சூஸ்திரங்கள்.

அறிவுகுருவுக்கெட்டாது ஆடித்தேடிக்கிடந்தாலும்
பிறியும்வாசியுள்ளடங்கும் பெரியோர்நாமேதிரியுமென்பார்
குறியுங்குணமுமன்புகண்டால் கோடிக்கொன்றுசொல்வார்கள்
செறியுஞ்சிலநாளருகிருத்தித் திடமாமனதைக்கண்டபின்பே. 629

பின்புசொல்வார்பூரணத்தில் பிலக்கும்வாசிநூல்தனையும்
நம்பிநூல்களுள்ளதெல்லாம் நலமாய்ப்பாருமெனத்தருவார்
அன்பாமாயிரத்திருநூற்றி லழகாஞ்சூஸ்திரமிருபதுண்டு
முன்பாம்வயித்தியமறுநூற்கு முயர்ந்தநூலுமிதுவாமே. 630

சொன்னார்பெரியோரிந்நூலில் துடியாஞ்சூஸ்திரமறுநூறும்
அன்னேதமக்குஅரனரு மன்பாயுரைத்தபடிமுறைபோல்
இன்னூல்முனிவரகஸ்தியரு மியம்பும்வடநூலிதுவாமே
மின்னேதமக்குவிந்நூலை மொழிந்தார்முனிவர்முற்றிதுவே. 631

அகஸ்தியர் வயித்தியகாண்டம்

பாண்டுவைப்பு 600

முற்றிற்று